பக்கங்கள்: முப்பத்திரண்டு + 8

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை (10.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 226


02
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்


17
வாக்களிப்பு எமது உரிமை


25
இந்தியாவின் கூட்டு மஹிந்தவை அதிர வைத்ததா?


27
இதய நோய்ச் சிகிச்சையில் யாழ். ஆஸ்பத்திரி முன்னேற்றம்

# கூட்டமைப்பின் இணக்க ஆவணத்துடன் தெரிவுக்குழு பிரேரணை சபைக்கு வரும்

## அதனை ஐ.தே.கவும் ஆதரிக்கும்

கொழும்பு, ஜூலை 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்திவரும் பேச்சுக்களில் ஏற்படும் இணக்கத்தின் அடிப்படையில் தயாராகும் ஆவணத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இத்தகைய செயற்பாட்டை அரசு முன்னெடுக்குமாயின், நாடாளுமன்றத்தில் அந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராக இருக்கிறது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளு மன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணையை கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்க இருந்தது அரசு தரப்பு.

ஆனால் அது நடைபெறவில்லை. இப்போது அந்த முடிவை அரசும் பிற்போட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்த விவகா

(31 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம்பொக்ஸ், நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தார். (ஓ)

# குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் பஸில் நேரில் ஆராய்வார்

## ஒரு வாரம் இங்கு தங்கியிருந்து அவர் முன்னெடுப்பார்

யாழ்ப்பாணம், ஜூலை 10

குடாநாட்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதேச செயலகங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்யவிருக்கிறார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் ஒருவார காலம் இங்கு தங்கியிருந்து இந்தப் பணியை முன்னெடுக்க இருக்கிறார்.

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்கள், மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,

(31 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் லியம் பொக்ஸ்

கொழும்பு, ஜூலை 10

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர்லியம் பொக்ஸ் நேற்று கொழும்பு வந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் அவர் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இரு நாட்டு உறவுகள் தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் விரிவாக ஆராயப்

(31 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களைத் திரட்டிப் படையினர் ஜெயபுரத்தில் நேற்று நடத்திய பேரணி

## கலந்துகொண்டவர்கள் குமுறல், கொதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

பூநகரியில் வீடுகளில் இருந்த பொதுமக்கள் படையினரால் அழைத்து வரப்பட்டு, சனல் 4 தொலைக் காட்சிக்கு எதிராக பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

பூநகரிக்கு அமைச்சர் ஒருவர் வந்துள்ளார். உங்களைச் சந்திக்க விரும்புகிறார் எனத் தெரிவித்து பொது மக்களை பூநகரிப் படையினர் அழைத்து வந்தனர். பின்னர் பஸ்கள் மூலம் ஜெயபுரம் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு பேரணி நடத்தப்பட்டது.(31 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, தட்டுவன்கொட்டிக்கு

# பிரசாரத்துக்கு சென்ற கூட்டமைப்பு வேட்பாளருக்கு அனுமதி இல்லை

## திருப்பி அனுப்பினர் படையினர்

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி, தட்டுவன் கொட்டிப் பகுதிக்கு தேர் தல் பிரசார நடவடிக்கைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கனகரட்ணம் விநாயகமூர்த்தி (ரஞ்சன்)

(31 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் விடயத்தில் ஜெயலலிதா 'நடிப்பு'; ஆனால் தமிழக மீனவர் அத்துமீறினால் மௌனம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கைத் தமிழர்களின் ஜனநாயக உரிமையில் அக்கறை கொண்டவர் போல் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

அதேசமயம் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து வடக்கு மீனவர்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதைத் தடுக்க அவர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் மீன்பிடி நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன.

## யாழ். நகரில் இடம்பெற்ற நிகழ்வில் மீன்பிடி அமைச்சர்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் யாழ். மாவட்ட சம்மேளனத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

(31 ஆம் பக்கம் பார்க்க)

நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி யாழ்ப்பாணம்
021 222 0033 - 021 222 0044
Metro Engineering (Pvt) Ltd




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளி, முல்லை மாவட்டங்களில் இடிமின்னல், மழைக்கான 30 வீதம் சாத்தியம் உள்ளதுடன் ஏனைய மாவட்டங்களில் தெளிவான வெப்பகாலநிலை காணப்படலாம்.

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை பு யாழ்ப்பாணம்
ஆடி 08, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6911.98↓
மிலங்கா(MPI) 6386.97↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2.4Bn
பங்குகளின் அளவு(No.) 91.41Mn
வியாபாரம்(No.) 17600
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சீலின்சிங் 1200.00
ஜெ எல் மொறிசன் 4000.00
கொன்வீனியன் பூட் லங்கா 345.00
எம்எப் 721.00
குட் கோப் 1240.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எஸ் எம் பி லீசிங் 0.40
லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் 10.20
வலிபிள் பினான்ஸ் 45.10
றிச்சாட் பீறிஸ் எக்ஸ்போட்ஸ் 40.00
குய்ஜெ 160.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# 'நவாலிப் படுகொலை' நினைவு நிகழ்வில் கண்ணீருடன் கலந்துகொண்ட உறவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் விமானத் தாக்குதலில் பலியான உறவுகளை நினைவு கூரும் வழிபாட்டில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு கண்ணீர் சிந்தி அழுத காட்சி நேற்று அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரையும் மனதுருக வைத்தது.

கடந்த 09.07.1995 இல் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயம் மீதான தாக்குதலில் 147 பேர் ஸ்தலத்தில் உடல் சிதறிப் பலியானதுடன் 313 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் 17ஆம் ஆண்டு நினைவுதின வழிபாடு நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலய பங்குத் தந்தை வண. எஸ். ஜோதிநாதன் தலைமையில் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றது.

கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என நூற்றுக்கணக்கான சொந்தங்கள் தமது உறவுகளை நினைத்து கண்ணீர் சிந்தி வழிபாடுகளில் பங்கேற்றனர்.

இளைப்பாறிய ஆசிரியை 'நவாலியூர் நாயகி' திருமதி மேரிநாயகி மரியதாஸ் படுகொலை தொடர்பாக உறவுகளின் உள்ளங்களை நினைவு கூர்ந்து பாடிய பாடல் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது.

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் பகுதியில் பலபகுதிகளின் ஊடாக மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 09.07.1995 இல் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தங்கியிருந்த வேளை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலியானவர்களின் உறவுகள் இந்த நினைவு நிகழ்வில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

இந்தத் தாக்குதலில் பலியான உறவுகளுக்காக சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் நடைபெற்றவழிபாட்டினைத் தொடர்ந்து ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தில் பங்குத் தந்தை வண. எஸ். ஜோதிநாதன் மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாட்டினைத் தொடக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஏனைய உறவினர்கள் தமது உறவுகளை நினைந்து மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்தனர்.

மேற்படி ஆலய தாக்குதலின் போது வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நவாலியூர் செல்வி ஹேமலதா செல்வராஜா, சில்லையூர் பிலிப்புப்பிள்ளை கபிரியேல் பிள்ளை ஆகிய இரு கிராம அலுவலர்கள் சேவையின் போது உயிர் நீத்தனர்.

இந்தத் தாக்குதலில் 14 பாடசாலை மாணவர்களும் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-302)

## இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 10

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் இடம்பெறவுள்ளமையால் இன்று சில இடங்களில் மின்தடை அமுலில் இருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த).

# காரைநகரிலிருந்து கொழும்புக்கு தினமும் பஸ்சேவை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

காரைநகரிலிருந்து கொழும்புக்கு சேவையினை மேற்கொள்வதற்கென காரைநகர் பஸ் டிப்போவுக்கு இரண்டு பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் போக்குவரத்து அமைச்சரைச் சந்தித்து கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்த பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காரைநகர் பஸ் டிப்போவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இந்த பஸ்களை பார்வையிட்டதுடன் இந்த சேவை குறித்து கேட்டறிந்து கொண்டார். காரைநகரிலிருந்து நாள்தோறும் கொழும்புக்கு இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இந்த பஸ்களில் பயணிக்க விரும்புகிறவர்கள் காரைநகர் பஸ் டிப்போவுடன் தொடர்பு கொண்டு பயண அனுமதியினை பெறமுடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் பஸ் டிப்போவுக்கு மேலும் நான்கு பஸ்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(த)

# கூட்டமைப்பின் வலி. மேற்கு வேட்பாளர் வீடு மீது தாக்குதல்

## வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 10

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைபின் வேட்பாளரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக குறித்த வேட்பாளர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வலி. மேற்குப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் என்ற வேட்பாளரின் வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



மூன்றாவது நாளாகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் வீடுகள் மீது இவ்வாறு அடுத்தடுத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை நடத்தப்பட்ட இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

குறித்த வேட்பாளரது வீட்டுக்கு அதிகாலை சென்ற இனந்தெரியாத நபர்கள் தாம் கொண்டு சென்ற கழிவு ஓயிலை வீட்டின் முன்பக்கச் சுவரில் ஊற்றியுள்ளனர். அத்துடன் கண்ணாடிப் போத்தல்களையும் ஜன்னல் கண்ணாடிகள் மீது வீசி எறிந்தமையால் அவை நொருங்கியுள்ளன.

சத்தம் கேட்டு வீட்டிலிருந்தவர்கள் மின் விளக்குகளை ஒளிரச் செய்தபோது தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதிகாலை 2.30 மணிக்கு சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர். சம்பவம் பற்றி ஐங்கரனிடம் வாக்கு மூலம் பெற்றுச் சென்றனர். 4 மணிக்கு மீண்டும் அந்த இடத்துக்குச் சென்ற வட்டுக்கோட்டைப் பொலிஸார் வேட்பாளரிடம் வாக்கு மூலம் பெறவேண்டும் எனக் கூறி அவரிடமும் வாக்குமூலத்தைப் பதிவு செய்துகொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வேட்பாளர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை முறைப்பாட்டினை பதிவு செய்தார். பொலிஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-4-15-86)

# நிகழ்வுகள்

## விளையாட்டு விழா

அளவெட்டி, ஜூலை 10

அளவெட்டி முற்போக்கு முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அளவெட்டி றோ.க.த.க. பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத் தலைவர் மா. வடிவழகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். சுகுமாரும் கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பப் பிள்ளைக் கல்வி அபிவிருத்தி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். குகநேசனும் கலந்துகொள்வர். (ஐ-36)

## தொழில்நுட்ப நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

சி.சிவசன் எழுதிய 'தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ. கணேசராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட கணினி விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் இயூன் சாள்ஸ் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். தீவக வலய சேவைக்கால ஆலோசகர் நா. அம்பிகைபாகன் மதிப்பீட்டுரையாற்றுவார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவருக்கு ஓய்வூதியம், காப்புறுதித் திட்டம் பாதுகாப்புக்காக செய்மதி தொழில்நுட்பம்

## யாழ். வந்த அமைச்சர் ராஜித அறிவிப்பு



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நேற்றைய நிகழ்வில் கிராமிய மட்ட மீனவர் சமுதாயத்துக்கான உதவித் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு மீன்பிடிவலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அமைச்சர் பஸில் வலைகளை வழங்குவதையும் அருகில் அமைச்சர்கள் ராஜித, டக்ளஸ் மற்றும் ஆளுநர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

யாழ்பாணம், ஜூலை 10

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் மற்றும் காப்புறுதித் திட்டங்கள் என்பன அறிமுகப் படுத்தப்படவுள்ளன. அத்துடன் ரி.எம்.எஸ். மற்றும் செய்மதி தொழில்நுட்பம் ஊடாக மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள, மீன்பிடி, நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். கிராமிய கடற்றொழிலாளர் அமைப்புக்களின் மாவட்ட சம்மேளனத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீங்கள் 100 ரூபா செலுத்தி இந்தச் சம்மேளனத்தில் இணைந்து கொள்வதன் மூலம் அதிகளவான பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டத்தின் மூலமாக ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரையிலான பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். கடலிலோ அல்லது தரையிலோ மரணம் நிகழ்ந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கடலில் மீன்பிடிக்கச் சென்றதிலிருந்து கரைதிரும்பும் வரையிலான காலப்பகுதியில் காணாமற் போனால் மாதம் 7 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும். அவர்களது பிள்ளைகள் யாராவது கல்வியைத் தொடர்வார்களாக இருந்தால் 15 வயது வரை மாதாந்தம் ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் மூலமாக மாதாந்தம் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும். மீனவர் இறந்தால் அவரது துணைவிக்கு 78 வயது வரை அந்தக் கொடுப்பனவு, வழங்கப்படும். மேலும் வீடில்லாத மீனவக் குடும்பங்களுக்கு வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

### மீனவருக்கு கடன் திட்டம்

இலங்கையில் ஆழ் கடல் மீன்பிடியை விருத்தி செய்யும் பொருட்டு இலங்கை வங்கியுடன் இணைந்து கடன் திட்டம் வழங்கவுள்ளோம். பெரிய படகுக் கொள்வனவுக்கு இந்தக் கடன் திட்டம் உதவியாக இருக்கும்.

மேலும் எமது மீனவர்கள் கடலிலே நீண்டகாலம் தங்கியிருந்து சில வேளைகளில் இயற்கையின் சீற்றத்துக்கு ஆளாகியும் வெறும்கையுடன் கரை திரும்புகின்றனர். இவற்றை இல்லாமல் செய்வதற்காக ரி.எம்.எஸ். மற்றும் செய்மதி ஊடாக கடல் எல்லைகள் மற்றும் மீன் உள்ள இடங்களை இனங்காணும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதன் மூலம் காலநிலை ஆபத்துக்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியும். மற்றும் ஏதாவது ஆபத்தில் சிக்கியிருந்தால் மத்திய நிலையத்தின் உதவியையும் இதனூடாகப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக வடக்கில் மீனவர்களுக்கு இருந்த தடைகள் எல்லாம் நீக்கப்பட்டுள்ளன.

ஜப்பானின் அனுசரணையுடன் கடலட்டை வளர்ப்பு இங்கு ஊக்குவிக்கப்படவுள்ளது. வடபகுதிக் கடலில் கடற்தாவரங்களின் வளர்ப்புக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளது. கடல் சங்கு வளர்ப்பு நடவடிக்கையும் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு. சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஒ-15-313)

# உதவிப் பொருள்கள் கிடைக்கும் என்று வந்தோர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

உதவிப் பொருள்கள் வழங்குவதாகக் கூறி எம்மை வரவழைத்து வந்து இறுதியில் ஏமாற்றி விட்டனர் என்று நேற்றைய நிகழ்வுக்கு வந்த மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் யாழ். மாவட்ட சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு திரும்பிய மக்களே இவ்வாறு கூறினர்.

கட்டைக்காடு, பளை, வல்வெட்டித்துறை, குடத்தனை, நாவாந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல கடற்றொழில் சங்கங்களின் உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்தச் சங்கங்கள் தமக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்படும் என்று கூறியே அழைத்து வந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன் தொலைதூரத்திலிருந்து உதவி கிடைக்கும் என்று நம்பி வந்து கடைசியில் அமைச்சர்களின் உரைகளைக் கேட்டதுதான் மிச்சம் என்றனர் அந்த மக்கள். (ஒ-15-313)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி கிணற்றுமூடி திருட்டு

அளவெட்டி, ஜூலை 10

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் உள்ள கிணற்றின் இரும்பு மூடிகள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் இந்தச் சம்பவம் குறித்து தெல்லிப்பழைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டாரின் வயர்களும் ஏற்கனவே திருடப்பட்டிருந்தன.

இந்தப் பகுதியில் மீள்குடியமர்வு துரிதமாக நடைபெறுவதால், மக்களோடு மக்களாகத் திரியும் திருடர்களே இந்தக் கைவரிசையில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. (ஐ-36)

# வடமராட்சி கிழக்கு சங்கத்துக்கு ரூ. 30 லட்சம் பெறுமதியான லொறி

## வடமாகாண ஆளுநர் வழங்குகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனைக்கென 30 லட்சம் ரூபா பெறுமதியான லொறி ஒன்று வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு இதுவரைகாலமும் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு வாகன வசதிகள் இல்லாமையால் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக இந்தச் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து 30 லட்சம் ரூபா பெறுமதியான லொறி ஒன்று வடமாகாண ஆளுநரினால் சங்கத்துக்கு வழங்கப்படவுள்ளது. இந்த லொறியை சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். ராமச்சந்திரனிடம் வடமாகாண ஆளுநர் கையளிக்கவுள்ளார்.

மேலும் கடந்த மாதம் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து அந்தச் சங்கத்துக்கு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-311)

# வல்வையில் அமைச்சர் டிலான்

வடமராட்சி, ஜூலை 10

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா நேற்று சனிக்கிழமை நண்பகல் வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்து மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார்.

நண்பகல் 12 மணியளவில் வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கும் பிற்பகல் 2.30 மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மாணவர்களுக்கும் அமைச்சரினால் இலவசமாக புத்தகப் பைகள், கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் அமைச்சரால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த இரு நிகழ்விலும் அமைச்சர் உரையாற்றினார்.

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் 8 பாடசாலைகளைச் சேர்ந்த 2, 424 மாணவர்களுக்கு அமைச்சினால் பாடசாலை உபகரணம் வழங்கும் திட்டத்துக்கு முதற்கட்டமாக இவ்விரு பாடசாலைக்கும் நேற்றைய தினம் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

எஞ்சிய 6 பாடசாலை மாணவர்களுக்கு விரைவில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-200)

# தெல்லிப்பழையில் ஆறு மாத காலத்தில் 24,659 பேர் சிகிச்சை

அளவெட்டி, ஜூலை 10

தெல்லிப்பழை விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் இயங்கும் ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் சிகிச்சை பெற்றவர்கள் தொகை 24,659 என பதிவாகியுள்ளது.

இது கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளதையே காட்டுகிறது.

இங்கு கிளினிக்குக்கு வரும் நோயாளிகளின் தொகையும் அதிகரித்துக் கொண்டு செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. பற் சிகிச்சைப் பிரிவிலும் [illegible]

[illegible]

# விண்ணப்பித்து 7 நாள்களில் தேசிய அடையாள அட்டை

## 'கபே' அமைப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேசிய அடையாள அட்டைகளை உடனடியாகப் பெற்றுக் கொடுக்க வசதியாக 'கபே' அமைப்பு நடமாடும் சேவைகளை ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றன.

இந்த மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையானோர் தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பது இனங்காணப்பட்டது.

இந்நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராம மட்டத்தில் இந்த நடமாடும் சேவைக்ளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

விண்ணபித்து 7 நாள்களில் அடையாள அட்டைகளைப் பெறக் கூடியவகையில் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு வாக்களிப்புக்கு வசதியாக இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக 'கபே'யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் தங்கியுள்ள இந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



பாரதி பதிப்பகத்தில் முகாமையாளராகப் பணிபுரிந்த

**கந்தசாமி ஐயர்**
**முத்துக்குமாரசாமி (கிளாக்கர்)**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் பாரதி பதிப்பகத்தினருக்கும் மற்றும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கும்

**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
424, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

(ஸ்/1583)

## நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் எழுதுநராக கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-207)

## தேவை

1) கணக்காய்வாளர் (Auditor, பெண்)
வயது எல்லை - 25-40 வரை
2) ரெலிக்கிளார்க் (TELE CLERK) வயது- 25-35

மேற்படி பதவிகளுக்கு 2 வருடத்துக்கு குறையாதமுன் அனுபவச் சான்றிதழுடன் தொடர்பு கொள்ளவும்.

★ கவர்ச்சி கரமான சம்பளத்துடன் EPF, ETF வசதிகளும் வழங்கப்படும்.

தொடர்பு- 0214922922, 0214591372

## ஓரியண்டல் அக்கூரியம் (மல்ரி பாம் சென்ரர்)

வளர்ப்பு கலர் மீன் வகைகள், நவீன வகையான மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்புக் குருவிகள், நாய்க்குட்டி இனங்கள், செல்லப் பிராணிகள், பூக் கன்றுகள், பூஞ்சாடிகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

## Multy Travels



யாழ்→கொழும்பு வான்சேவை
மற்றும் உள்ளூர் வான்சேவை,
திருமண சேவை,
சுற்றுலா பிரயாணங்கள் என்பவற்றிற்கு
சகல வசதிகளுடன் கூடிய AC & Non AC

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
0217912997, 0754985400, 0759880000

# ஆறாத் துயரில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
12 ★ 12 ★ 1960



இறப்பு
16 ★ 07 ★ 2005

திருமதி **பாலையா சிவபாக்கியம்** (சித்திரா)
திதி.தசமி (10.07.2011)

ஆண்டுகள் ஆறு ஆனாலும் எம் அம்மாவே
உங்கள் அன்பு அழகு முகம் அழியாதம்மா
உங்கள் பிள்ளைகள் சிறப்போடும் வளமோடும்
வாழ எமக்கு ஒளி ஏற்றிய தெய்வமே
உங்கள் நெஞ்சத்து ஆசைகள் நிறைவேறிய
இவ்வாண்டு உங்கள் நெஞ்சம் இனிக்கும் அம்மா
என்றும் உங்கள் நினைவோடு வாழ்வோம்.

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

என்றும் நினைவில்
கணவன், பிள்ளைகள்,
மருமகன்.

(1584)

## English Personal Class

O/L க்கு உட்பட்ட மாணவர்களுக்கு தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 0778530925

## FINANCIAL SPONSORSHIP

ஐரோப்பிய நாடுகளில் கல்வி கற்பதற்கு SPONSORSHIP பிரச்சினையா ? உடன் தொடர்புகொள்ளுங்கள்:

**0714 550055**

COLOMBO BUSINESS COLLEGE
79-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052

## WEDDING CAKE

சகல மங்களகரமான கொண்டாட்டங்களுக்கும் திருமண வைபவங்களுக்கும் **Rich Cake, (Wedding Cake) Order** க்கு தரமான முறையில் செய்து கொடுக்கப்படும். ஓடர்கள் முற்கூட்டியே பதிவு செய்ய வேண்டும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி-
செல்வி. தி.திருமலர், 'திருமனோ- வாசா', வட்டுக் தெற்கு, வட்டுக்கோட்டை.
T.P-0779184190

## வேலைக்கு ஆள் தேவை

கொழும்பில் கணக்கு வேலை செய்வதற்கு ஆள் தேவை, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்

தொடர்பு- 0771807672

## காணி விற்பனைக்கு

நீர்வேலி குறுக்கு றோட்டிற்கு தெற்குப் பக்கமாக காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்திற்கு அருகில் றோட்டிலிருந்து நான்காவது காணி (4 பரப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779202315

## வேலையாள்கள் தேவை

சேவிஸ் வேலை, மெக்கானிக் வேலை அலுவலக வேலை தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
சந்நிதி முருகன் வேக் ஷொப்
241, பருத்தித்துறை வீதி, யாழ் வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்.
தொ.பே. 0212228076

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயிலும் வரையான கட்டணம் 5000/- By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0776751649

## மணமகன் தேவை

லண்டனில் வசிக்கும் கணவனை இழந்த 40 வயது பெண்ணுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு- 0778494917

## கடைகள் - வாடகை/குத்தகை

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள இரண்டு கடைகளும் (551 A, 551B) வாடகை/குத்தகைக்கு விடப்படும்.(More Suitabe for Net Cafe/Children Games Zone).
T.P:0215105100, 0777323156, 0777570141

# மரண அறிவித்தல்

## திருமதி அல்பிரட் நிர்மலா (பவா)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிரட் நிர்மலா (முன்னாள் ஆசிரியர், சென். தோமஸ் கல்லூரி, கொழும்பு) கடந்த 04.07.2011 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்ராஜா - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அருட்பணி அல்பிரட் சின்னையாவின் (இளைப்பாறிய அங்கிலிக்கன் திருச்சபை குரு) அன்பு மனைவியும் றேச்சல், ஏபேல் ஆகியோரின் பாசமிகு தாயும் ராணி, புஷ்பம், அன்ரன் செல்வரட்ணம் (பெரியண்ணை, மெக்கானிக்), அரியரட்ணம் (சின்னண்ணை, மெக்கானிக்) ஆகியோரின் சகோதரியும் ரவி, சஞ்சு ஆகியோரின் பாசமிகு மாமியும் இம்மானுவேல், எட்வின், சமாயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (11.07.2011) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வரட்ணம் (பெரியண்ணை, மெக்கானிக்), அரியரெட்ணம் (சின்னண்ணை, மெக்கானிக்)
சகோதரர்கள்.

இல.26, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(5693)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
16.03.1927



மறைவு
10.06.2011

ஆனைக்கோட்டையூர்
**அமரர் பொன்னையா நவரட்ணம் (NAVAM)**
(முன்னாள் சாரதி, யாழ். புடைவை நெசாவாளர், கூ.ச. விளாவெளி அருள் முருகன் கிறேசர் அலுவலர்)

எங்கள் இல்வாழ்வுக்கு நல்வழிகாட்டிய எங்களின் அன்புத் தெய்வம் நீங்கள் எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டு சென்று விட்டீர். எமது குடும்பத் தலைவரின்(பேரன்) திடீர் மறைவு செய்தி கேட்டு உடன் உதவிய அனைத்து அன்புள்ளவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அமரர் ர.பஞ்சலிங்கம்
திருமதி ப.புஸ்பராணி (மகள்)
ப.இன்பராஜ்
ப.ஜெயசுதன்

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு

(1580)


# ஹீரோ, கென்டன் காட்சியறை

HERO CYCLES
KENTON





சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ. கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672





(49)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிவத்தம்பி நாமம் என்றும் துலங்கும்

ஈழத்தின் தமிழ்ப்புலமையின் தற்காலத் தலைமகன் பேராசான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி எங்களை விட்டுப் பிரிந்து விட்டார். தாங்க முடியாத இழப்பு. எனினும் தமது அரிய ஆராய்ச்சிகள் மூலம் அவர் தமிழ் அன்னைக்குச் சூட்டிய மகுடங்களும் நிர்மாணித்த மணிமண்டபங்களும் காலாதிகாலமாக ஒளிர்ந்து ஒளிவீசிக்கொண்டே அவரைத் தமிழ் மொழியில் மற்றும் நாடக வட்டகைகளில் நினைவூட்டிக் கொண்டிருக்கும். இன்னும் பல்லாண்டு காலத்துத் தமிழ் சந்ததியினர் மற்றும் சர்வதேச புலமையாளர் மத்தியில் வாழ்ந்து கொண்டே இருப்பார். ஈழத் தமிழர்களின் புலமையின் அடையாளமாகச் சுடர்விடுவார்.

தமிழ்மொழியின் இலக்கண, இலக்கியங்களின் ஆழ அகலத்தை நுண்ணியதாக அளந்து, பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்து தமிழர் வாழும் இடங்கள் எல்லாம் தாமும் தமது மாணவர்கள் ஊடாகவும் அளவிடற்கரிய, ஒப்பற்ற பணிபுரிந்த பேராசான் அவர்.

ஆங்கிலத்தில் நிறைந்த புலமையாளராக விளங்கிய அவர் பல பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களில் வருகை விரிவுரையாளராகப் பணிபுரிந்து பிறமொழி அறிஞர்களுக்குத் தமிழை ஊட்டிய வகையில் தமிழை உலகளாவிய மட்டத்தில் வளர்த்த பெருமைக்கு உரியவர்.

அத்தோடு எமது நாட்டின் சகோதர மொழியான சிங்களத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றவராதலால் தமிழ் நாடக வடிவங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தியவர்.

அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் மிகவும் பிரசித்தமானவை. அவற்றினூடு தமிழின் பெருமையைச் சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு சென்றதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு.

தமிழ்மொழியில் புதிய சொற்களை இயற்றியதில் அவர் மிகவும் காத்திரமான பங்களிப்பை நல்கினார். புதிய பிறமொழிச் சொற்களுக்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்து பொழிவு நிறைந்த பதங்களை எடுத்தாண்டு புதுமை படைத்தவர்.

அவரின் தமிழ்ப்புலமையை மதித்து தமிழக அரசு அவருக்கு வி.க. விருது வழங்கிக் கௌரவித்தது. கடந்த வருடம் இதே மாதத்தில் - சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் - நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆராய்ச்சி அமர்வுக்கான தலைமைப் பொறுப்பை வழங்கி தமிழகத்தால் மதிப்பளிக்கப்பட்டவர்.

தமிழ்மொழியையும் அதன் பெருமையையும் சமூக விஞ்ஞானப் பார்வையில் திறனாய்வு செய்து வழங்கியவரும் அவரே.

தமது இருப்பு நிலைக்குக் காரணமான யாழ்ப்பாண சமூக உருவாக்கம் குறித்து ஆய்வு செய்து பலராலும் பாராட்டப் பெற்றவர். அது மட்டுமன்றி தமிழ் மக்கள் எதிர்நோக்கிய வாழ்வியல் பிரச்சினைகளை யதார்த்தமாகவும் தர்க்கரீதியாகவும் மதிப்பீடு செய்த சிறப்புக்கும் உரியவர்.

அவரது ஆற்றல்கள் பல்லினப்பட்டவை. சங்க இலக்கியம் முதற்கொண்டு இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் வரை, பரந்த அறிவும் புலமையும் கொண்டவர். நாவல், சிறுகதை, கவிதை, புதுக்கவிதை, சினிமா, பத்திரிகையியல், அரசியல், பொருளாதாரம், சமூகவியல், நுண்கலைகள் என்று பல்வேறு துறைகளிலும் அரிய நூல்களை இயற்றி வழங்கியவர்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் - வேற்று மொழி மற்றும் பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழர்கள் - தங்களின் இன அடையாளங்களான மொழி, கலை, பண்பாடு மற்றும் விழுமியங்களை அழித்துவிடாமல் இருப்பதில், அதீத அக்கறை காட்டியவர். அதன் பொருட்டு சுவிற்ஸர்லாந்தை மையமாகக் கொண்டு செயற்படும் அனைத்துலக தமிழ்க் கலை நிறுவகத்தை உருவாக்கினார். மாறிவரும் உலகுக்கு ஏற்றவகையில் ஆளுமை மிக்க ஆசிரியர்களையும் விவேகம் மிகுந்த மாணவர்களையும் உருவாக்க உழைத்தவர். அத்தோடு வேற்று நாட்டு மக்களும் தமிழரின் மொழி, பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ளச் செய்வதில் ஈடுபாடு காட்ட வைப்பதற்கு அவர் பெரும்பாடு பட்டார்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது இவரது இடத்தை நிரப்ப இன்னொருவர் பிறப்பதற்குப் பல காலம் செல்லும் அளவுக்கு, அவரது அறிவுத் திறன் நீண்டு நெடிந்து, பொங்கிப் பிரவகித்துப் பாய்ந்தது. அவருக்கு நிகர் அவர் மட்டுமே என்று துணிந்து கூறுமளவுக்கு அவரது புலமையும் ஆற்றலும் பொலிந்து விளங்கின.

இவர் பெரும் புலமையாளர் மட்டுமல்லர். பெரும் கலைஞருமாவார். நாடக எழுத்தாளர், இயக்குநர், நடிகர் என்ற பல்வகைத் திறமையாளரும் ஆவார். தமிழ்க் கிராமங்களில் பாரம்பரிய கலைச்சொத்தாக விளங்கிய நாட்டுக் கூத்தை மீள்உருவாக்கம் செய்வதில் பேராசிரியர் வித்தியானந்தனோடு தோளோடு தோள் நின்று உழைத்தவர்.

சமுதாயத்தின் பொதுநலன்களுக்காகத் தமது அறிவையும் ஆற்றலையும் அர்ப்பணிப்புடன் பயன்படுத்தியவர். அதனால் அவர் மகத்தான மனிதராகத் துலங்கினார். பொதுவுடைமை நோக்கில் அவர் தமது சமூகப் பார்வையை அமைத்திருந்தமையும் நோக்கற்பாலது.

கல்வி, ஆராய்ச்சி, நாடகம், நுண்கலைகளில் அதிக ஈடுபாடு காட்டிய அவர், சிறந்த சமூகத் தொண்டனாகவும்செயற்பட்டார். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவராக, மிகுந்த இடர்காலத்தில் துடிப்புடன் செயலாற்றியமை பசுமை நினைவுகளாக மனத்திரையில் ஓடுகின்றது.

ஈழத்தமிழினத்தின் தனித்துவமான புலமையாளன் பேராசிரியர் சிவத்தம்பிக்கு தமிழ் மக்கள் சார்பில், எங்கள் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். தமிழ் உள்ளவரை அவரது பெயர் நிலைத்திருக்கும்.

# கச்சதீவு அந்தோனியார் ஆலயம் யாழ். மறைமாவட்டத்துக்கு உரியது

## செய்தியாளர்களுக்கு யாழ். ஆயர் விளக்கம்

கொழும்புத்துறை, ஜூலை 10

அரசியல் ரீதியாக கச்சதீவு யாருக்கு உரியது என்பதில் இலங்கையும் இந்தியாவும் வாதப்பிரதிவாதங்களை முன்வைக்கின்றன. அது அரசியல் அதிகாரக் கோட்பாட்டுநிலை சார்ந்தது. ஆனால் சமய ரீதியில் கச்சதீவிலுள்ள அந்தோனியார் ஆலயம் யாழ். மறை மாவட்ட ஆயர் இல்லத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவருகின்றது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும் என ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வந்து ஆயரைச் சந்தித்த ஊடகவியலாளர் கச்சதீவு யாருக்குச் சொந்தமானது என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே யாழ். ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் தொடர்ந்து இந்தக்கேள்விக்கு விளக்கமளிக்கையில்,

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது தமிழ் நாட்டின் சிவகங்கை ஆயர் மற்றும் அருட் தந்தையர்கள் ஆகியோருக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லம் விடுக்கும் அழைப்பை அடுத்தே அவர்கள் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம். அவர்களின் ஒத்துழைப்புடன் எமது நிர்வாகத்தில் திருவிழா நடைபெற்று வருகிறது.

வரலாற்று ரீதியில் ஆன்மீக அடிப்படையில் கச்சதீவுப் பிரதேசத்திலுள்ள அந்தோனியார் ஆலயம் யாழ். ஆயரின் நிர்வாகத்தில் இயங்குவதால் அந்தப்பிரதேசம் இலங்கைக்கு உரியது என்று இலங்கை அரசு உதாரணம் காட்டுகிறது என்றார்.

(த-135)

# கனடாத் தமிழ் வானொலி நடத்தும் நட்சத்திரக் கலை விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கனடாத் தமிழ் வானொலியின் வருடாந்த நட்சத்திரக் கலைவிழா நேற்றும், இன்றும் கனடாவில் புலம்பெயர் மக்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெறுகிறது.

1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனடாத் தமிழ் வானொலி, வானொலி ஒலிபரப்புடன் மட்டுமல்லாது கனேடியத் தமிழ் சமூகத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும், தமிழ்த் தேசியப் பற்றுணர்வின் வெளிப்பாட்டுக்கும் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்கும் களம் அமைத்துக் கொடுத்து வருகின்றது. இந்த வானொலியினால் 2005 ஆம் ஆண்டிலிருந்து நட்சத்திர விழா ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நட்சத்திரக் கலைவிழாவில் தமிழர் கலை, பண்பாட்டு, கலைவடிவங்கள் முதன்மைபெறும். கலை நிகழ்வுகள், விளையாட்டுக்கள், வணிகச் சாவடிகள் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இந்த நட்சத்திரக் கலைவிழா இடம் பெற்று வருகிறது.

கிளித்தட்டு, கயிறு இழுத்தல், வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டியடித்தல், சிலம்பாட்டம் என்று மண் மணம் கமழும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தாயகத்தின் கிராமிய வாழ்வின் அடையாளமாக அழகிய குடிலும், குடில்சார் சூழலும் காட்சிப்படுத்தலாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இளைய தலைமுறையின் கைப்பணிக் கண்காட்சியும், முதியோர் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுவருகின்றன.

மேலும் வானொலியின் இணையத்தள முகவரியான www.ctr24.com மூலம் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கமுடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-15)

# வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கு கொரியாவில் வேலைவாய்ப்புக்கள்

## இப்படி உறுதியளிக்கிறார் அமைச்சர் டிலான்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை- கொரியா ஒப்பந்தம் மூலம் வட பகுதித் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு அதிகளவு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க உள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏற்பாட்டில் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெற்ற கொரிய வேலைவாய்ப்புப் பற்றி இளைஞர் யுவதிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை- கொரிய ஒப்பந்தம் மூலம் இந்தமுறை வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பகுதிகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு அதிகளவு கொரிய வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஜனாதிபதி இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றார்.

கடந்த 8 வருடங்களாக இந்த வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. ஆனால் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு இது கிடைக்கவில்லை. துரதிஷ்டவசமான சம்பவங்களாலும், அசம்பாவிதங்களாலும் இந்த வாய்ப்புகளை நீங்கள் இழந்திருந்தீர்கள்.

ஆனால் தற்பொழுது இன, மத வேறுபாடு இன்றி நாம் ஒருமித்து, ஒன்றுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஏனைய மாவட்ட இளைஞர், யுவதிகளோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் திறமையானவர்கள், புத்திசாலிகள், எதையும் வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்கள். அவர்களுக்குக் கொரிய மொழியை படித்து அதில் சித்தியடைவது கடினமானது அல்ல. யாழ். இளைஞர்களின் திறமை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது- என்றார்.

இந்த நிகழ்வில் வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சைச் சேர்ந்த தரங்க கம்லத், யாழ். வேலைவாய்ப்பு பணியகப் பொறுப்பதிகாரி எஸ்.கோடீஸ்வரன் மற்றும் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர் .

(த-319)

# சிவத்தமிழ்ச் செல்வியின் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 10

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் முன்னாள் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் மூன்றாவது குருபூசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து உருவச்சிலை வழிபாடும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து, நினைவுப் பேருரையைபேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். அத்துடன் திருமுறை மலர் வெளியீடும் இடம்பெறும்.

(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

3 - XXXX இலக்க மொறிஸ் மைனர் ரக கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771794847, 0775531424.

## விற்பனைக்கு

மிகவும் நல்லநிலையில் உள்ள HONDA CD 125 T Benly JO XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 0666067 மெகானிக் தெய்வம்
077 4082318 ஆரியகுளம் சந்தி.

## புலமைப்பரிசில் மாணவருக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள 2010இல் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கிளையில் வைப்புச் செய்துள்ள தகுதியுடைய மாணவர்கள் தமது கணக்குப் புத்தகங்களுடன் வங்கியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வங்கியின் முகாமையாளர் அறிவித்துள்ளார். (313)

## வீடு விற்பனைக்கு

இல.64, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணத்திலுள்ள பரப்பு 1.05 குளி கொண்ட காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு.
(5 அறை, Kitchen, Attach Bath Room)
தொடர்பு-
பன்னீர் மாஸ்ரர் (0776028888, 0777246583)

## ஆள்கள் தேவை


பளைப் பிரதேசத்தில் உள்ள எலக்ரிக்கல் ஸ்தாபனத்துக்கு முகாமையாளரும், விற்பனையாளரும் தேவை. பளை, அதனை அண்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 8924947, 077 5413663. (5684)

## பணிப்பெண் தேவை

கைதடியில் வீட்டுவேலைக்கும், குழந்தை பராமரிப்புக்கும் பெண் தேவை.
தொடர்புகளுக்கு:- - 0772224913

## சிறிய வீடு வாடகைக்கு

2 அல்லது 3 அங்கத்தவருடைய சிறிய குடும்பம் தங்குவதற்கு ஒரு அறை, ஒரு சாலை, குசினி, நீர், மின்சார வசதியுடன் நல்லூரில் நல்ல சூழலில் வீடு வாடகைக்கு உள்ளது.
தொடர்பு: 077 8006382, 021 4914542 (6623)




BELARUS
Vitebsk State Medical University
PHILIPPINES
NEPAL



SPOT
Admissions
&
Seminar

ஜூலை 14 மு.ப. 9 மணி
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
ஜூலை 14 பி.ப. 2 மணி
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
ஜூலை 15 மு.ப. 9 மணி
யாழ் மத்திய கல்லூரி
ஜூலை 16 மு.ப. 9 மணி
உடுவில் மகளிர் கல்லூரி

Degrees are recognised world wide including Sri Lanka Medical Council, General Medical Council (UK), ECFMG-USA & WHO.

O/L, A/L, மற்றும் பெறுபேறு எதிர்பார்க்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Conducted by Pathe Academy Officials for Studunts
Hotline : 0773 017 883

PATHE ACADEMY The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department.
111-1/2, Maya Avenue, Kirulapone, Colombo- 06
Tel :0773 017 883, 2502012 , Fax-94-11-5377751
www.patheacademy.org

## இனி இல்லை நெஞ்சுவலி!!!

இருதய நோயாளிகள் நெஞ்சுவலி இன்றி எதிர்காலத்தில் சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்து இரத்தவோட்டத்தை சீர்படுத்தும் பக்கவிளைவுகள் இல்லை. சுகமான எதிர்காலம் உறுதியானது.




எமது ஏனைய சிகிச்சைகள்
* புற்றுநோய் கவனிப்பு
* ஈரல் பிரச்சினைகள்
* மூட்டு, முதுகுவலி
* புறொஸ்ரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மன அழுத்தம்
* இருமல் & சளி
* படுக்கைப்புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு




FAIR PHARMA (PVT) LTD
Sponsored by
(ஆயுர்வேத மருத்துவம்)
Level 5 / East Tower / 1C,
World Trade Centre,
Colombo 01.
0094 115 517 897,
5 551 879, 5 558 442.
Fax: 5 517 756
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
BOI APPROVED & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

இலவச ஆலோசனைகளுக்கு
தினசரி வைத்திய சேவைக்கு உலக வர்த்தக மையம்
வெளிஇடங்களில் மாதாந்த சேவை – ஜூன்
திகதி & இடங்கள்

18 ஆம் திகதி பருத்தித்துறை
18 ஆம் திகதி வல்வெட்டித்துறை
19 ஆம் திகதி யாழ்ப்பாணம்
21 ஆம் திகதி அநுராதபுரம்
21 ஆம் திகதி வத்தளை
22 ஆம் திகதி வெல்லம்பிட்டி
23 ஆம் திகதி பலப்பிட்டிய
24 ஆம் திகதி மல்வானை
25 ஆம் திகதி அளுத்கம
26 ஆம் திகதி நுவரெலியா

## C | S | E
COLOMBO STOCK EXCHANGE

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக் குழுவில் ஒரு அங்கத்தவராக...

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, இலங்கையில் பங்குச்சந்தைச் செயற்பாடுகளுக்கான அடிக்கட்டுமான வசதியினை ஏற்படுத்திப் பிணையங்களின் பரிமாற்றங்களை நெறிப்படுத்தி முறைமைப்படுத்துகின்றது. எமது நோக்கு, சொத்து மற்றும் பெறுமதி உருவாக்கத்துக்கான விருப்பத் தெரிவுகளில் முதன்மையான தெரிவாக அமைந்திருத்தல்.

எமது குழுவில் பொருத்தமான மனப்பாங்கினைக் கொண்ட சுறுசுறுப்பான புத்தாக்க முயற்சியுடைய ஒருவரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - யாழ்ப்பாணக் கிளையின் நிறைவேற்று அதிகாரியாக (Executive officer) இணைத்துக் கொள்ள நாம் விரும்புகின்றோம்.

**பொறுப்பளிக்கப்படும் கடமைகள்**

* பங்குச் சந்தை முதலீடுகள் தொடர்பான செயலமர்வுகளை (Seminars) ஒழுங்கமைத்தல்.
* பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மூலதனச் சந்தை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
* முதலீட்டாளர் மற்றும் பங்குதாரர் தொடர்பான வினாக்களுக்குப் பதிலளித்தல்.
* கிளை நிறுவனத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பங்களித்தல்.

**விண்ணப்பதாரியின் தகைமைகள்**

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவம் அல்லது சந்தைப்படுத்தல் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
* நிதித்துறை சார்ந்த நிறுவனத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
* தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாக அறிமுகப்படுத்தக் கூடிய (Presentation) திறமையினைக் கொண்டிருத்தல்.
* அடிப்படைக் கணினி அறிவினைக் (MS Office) கொண்டிருத்தல்.

*விண்ணப்பதாரர் 35 வயதுக்கு உட்பட்டவரும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.*

உங்கள் சுயவிவரக் கோவை (CV) ஆங்கில மொழியில் பூரணப் படுத்தப் பட்டிருப்பதுடன், இரண்டு உறவினர்கள் அல்லாத சிபார்சு செய்பவர்களின் பெயர் விவரங்களை உள்ளடக்கியதாக அமைவதுடன், ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**Head of Human Resource**
**Colombo Stock Exchange**
**Level 4, West Block, World Trade Center**
**Echelon Square, Colombo 01.**
**Email : vacancies@cse.lk**

(ச/1548)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் ஆறுமுகராசா



கோயிற்குடியிருப்பு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஆறுமுகராசா நேற்று (09.07.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, இராஜேஸ்வரி மற்றும் ஆனந்தேஸ்வரி (இந்தியா), கமலேஸ்வரி (சுவிஸ்), ஈஸ்வரி (பிரான்ஸ்) சர்வேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் துஷிவன், பிரியா, வித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமன், சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் கிஷாந், திஷானி, அஸ்வின், அயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா வீதி, சாவகச்சேரி. (1965) ஆ.துஷிவன் (மகன்).

### திருமதி சிவபாக்கியம் சுந்தரலிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சுந்தரலிங்கம் (07.07.2011) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து- சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் ஓய்வு பெற்ற இலிகிதர் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, விஜயலட்சுமி மற்றும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் யோகம்மா, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரதாபன் (லண்டன்), பிரமிளா (லண்டன்), பிரபாங்கன் (லண்டன்), பிரேமினி, பிரேமா, பிரபாலினி ஆகியோரின் பாசமிகு தாயும் விஜேந்திரன் (லண்டன்), பவானி (லண்டன்), மதிமோகன், ஆனந்தி (லண்டன்), ஜெகதீஸ்வரன், சதாளன் ஆகியோரின் அன்பு மாமியும் பைரவி, ஆரணன், மேதா, அதுரா, கணாதீபன், அட்சயா, அங்கணி, அச்சுதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

116/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை.
(5664) (38)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்திபாரம் இடப்பட்ட நிலையில் காரைநகர் பிரதேச சபை கட்டடம்

## இடநெருக்கடியுடன் வேறிடத்தில் பணிகள்

காரைநகர்,ஜூலை 10

காரைநகர் பிரதேச சபைக்கு இதுவரை புதிய கட்டடம் அமைக்கப்படாமையினால் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மிகவும் சிறிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதனால் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் பணி நிமித்தம் செல்லும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகருக்கான தனியான பிரதேச சபை கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட போதிலும் அதற்கு இதுவரை நிரந்தர கட்டடம் அமைக்கப்படவில்லை. இதனால் காரைநகர் வடக்கு உப அலுவலகத்தில் பிரதேச சபையின் தலைமைக் காரியாலம் நிறுவப்பட்டது.

நூலகத்திற்காக அமைக்கப்பட்ட மிகச் சிறிய கட்டடத்தில் பெருமளவான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். பொது மக்களும் தங்கள் தேவையை நிறைவேற்றத் தினமும் பிரதேச சபைக்கு வருவதுண்டு. இவ்வாறு வருபவர்களும் இடப் பற்றாக்குறையினால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் காரைநகர் பிரதேச சபைக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக வலந்தலைப் பகுதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டு அத்திபாரம் இடப்பட்ட நிலையில் கட்டடப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையால் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை எனப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதேச சபை ஊழியர்கள் கடமையாற்றுவதற்கும், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தெரிவாக உள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கூட்ட அமர்வுகளை நடத்துவதற்கும் கூடப் போதிய இடம் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே காரைநகர் பிரதேச சபைக்கான நிரந்தரக் கட்டடத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (கு-250)

# எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியமர்வுப் பணிகள்

## இன்று பதிவுகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை10

எழுதுமட்டுவாள் தெற்குப் பிரிவில் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் முதற்கட்டமாக இதற்கான பதிவுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எழுதுமட்டுவாழ் சந்தியில் இடம் பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை எழுதுமட்டுவாள் தெற்கு மீள்குடியமர்வு சங்கங்கள் மேற்கொண்டுள்ளது.

அந்தப் பகுதி மக்கள் தமது குடியிருப்புக் காணியின் உறுதி, குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டைகளுடன் வருகை தருமாறு எழுதுமட்டுவாழ் தெற்கு மீள்குடியமர்வுச் சங்கம் அறிவித்துள்ளது.

இப்பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ்கள் ஹலோரஸ்ட் நிறுவனத்தால் கடந்த மே மாதம் தென்மராட்சிப் பிரதேச செயலக்தில் கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் இந்தப் பகுதி விடுவிக்கப்படாதிருந்ததை அடுத்து சங்கத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து இதற்கான நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப்பகுதி மக்கள் கடந்த 2000ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த நிலையில் 11 வருடங்களின் பின்னர் மீள்குடியமரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எழுதுமட்டுவாழ் வடக்கு, கரம்பகம் ஒட்டுவெளி ஆகிய பகுதிகளில் வருட ஆரம்பத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-207)

# கொக்குவில் சின்னப்பர் ஆலயத்துக்கு மணிக்கோபுரம்

யாழ்ப்பாணம் கொக்குவில் தூய சின்னப்பர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவில் புதிய மணிக்கோபுரம் ஆலய வளாகத்துக்குள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போலந்துக்கான இலங்கையின் தூதுவர் அமரர் நியாரன்ஸ் பெல்வியின் சின்னையாவின் ஞாபகார்த்தமாக கடந்த மாதம் 26 ஆம் திகதி அவரது அன்னையார் திருமதி பிலோமினா தவமலர் சின்னையா மணிக்கோபுரத்தை திறந்து வைத்தார்.

பங்குத் தந்தை அருட்பணி சந்திரபோஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ. சிறில் வெளிநாட்டைச் சேர்ந்த பக்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-313)

## ஒற்றுமையுடன்...



தொடரும் பயணம்: ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தின சார்பில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற மீள்குடியேறும் முஸ்லிம் மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் கொழும்பு மாநகர முன்னாள் மேயரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ஹுசைன் முஹம்மத் மாணவி ஒருவருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குகிறார். (த-7)

# நெடுந்தீவுப் படகோட்டிகளுக்கு விரைவில் அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

அனுமதிப்பத்திரமற்ற படகோட்டிகளுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் படகுச் சேவைகளில் பணியாற்றும் படகோட்டிகள் தமக்குரிய படகோட்டிகளுக்கான அனுமதிப் பத்திரமின்றியே பணியை மேற்கொள்கின்றனர். அத்துடன் படகுகளில் ஏற்றக்கூடிய பயணிகளின் தொகை குறித்த அனுமதிப் பத்திரமும் சில படகுகளுக்கு வழங்கப்படவில்லை.

நெடுந்தீவுச் சேவையில் உள்ள படகுகளுக்கு இந்த அனுமதிப்பத்திரங்கள் இன்மையால் பயணிகளை ஏற்றிச் செல்வதில் சிறு சிரமங்கள் இருப்பதாக இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

விரைவில் படகோட்டிகளும் படகுகளில் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கும் அனுமதிப் பத்திரங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# கசூரினா கடற்கரைப் பகுதியில் எல்லை நிர்ணயிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை10

காரைநகர் கசூரினா கடற்கரையை எல்லைக்குட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கசூரினா கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கசூரினாக் கடற்கரையில் உள்ள மீனவர்களின் வாடிகள், வள்ளங்கள், வலைகள் என்பனவற்றைச் சேதப்படுத்துவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் உள்ளிட்டோர் கசூரினா கடற்கரைக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கெண்டனர்.

கடற்றொழிலாளர்களின் வலைகள், வள்ளங்களை கசூரினா கடற்கரைக்கு வருவோர் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்காக எல்லை நிர்ணயம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கசூரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தைக்கான பாதையினை செப்பனிட்டு புனரமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-60)

# வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

பருத்தித்துறை, ஜூலை10

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் புத்தகப் பை, சப்பாத்து, மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கவிருக்கின்றது.

அண்மையில் மீளக்குடிமர்த்தப்பட்டு வெற்றிலைக்கேணி, கேவில், கட்டைக்காடு ஆகிய இடங்களிலுள்ள 300 மாணவர்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கவுள்ளன. (த-190)

# மீள்குடியமர்ந்த பகுதிகளுக்கு பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை10

மீள்குடியமர்த்தப்பட்ட தனங்களப்பு, கைதடி, நாவற்குழி பிரதேசங்களுக்கு போக்குவரத்துச் சீரின்மையால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

809 இலக்கப் பேருந்து கோயிலாக்கண்டியுடன் தனது சேவையை இடைநிறுத்துவதால் தனங்களப்புச் சந்திவரை தனது சேவையை நீடிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இடப்பெயர்வினால் இடைநிறுத்தப்பட்ட 805 இலக்கப் பேருந்து சேவையையும் மீண்டும் அதே வழியில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-313)

# அச்சுவேலி மகளிருக்கு காணி கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூலை10

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பயன்பாட்டுக்கு 5 பரப்புக் காணி 40 லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரிச் சமூகத்தின் நிதியுதவியுடன் கல்லூரிக்குக் கிழக்குப் புறமாக உள்ள காணியில் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட காணியின் எஞ்சிய பகுதியைக் கல்லூரியின்விளையாட்டுமைதான விஸ்தரிப்புக்கான கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளில் கல்லூரிச் சமூகம் ஈடுபட்டுள்ளது.

காணிக் கொள்வனவுக்கு நிதியுதவு வழங்கிய அனைத்துத் தரப்பினருக்கும் கல்லூரி அதிபர் அருட்தந்தை மரிய[illegible]ரியோ நன்றி தெரிவித்தார்.

# கந்தபுராணப் படிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை10

நீர்வேலி தெற்கு முருகையன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று மாதங்கள் நடைபெறும்.

இன்றைய தினம் காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள், அபிஷேகங்களுடன் கந்தபுராணப் படிப்பு ஆரம்பித்து வைக்கப்படும். (த-26)

# வடமராட்சி கிழக்கில் நாளை மேலும் 2 பாடசாலைகள் திறப்பு

பருத்தித்துறை,ஜூலை10

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மேலும் இரு பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளன.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளே மீண்டும் அதே இடங்களில் இயங்கவுள்ளன.

2006ஆம் ஆண்டு அப்பகுதிகளிலிருந்து மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்தததையடுத்து அப்பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. தற்போது அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்ததையடுத்து வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் அப்பாடசாலைகளை மீண்டும் அதே இடங்களில் இயங்க வைக்க நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

அவ்விரு பாடசாலைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளதாக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பொன்னையா தெரிவித்தார். (கு-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழையதெரு, உடையார் லேன், இலக்கம் 5 இல் உள்ள 3 பரப்புடன் கூடிய இரு வீடுகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு

1. இரண்டு அறைகள், வரவேற்பறை, சமையலறை, மலசலகூடம் மற்றும் ஏனைய வசதிகளுடன் உள்ளது.
2. மூன்று அறைகள், இரண்டு வரவேற்பறை, சமையலறை, மலசலகூடம் ஆகிய சகல வசதிகளுடன் உள்ளது

தொடர்புக்கு: 0778578506

## வேலைக்கு ஆள்தேவை

அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு பிள்ளையைப் பராமரிப்பதற்கும் சமையல் வேலை செய்வதற்குமென இரு பெண்பிள்ளைகள் தேவை

தொடர்பு: -0750324200

## உயிரூட்டுகின்றோம்



பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

**உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும். (கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)**

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின், மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)


## சாரதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 10

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய யாழ். வாசிக்கு யாழ்.நீதிமன்றம் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

ஸ்ரான்லி வீதியில் மேற்படி நகரைக் கைது செய்த பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா மது போதையில் வாகனம் செலுத்தியமைக்கு 6 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது சென்றமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதித்தார். (ம-9)


## ENGLISH LANGUAGE CLASSES

English Language Classes for Grades 6,7&8 Students to be Conducted With foundation in spoken English to help Students Step into the broader World of English.

Contact : 0773506503
or
No.16, Somasundaram Avenue,
Chundikuli,
Jaffna.

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (Chundukuly Girls College), பரியோவான் கல்லூரி (St.John's College Jaffna) களுக்கு அருகில் விதானையார் வீதி, சுண்டுக்குளியில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன், மா, பலா (மூன்று), தென்னை (பதினான்கு) மரங்களுடன் 3 பக்க மதிலுடன் உள்ள காணியில் விசாலமான வீடு (இரண்டு விறாந்தை, நாலு படுக்கை அறை) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவும்:
0776798618/ 0718667658

## EXPO PAVILION
### பதவி வெற்றிடம்

Expo Aviation (pvt) Ltd. நிறுவனத்தின் கீழ் இயங்கும் EXPO PAVILION HOTEL இல் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டி உள்ளது.

**உதவி முகாமையாளர்-Assistant Manager**

1. துடிப்பாக, பணிவாகவும் சிநேகமாகவும் பழகக் கூடியவராக இருத்தல்.
2. ஆங்கிலத்தில், சிங்களத்தில் உரையாடக் கூடிய தகைமை வரவேற்கத்தக்கது.
3. கணினி, கணக்கியல் அறிவு உடையவராக இருத்தல்.
4. முன் அனுபவம் மேலதிக தகைமையாகும்.
5. நேர்மை, நன்நடத்தை, நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல்.

**பராமரிப்பாளர்கள் -Room Boys**

1. சிநேகமாகவும், பணிவாகவும் பழகக்கூடியவராக இருத்தல் .
2. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
3. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் உரையாடக் கூடியவராக இருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
4. நேர்மை, நன்நடத்தை நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல்.

**உதவிச் சமையலாளர்- Assistant Cook**

1. இலங்கை, மேலைத் தேய சீன உணவுவகைகள், உடன் யாழ்ப்பாண உணவுவகைகளும் தயாரிக்கக் கூடியவராக இருத்தல்.
2. முன் அனுபவம் தேவை.
3. தங்கி நின்று வேலை செய்யக் கூடியவராக இருத்தல்.

**மேற் கூறிய தகைமைகள் உடையவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையை கீழ்க் கண்ட விலாசத்துக்கு 15 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கவும்**

முகாமையாளர்
Expo Aviation (pvt) Ltd.
40, Kandy Road,

(சி/1563)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சிவன், அம்மன் கோயிலுக்கு அருகாமையில் மணத்தரை ஒழுங்கையில் 6 அறைகள், 2 குளியல் அறைகளுடன் 10 க்கும் மேற் பட்ட வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் அல்லது களஞ்சியமாக பயன்படுத்துவதற்கு உகந்தது.

தொடர்பு: 0771807747

## மணமகன்தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1978இல் பிறந்த சதய நட்சத்திரம் மூன்று சுற்று கிரகபாவம்-70 B.Com படித்து அரச துறையில் சேவையாற்றும் மகளுக்கு படித்த மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு - 0770452612

## காணிவிற்பனை

கைதடியில் கண்டி வீதியில், அரசினர் வயோதிபர் இல்லம் "சாந்தி நிலைய" முன்பாக அமைந்த ஒழுங்கையில் (கண்டி வீதியில் இருந்து 100 யார் தூரத்தில்) 4¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0775440293

## வீடு வளவு விற்பனைக்கு

1 1/2 பரப்பில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடுவளவு விற்பனைக்கு.
(யாழ். மாநகர சபைக்குட்பட்டது)

தொடர்புக்கு: 0770760881

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை உருத்ரா மாவத்தையில் (4பேர்ச் காணி) வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. விலை 140 லட்சம். விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும் தரகர் வேண்டாம்.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்:
0771000041

## தேவை

### கன்ரர்
வாடகைக்குத் தேவை

தொடர்புக்கு: 0778996559

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, பல்கலைக்கழகத்துக்கு அருகில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 6 அறைகளைக் கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. புதிய வியாபார நிலையம் கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு: 112580118, 0777374423

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பிறேமா ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிவபாக்கியம் சுந்தரலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகமும், பாடசாலைச் சமூகமும்,
யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1948 | 2011 |
| 12 | 05 |
| 08 | 27 |

**அமரர் செல்வி இராசதுரை இராசமலர்**
(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
எடுத்துக்காட்டாக விளங்கிய அன்புத் தெய்வமே!
வாழும் காலம் வரை உங்கள் நினைவுகள்
எம்மனதை விட்டு நீங்காது.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்து உற்றார், உறவினர் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும், மற்றும் இறுதிக் கிரியைகளில் பங்கேற்று அஞ்சலி செலுத்தியோருக்கும், பத்திரிகை ஊடாக அஞ்சலி செலுத்தியோருக்கும், வேறும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(5647)
என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

## பிறிஜ் விற்பனைக்கு

சிறிது காலம் பாவித்த 6 அடி நீளம் உள்ள ம. பிறிஷர்கள் உடன் விற்பனைக்கு உண்டு. **விலை ரூபா 40,000/=**

தொடர்புக்கு: 0770452612

## மணமகன் தேவை

1973 உத்தரம் யாழ். இந்து கௌரவ குடும்பப் பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. அரச உத்தியோகம் விரும்பத்தக்கது. தொடர்பு -0750324200

## விற்பனைக்கு

HS-JI-தொடர் இலக்கமுடைய இரண்டு ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0776090926

## சமையல் ஆள் தேவை

முதலாளி ஒருவருக்கு தங்கி நின்று சமைத்துக் கொடுப்பதற்கு சமையல் ஆள் (ஆண்) தேவை

தொடர்பு:0775222818

## Royal Veterinary Hospital (Pvt)
### றோயல் கால்நடை வைத்தியசாலை (தனியார்)

தொலை பேசி- 0215202220

மேற்படி கால்நடை வைத்தியசாலை இல, 49, கூழாவடி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, ஆனைக்கோட்டைக்கும் இடையில்) இன்று (10.07.2011) ஞாயிறுக்கிழமை தனதுசேவையைஆரம்பிக்கவுள்ளது. காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை வருடத்தின் 365 நாள்களிலும் பின்வரும் சேவைகளை இங்கு பெற்றுக் கொள்ளலாம்:

- ★ பொது ஆலோசனை - General consultation
- ★ வைத்திய சேவை - Veterinary Medical Care
- ★ செல்லப்பிராணிகளுக்கான தடுப்பூசி வழங்கல் - Pet Vaccination
- ★ கோழிகளுக்கான தடுப்பு மருந்து வழங்கல் - Poultry Vaccination
- ★ சத்திரசிகிச்சை - Surgery
- ★ இலவச அடிப்படை ஆய்வுகூட சேவைகள் - Free Laboratory Service
- ★ வீடுகளுக்கான நேரடி வருகை - Home Visit
- ★ பண்ணை உருவாக்கல் மற்றும் முகாமைத்துவ ஆலோசனை வழங்கல் - Consultation on Farm Planning & Management
- ★ கீழ்படிந்து நடப்பதற்கான பயிற்சிகளை நாய்களுக்கு வழங்கல் - Obedient dog Training
- ★ நல்லின நாய்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான இலவச வழிகாட்டல் சேவை
- ★ வைத்தியத் தரவுகளைப் பேணும் வசதி - (Medical Record Maintenance)
- ★ விலங்குகளுக்கான மருந்தகம் - Veterinary Pharmacy
- ★ நாய்களுக்கான உணவு மற்றும் ஏனைய பொருள்கள் - Pet food & Accessories

மேற்படி சேவைகளை இல.71, பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியிலுள்ள றோயல் கால்நடை வைத்திய நிலையத்திலும் (திருநெல்வேலி சந்திக்கும் விவசாயப் பண்ணைக்கும் இடையில்) காலை 8 மணி முதல் மாலை 6.30 மணி வரை வருடத்தின் 365 நாள்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(தொலைபேசி இல- 0213207561)
(5640)

## நூல் வெளியீட்டு அரங்கு "தமிழ் இலக்கணத் தொகுப்பு"

A.K.கீர்த்திராஜன் B.A.(Hons)



இடம் :- நாவலர் கலாசார மண்டபம்
காலம் :- இன்று (10.07.2011)
ஞாயிறுக்கிழமை காலை 9.30 மணி

விழா ஏற்பாட்டுக்குழு
Navalar Education Center( N.E.C)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கரவெட்டியைச் சேர்ந்த பண்டிதர், சைவப்புலவர் பொ.கார்த்திகேசு- வள்ளியம்மை தம்பதிகளுக்கு 1932 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குச் சிவத்தம்பி என்ற பெயரைச் சூட்டியவர் யோகர் சுவாமிகள் என்பது குறிப்பிடத்தக்கது. யோகர் சுவாமியின் பக்தரான கார்த்திகேசுவை நல்லூரில் சந்தித்த யோகர் சுவாமி ''சிவத்தம்பி உன்ரை வீட்டை வந்திருக்கிறான், நீ கோயிலுக்குப் போக வேண்டாம். வீட்டை போ'' என்று கூறினாராம். நல்லூரில் இருந்து கரவெட்டிக்கு வந்த கார்த்திகேசு மகன் பிறந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து சிவத்தம்பி என்றே பெயரை வைத்தார்.

இறை ஆசி பெற்ற சிவத்தம்பி தமது ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும் இடை நிலைக் கல்வியைக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றார். அந்தக் காலத்தில் விக்னேஸ்வராக் கல்லூரியில் H.S.C வகுப்பு இல்லாமையால் கொழும்பு சாகிராக் கல்லூரியில் H.S.C படித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். சாகிராக் கல்லூரியிலே புகழ்பெற்ற ஆசிரியர்களிடம் தமிழ், வரலாறு முதலான பாடங்களைத் தாம் கற்ற வரலாற்றை அவர் அடிக்கடி எம்முடன் பகிர்ந்து கொள்வார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே புகழ்பெற்ற பேராசிரியர்களிடம் வரலாறு, தமிழ், பொருளியியல் முதலான பாடங்களைப் பயின்றார்.

பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன் முதலியோரிடம் தமிழைக் கற்ற சிவத்தம்பி எம்.ஏ பரீட்சையிலே தேறி எம்.ஏ. பட்டதாரியானார். பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் கைலாசபதியுடன் ஒன்றாகப் பயின்று நண்பரானார். கைலாசபதி இறக்கும் வரை இவருடன் இணைந்து தமது ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கைலாசபதியையும் சிவத்தம்பியையும் ஆய்வுலக இரட்டையர்கள் என்றும் விமர்சக இரட்டையர்கள் என்றும் அழைக்கும் வழக்கமும் இருந்தமை யாவரும் அறிந்ததே.

இங்கிலாந்திலே உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் தொம்சனின் வழிகாட்டலிலே தமிழ் நாடகம் பற்றிய ஆய்வைச் செய்து கலாநிதிப் பட்டம் பெற்ற பேராசிரியர் சிவத்தம்பி நாடக ஆய்வாளராக, நடிகராக, பல்கலைக் கழகங்களில் நாடகமும் அரங்கியலும் என்னும் பாட நெறியை அறிமுகப்படுத்தியவராகவும் விளங்கினார்.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'உடையாளர் மிடுக்கு' என்னும் நாடகத்திலே மாணவப் பருவத்திலே இவர் நடித்தமையைப் பாராட்டாத அறிஞர்களே இல்லையெனலாம். இலங்கையர்கோனின் 'விதானையார் வீட்டிலே' என்னும் வானொலி நாடகத்திலே விதானையாராக நடித்துப் புகழ்பெற்றவர்.

தமிழ் நாடகத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் ஆய்வு மூலம் இனங்காட்டிய பேராசிரியர் கா. சிவத்தம்பி புகழ்பெற்ற ஒரு நடிகர் என்பதை இன்றைய தலைமுறை அறியமாட்டாது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பல்பரிமாண ஆளுமைமிக்கவர். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் சிறப்பான பயிற்சியும் தேர்ச்சியும் உடைய பேராசிரியர் மூன்று மொழிகளிலும் நிறையவே எழுதியுள்ளார்.

ஆசிரியராக, நாடாளுமன்றச் சமகால மொழிபெயர்ப்பாளராக, பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்த சிவத்தம்பி ஈழத்தமிழர்களின் புலமை அடையாளமாக விளங்கினார்.

நாடாளுமன்றச் சமகால மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியபோது கொல்வின்ஆர்.டி சில்வா, என். எம். பெரரா, S.W.R.D. பண்டாரநாயக்கா, ஜி.ஜி. பொன்னம்பலம், S.J.V செல்வநாயகம் முதலானோரின் ஆங்கிலப் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பையும் பெற்றவர். அந்தச் சுவையான அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து மகிழ்ச்சி அடைவார்.

மொழி, இலக்கியம், இலக்கணம், பண்பாடு, விமர்சனம், நாடகம், சினிமா, சமூகவியல், ஊடகவியல் முதலான பல துறைகளிலும் தமது ஆழமான ஆளுமையை ஆய்வுகள் மூலம் நிறுவியவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய சங்ககாலத் திணைக்கோட்பாடு, தமிழ் நாடக வரலாறு, தொல்காப்பியக் கவிதை இயல், இலக்கணமும் சமூக உறவுகளும் முதலான பல ஆய்வுகளின் முதன் முயற்சியாளராகச் சிவத்தம்பி திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழி வழக்கிலே புதிய பல சொற்களை உருவாக்கிய பெருமை சிவத்தம்பிக்கு உரியது. செல்நெறி, உசாவல், பிராரம்பம் முதலான பல சொற்களை இவர் அறிமுகம் செய்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் சிவத்தம்பியின் ஆக்கங்கள் பற்றி முதுதத்துவமாணி, கலாநிதி (முனைவர்) பட்ட ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.

ஓர் ஆய்விலே அவர் புதிதாக அறிமுகப்படுத்திய சொற்களின்==== பட்டியலே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கையிலுள்ள பெரும்பாலான எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இந்தியாவிலுள்ள தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், டெல்கி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முதலான இடங்களிலே பணியாற்றியுள்ளார்.

அத்துடன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம், உப்சாலா பல்கலைக்கழகம், அமெரிக்கப் பல்கலைக்கழகம் முதலான உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களிலே பணியாற்றிய ஈழத்துத் தமிழறிஞர் என்ற பெருமை இவருக்கு உரியது.'

உலக இலக்கியப் பரவை, இந்திய இலக்கிய சமுத்திரம், தமிழ் இலக்கியக் கடல், ஈழத்து இலக்கிய ஓடை என்பவற்றிலே நீச்சலடித்துக் கரையேறிய எங்கள் மதிப்பார்ந்த பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பியிடம் கற்றோம், அவருடன் பணியாற்றினோம், அவருடன் பழகினோம் என்பவை தாம் எங்கள் பலமாகின்றன.

நாவலருக்குப் பின் தமிழகத்து அறிஞர்களாலும் பொதுமக்களாலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி இருவரையும் நாம் இழந்துவிட்டோம். அவர்களின் வாழ்வுத் தடமும், ஆய்வு வழியும் தொடர்வதாக. அவர்கள் நினைவுகள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். ✱

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா,**
தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

# தமிழ்த் தாயின் தவப்புதல்வனுக்கு...

தமிழ்த்தாய் தன் தவப்புதல்வனை இழந்து தவிக்கிறாள்.கரவையூர் தன் மகுடத்தில் ஒரு மாணிக்கத்தை இழந்து நிற்கிறது.சாகாவரம் பெற்ற சரித்திரப் படைப்புகளைத் தந்த ஒரு மகாநதி சாவெனும் சாகரத்தில் சங்கமித்துள்ளது. ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் தன் முடிவுரைக்கு முகம் கொடுக்கிறது. எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி பேரிடியாய் வீழ்ந்தது. இந்த இழப்பு ஜீரணிக்க முடியாதது. ஈடுசெய்ய முடியாதது.

கரவையூருக்கு ஒரு தனித்துவமான கல்விப் பாரம்பரியம் உண்டு. கரவையூர் உருவாக்கிய பல கல்விமான்கள் உலகம் முழுவதும் உள்ளனர். எங்கள் ஊரில் பிறந்ததால் இவர்களுக்குச் சிறப்பு. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இவர்களிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கிறார். இவரால் எங்கள் ஊர் இன்று உயர்ந்து நிற்கிறது. இன்று உலகெங்கிலுமுள்ள ஊடகங்களில் பேராசிரியரின் பெயர் குறிப்பிடப்படும்போது எங்கள் ஊரின் பெயரும் கூடவே உச்சரிக்கப்படுகிறது. அந்த மகாநதியின் ஊற்று இந்த ஊரில் உற்பத்தியானதில் நாம் பெருமையடைகிறோம்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தன்னைப் பெற்று வளர்த்த மண்ணின் மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். கரவையூரின் வாழ்வியலை அந்த மண் வாசனையோடு யதார்த்தமாக, தத்ரூபமாகத் தனது படைப்புக்களில் சித்திரித்திருக்கிறார். உலகின் எத்தனையோ புகழ்பூத்த பல்கலைக்கழகங்களில் பணியாற்றி இருந்தாலும் தான் கரவையூரில் ஆரம்ப காலத்தில் கல்விகற்ற மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும், விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் மட்டற்ற மதிப்பை வைத்திருந்தார். தனது பல படைப்புகளில் அந்த பாசத்தைப் புடம்போட்டுக் காட்டியுள்ளார்.

அவர் கம்யூனிஸ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவராக இருந்தாலும் கரவையூர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வணங்கப்படும் தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார் . தனது ஓர் ஆக்கத்தில் சிதம்பரத்தில் நின்றாலும் சீர்காழியில் நின்றாலும் தச்சந்தோப்பின் நினைவுகள் நெஞ்சை நிறைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கரவை அபிவிருத்தி ஒன்றியம் சில வருடங்களுக்கு முன் கரவெட்டியின் வரலாற்றை, வாழ்வியலை, ஒரு நூலாக ஆவணப்படுத்த முடிவெடுத்தது. அந்த நூலை எழுத மிகப் பொருத்தமானவர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே என முடிவு செய்யப்பட்டது. [illegible] அவர் கொழும்பில் இருந்தார். யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தரைவழிப் போக்குவரத்து இல்லை. விமான, கப்பல் பயணங்களே இருந்தன. நான் அந்தக் காலப்பகுதியில் கடமை நிமித்தம் அடிக்கடி விமான மூலம் கொழும்புக்குச் சென்று வந்தேன். அவ்வேளையில் இந்த நூல் விடயமாகப் பேராசிரியரைச் சந்தித்து அவரைச் சம்மதிக்க வைக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விடயம் சம்பந்தமாக இரண்டு தடவைகள் பேராசிரியரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. என்னை அவருக்கு முன் அறிமுகமில்லை. இருந்தாலும் கரவெட்டியிலிருந்து வந்திருக்கிறேன் என்றதும் பல்லாண்டு காலம் பழகிய ஒருவரை வரவேற்பது போல் வரவேற்று உபசரித்தார். உலகப் புகழ்பெற்ற ஓர் உயர்ந்த அறிஞர் தன்னைப் பெற்று வளர்த்த மண்ணின் மீது வைத்திருந்த பாசத்தைப் பார்த்து மலைத்து நின்றேன். கரவெட்டியின் வரலாற்றை, வாழ்வியலை மடைதிறந்த வெள்ளம்போல் வர்ணித்தார். அந்த நடமாடும் பல்கலைக்கழகத்திடம் நான் பல விடயங்களைக் கற்றுக்கொண்டேன். கரவையூரைப்பற்றிப் பேசும்போது பாசம் , பக்தி, பரவசம் போன்ற உணர்வலைகளின் நர்த்தனத்தை அவரிடம் நான் கண்டேன். தான் பிறந்து வளர்ந்த மண்ணை இவ்வளவு தூரம் நேசித்த அவர் ஒரு மனிதர்குல மாணிக்கம்.

இறுதியாக நான் இவரைச் சந்தித்தபோது தனது இறுதிப்பயணத்திற்குத் தன்னைத் தயார்படுத்தியது போன்றே சில விடயங்களைக் குறிப்பிட்டார். சோனப்பில் தனது இறுதி யாத்திரை இடம்பெறவேண்டுமென்பதே தனது இறுதி ஆசை என்றும் ஆனால் அப் போதைய சூழலில் அது சாத்தியமாவது கடினம் என்பதால் தனது அஸ்தியின் ஒரு பகுதியை சோனப்பு மயானத்தில் தூவ வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டார். தான் பிறந்து வளர்ந்த மண்ணிலேயே தான் இறுதியில் சங்கமமாக வேண்டுமென விரும்பினார்.

கரவையூரைப் பொறுத்தவரை சோனப்பு என்பது வெறுமனே ஒரு மயானமல்ல. சந்ததி சந்ததியாக இந்த மக்களின் உணர்வுகளுடன் ஊறிப்போன ஒரு புனித பூமி. ஒவ்வொரு கரவையூரானும் தன் முடிவுரைக்கு இங்குதான் முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டும் என விரும்புகிறான். அந்த உப்புக்காற்றில் உலர்ந்து போவதில் அப்படியொரு சுகம்.

கரவையூர் பெற்றெடுத்த தமிழ்த் தலைவர் சிவசிதம்பரம் அவர்களது கடைசி ஆசைப்படி அவரது இறுதி யாத்திரையும் சோனப்பில்தான் இடம் பெற்றது. அப்போது தலைவரைப் பற்றியும் சோனப்பைப் பற்றியும் பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய பிரியாவிடைக் குறிப்பு என்றும் மறக்க முடியாதது. பல நூல்களில் மீள்பதிப்புச் செய்யப்பட்டது.

உலகில் எங்கு வாழ்ந்தாலும் எவ்வளவுதான் உயர்ந்தாலும் தன்னை உருவாக்கிய மண்ணை இறுதிமூச்சு வரை மறக்காது வாழ்ந்து அந்த மண்ணிலேயே சங்கமிக்கத் துடித்த மனிதர்குல மாணிக்கமே! கரவை மண்ணும் அதன் மக்களும் கண்ணீர் மல்க இறுதிவிடை தருகின்றனர். எங்கள் ஊரின் மதிப்பை உலகில் உயர்த்திய உத்தமரே சென்று வாருங்கள்.

தமிழ் இங்கு உள்ளவரை தரணியில் நிலைக்கும் உங்கள் திருநாமம். ✱

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் மடத்துக்கரை
**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்**
**பாலஸ்தாபன கும்பாபிஷேக**
**விஞ்ஞாபனம் - 2011**
**அம்பிகை அடியார்களே!**

ஸ்ரீ மத்தெக்ஷண கைலாயம் எனப் போற்றப்படும் ஈழவள நாட்டில் வட்பால் அமைந்துள்ள காரைநகரின் நுழைவாயிலில் வலந்தலைப் பதியில் ஆலமர தல விருட்சமாகக் கொண்டு தன்னை நாடிவரும் அடியார்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அருளை வாரி வழங்கிவரும் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு நிகழும் கர வருஷம் ஆனித்திங்கள் 25 ஆம் நாள் (2011.07.10) ஞாயிற்றுக்கிழமை தசமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய சுபநேரமாகிய காலை 7.05- 8.10 மணியளவில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. எனவே அம்பாள் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தைக் கண்டு களித்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அம்பாளின் ஆலயத்துக்குத் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் நிதி, பொருள் உதவி செய்ய விரும்பும் அடியார்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அமரர் பிரம்மஸ்ரீ சோ.குகனேசசர்மாவின் ஆசியுடன்
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள்
தலைமையில் நடைபெறும்.
சுபம்

பிரம்மஸ்ரீ சோ.குகனேசசர்மா,
சரவணபவானந்தசர்மா
(ஆதீன குருவும் நிர்வாகஸ்தரும்)
திரு.ந.குமாரசுவாமி குடும்பம்

(ச/1570)

## அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம் மாற்றி வைப்பதற்கு, கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம். (சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்)

**உடனே அழையுங்கள்:- 0774050936**

## STUDY & WORK IN

**New zeland / Australia / Poland / UK**
**Cyprus / Canada / Switzerland / Swedan**
**Germany / Scotland / Ireland**
**(Study + Work Permit + PR)**

- ✓ Courses :- Management, Computing, IT, Travel Tourism, Cookery, Beauty Culture & more than 100 Courses.
- ✓ Minimum Qualification :- ● 'O' Level ● No Need IELTS (நிபந்தனைகளுக்குட்பட்டது)
- ✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் அனைத்து விதமான VISAக்களும் செய்துதரப்படும்.
- ✓ Accomodation and Part Time Work Gurantee, Visa Gurantee for Genune Applicants

### Study MBBS/MD/ENGINEERING in
East Europe (UKRINE/RUSSIA/BELARUS/GEORGIA)

- ✓ SRI LANKA MEDICAL COUNCIL (SLMC)
- ✓ WORLD HEALTH ORGANIZATION (WHO)

Approved Universities
(Fees Start from USD 2400 Pa)

**Study MBBS & Engineering in CHINA**

Entry Qualification : A/L 3 Passes ➡ **Admission in Progress**

### Study in INDIA (New Delhi, Bangalore, Tamilnadu)

Admissions From Reputed Universities & Colleges
Courses :- (Fees Start from USD 1000 Pa)
Engineering, Medicine (MBBS, BDS, Pharmacy), Computing
Business Management, Accounting & Finance, Arts, IT
Entry Qualification : A/L 3 Passes

**SIEG INTERNATIONAL**
169, George R De Silva Mawatha,
Kotahena, Colombo-13. (opposite to McDonalds)
Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

## பஸ் விற்பனைக்கு




62 - XXXX இலக்கமுடைய றோசா பஸ் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0775799488
அ.மரியநாயகம் (றஞ்சன்),
வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறை

## இறைச்சிக்கோழி விற்பனை

கல்பேட், புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## Van for Sale

Dolphin Super G.L.PC - 8xxx LH 172, D/AC, 2001, Alloy wheels, Original Diesel, Long 4 Doors, First owner, Show Room Condition. **Tel: 0776613526**

## German Swiss மொழிகள்

German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. Embassy யில் கேட்கப்படும். A1 Certificate ஏற்றவாறு.
10, Palaly Road, Jaffna. 0771604823

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 168/4, முத்தமிழ் வீதி, கொட்டடியில் இரண்டு பரப்பு உறுதிக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0779007380, 0263204843**

Dreams come true
**Job Shop** கனவுகள் மெய்ப்படும்

சிறந்த வேலையில்லையா? தகுதியற்ற வேலையில் தவிக்கிறீர்களா? குறைந்த ஊதியம் என்ற குறையா? ஒரே தீர்வு! Job Shop உடன் இணையுங்கள் நவீன முறையில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட Resumes மூலம் இலங்கையில் சிறந்த நிறுவனங்களில் தகுதி வாய்ந்த வேலை. *அழையுங்கள். 0779829371.*

## விற்பனைக்கு

Panasonic MD 9000, MD 10,000 DVC 15 பாவித்த கமராக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779515187

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில், கோப்பாய் தெற்கில் மாதா கோயிலுக்கு அருகில் 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 021 7901915, 0776588091, 0770366543**

## தேவை

இரண்டு அல்லது மூன்று அறைகள் கொண்ட வீடு தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், அளவெட்டி ஆகிய இடங்களில் வாடகைக்குத் தேவை. திருத்த வேலைகள் ஏதும் இருந்தாலும் பரவாயில்லை.

**தொடர்பு: 0777307494**

## குத்தகைக்கு

ஆரியகுளம் சந்தி, புத்த விகாரைக்கு முன்பாக அரிவுப் பட்டறை குத்தகைக்குக் கொடுக்கப்படும். *0778175926.*



**சந்நிதிமுருகன் அன் ரவல்ஸ்**
- திருமண மற்றும்
- சுற்றுலாவுக்கான பஸ் சேவை

குளிரூட்டப்பட்ட திருமணக் கார்



Phone: 021 222 8076, 077 711 0199, 077 201 8275

241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் அருகில்)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள / அனுபவமற்ற ஆண் / பெண் இருபாலரும் தேவை. (அனுபவமுள்ளவர்களுக்கு நல்ல சம்பளம் வழங்கப்படும்)

**மிலேனியம் பேஷன் & பொம்பே பஸார்**
*இல.10, 11, மின்சார நிலைய வீதி,*
(மலாயன் கபே முன்பாக)
யாழ்ப்பாணம்.
**தொ.பே: 0212229399.**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 41 வயதுடைய விவாகரத்து பெற்று இருப்பவருக்கு மணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொ.பே: 0754166091

# VISA - வீசா
## Consultancy Service

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK***

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC**, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

சாவகச்சேரியில் A9 வீதிக்கு அண்மையில் 20 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

- முதலீட்டாளர்களுக்கு பொருத்தமான இடம்.
- தேவையேற்படின் பிரித்தும் கொடுக்கப்படும்.



தொடர்பு: 077 3526211, 011 3135438

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima No.1** புறொயிலர் கோழிக்குஞ்சுகள் **Prima** கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 14.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்வதி பாம் சென்ரர், தொண்டைமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593
- ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, அம்பாள்குளம், கிளிநொச்சி - 0776225944

**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944*

## முதலாம் ஆண்டு
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம்
13 . 02 . 1943



மறைவு
21 . 06 . 2010

*திருமதி சிவகுரு மகேஸ்வரி*
திதி: ஏகாதசி

எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (11.07.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், திருவாதிரை 2 ஆம் பாதம், செவ்வாய்த் தோசம் அற்ற, உயரம் 5'5", 1977 ஆம் ஆண்டு, கிரகபாவம் ல-8 மூன்று சுற்று 16¼, லண்டன் கணக்கியல் பட்டதாரி, லண்டனில் P.R. உள்ளவர். தகுந்த மணமகள் தேவை. லண்டன் P.R. or Student visa விரும்பத்தக்கது.

**தொடர்பு:** BALAN MARRIAGE SERVICE CENTRE
ADDRESS:-K.BALASUBRAMANIAM, ANTHIRAN LANE, NAVALY SOUTH, MANIPAY.
T.P-0779482312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி கிளிநொச்சி பேருந்து நிலையம்

கிளிநொச்சி,ஜூலை 10

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இன்மையால் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்களும் ஏனைய மாவட்டங்களில் இருந்து வரும் மக்களும் தமது போக்குவரத்துக்காக கிளிநொச்சி பேருந்து நிலையத்தையே பயன்படுத்துகின்றார்கள்.

தற்போது இந்தப் பேருந்து நிலையம் கிளிநொச்சிப் பொதுச் சந்தை முன்னர் இயங்கிய இடத்தில் இயங்கிவருகிறது.

கிளிநொச்சி பேருந்து நிலையம் இருக்கும் இடத்தில் நிழற் கூடாரங்களோ அல்லது பேருந்து நிலையக் கட்டடங்களோ எதுவுமே இல்லை.

மழை பெய்தால் இந்தப் பகுதி சேறும் சகதியுமாக உள்ளது. வெள்ளம் தேங்கும் இடமாகவும் காணப்படுகிறது. நிழல் குடைகள் இன்மையால் மக்கள் வெய்யிலில் நின்று துன்பப்படுவதாகவும் மழை பெய்தால் ஒதுங்க இடமின்றி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஏ-9 வீதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பேருந்து நிலையமாக இது காணப்படுகின்றது. இதனால் இந்தப் பகுதிக்கு பெருமளவான பயணிகள் தினமும் வந்து செல்கின்றார்கள்.

இதேவேளை- இந்தப் பகுதியில் மலசலகூட வசதிகள் எவையுமே இல்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் பயணிகள் பெரிதும் சிரமப்படுவதாகக் கூறுகின்றார்கள்.

பெரும் எண்ணிக்கையான பயணிகள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் கிளிநொச்சிப் பேருந்து நிலையத்துக்கு மலசலகூட வசதி, பயணிகள் தரித்து நிற்கக் கூடிய நிழற் கூடாரங்கள், கட்டடங்கள் போன்றவற்றை அமைத்து உதவுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-426)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வாகன இலக்கத் தகடுகளைப் பெறலாம்

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளின் ஒரு தொகுதி தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி, அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை மற்றும் பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) போன்றவற்றுடன் நேரில் சமுகம் தந்து இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற வாகன இலக்கங்கள் வருமாறு:

HV - 7616, QF - 2224, QA - 5837, JY - 4499, GA - 6562, GT - 4772, GA - 9921, JY - 6206, JH - 2974, HS - 7399, ND - 3029, GP - 7906, LA - 8634, JV - 5429, QG - 8306, QC - 0895, QE - 5505, HP - 2378, QG0071, GF0228, HA - 8802, QF - 6496, QE - 7386, GH - 8234, GY - 8105, QB - 1412, QC - 8036, GT - 4387, KA - 0249, JQ - 4643, HB - 6823, JM - 2795, LF - 6725, HX - 0551, ND - 2499, QD - 0437, QF - 0540, HX - 8765, JH - 8946, LB - 3418, QE - 3807, QB - 5706, KB - 3988, JD - 2749, QB - 2880, QB - 1582, QI - 5610, QD - 9734, QD - 1289, JL - 7010, GB - 3577, JR - 4196, GS - 8683, QJ - 0201, QG - 3101, HB - 9376, QB - 3007, NP - 4705, GU - 2313, QH - 4179, JA - 2926, GN - 9923, LF - 3484, GR - 5517, JS - 7264, GE - 0448, QB - 7994, QF - 5473, QB - 9838, QA - 4383.

# வவுனியாவில் குளங்கள் புனரமைப்பு

வவுனியா, ஜூலை 10

வவுனியா மாவட்டத்தில் பல குளங்களின் புனரமைப்பு, கட்டுமான வேலைகள் நடைபெறவுள்ளன. நீர்ப்பாசன, நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களம் இந்த வேலைகளைச் செய்யவுள்ளது.

பாவற்குளத்தின் வலது கரை பிரதான வாய்க்காலில் உள்ள சப்பாத்துப் பால திருத்த வேலை, இதே குளத்தின் வலது கரை பிரதான வாய்க்கால் திருத்த வேலை என்பன நடைபெறவுள்ளன.

முகத்தான் குளத்தின் முதலாவது கை வாய்க்கால் திருத்த வேலை, இதே குளத்தின் முதலாவது கை வாய்க்கால் வீதி திருத்த வேலை ஆகியனவும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-121)

# வருடாந்த பொங்கல்

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, நல்லூர் விளாத்திக் காடு வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த ஆலயம் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தது. (ம-406)

# பஸ் தரிப்பிடம் இன்மையால் பயணிகள் நெருக்கடியில்

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, செல்விபுரம் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் இன்மையால் இந்தக் கிராம மக்களும் இந்தக் கிராமத்துக்கு வந்து போகும் பயணிகளும் நாளாந்தம் சிரமப்பட்டு வருகின்றனர்.

கொளுத்தும் வெயில் காலத்திலும் கொட்டும் மழையிலும் இவர்கள் நிற்கமுடியாது மரங்களின் கீழ் ஒதுங்குகின்ற நிலை காணப்படுகின்றது.

அத்தோடு ஆசிரியர்களும் மாணவர்களும் இதனால் அவதிப்படுவதோடு நோயாளர்கள், முதியவர்கள் போன்றோரும் இதனால் சிரமமடைகின்றனர். எனவே உரியதரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு உதவுமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-406)

# பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமனம்பெறும் ஆசிரியர்கள் நகரப் புறத்தையே நாடுகின்றனர்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா

அக்கராயன், ஜூலை 10

பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் நகர்ப்புற பாடசாலைகளையே நாடுகின்றனர் என கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. செல்வராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு வருகை தந்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் மகாவித்தியாலயம் முக்கிய பாடசாலையாகும். இசுறு பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் இந்தப் பாடசாலையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

வலயப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் பூநகரி கோட்டப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது.

ஆகவே பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அந்தந்தப் பாடசாலையில் கடமையாற்றும் போது ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

பின்தங்கிய பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களின் உளவியலை பேணும் வகையிலும் நாம் செயற்படும் போதுதான் மாணவர்களின் கல்வியை ஆசிரியர்களினால் பேணமுடியும். - என்றார். (எ-410)

# ஓமந்தையில் வீதிகள் துரித கதியில் புனரமைப்பு

வவுனியா, ஜூலை 10

வவுனியா ஓமந்தை இராணுவ சோதனை நிலைய உள்ளக வீதிகள் செப்பனிடும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேருந்து செல்வதற்கும் தனியார், வாகனங்கள் செல்வதற்கும் இரு பாதைகள் உள்ளன. இவை மிகவும் மேசமான நிலையில் இருந்து வந்தன.

இந்த இரு பாதைகளும் செப்பனிடும் பணி நேற்றும் நேற்று முன்தினமும் துரிதமாக நடைபெற்றன. பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. (ம-421)





கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் திருக்குறள் மாநாடு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்டது. மூதறிஞர் கா.பொ. இரத்தினம் அரங்கில் இறுதி நாள் நிகழ்வாக திருவள்ளுவர் விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கௌரவிப்புப் பெற்றவர்கள் அமர்ந்துள்ளனர். திருக்குறள் பா ஓதல் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ஒருவருக்கு மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் பரிசில் வழங்குகிறார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study in UK Without IELTS**

2011 July 04 ம் திகதி அமுலுக்கு வந்த புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

பட்டதாரிகள் மற்றும் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் A / B தர சித்திகள் பெற்றவர்கள் University/Higher Educational Institute(HEI) இல் அனுமதி பெறுவதற்கு IELTS தேவையில்லை

July மற்றும் August / September Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

- இலவச IELTS வகுப்புகள்
- 4 வருட visa உத்தரவாதம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
- GCE(O/L) தகமை போதுமானது



**IELTS**
**GENERAL /ACADEMIC**
**Full Time & Part Time**
for Student Visa & Settlement Visa Applicant
புதிய வகுப்புகள் யாழ் மற்றும் கொழும்பு நகரில் தற்பொழுது ஆரம்பம்

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511 JAFFNA - 021 7538395**
**HOTLINE - 0117 555514 FAX - 0117 555517**

EXPONET Overseas Consultants (Group of Exponet (Pvt) Ltd.)

**Head Office** : 379 - 1/2, Galle Road, Colombo 06.
**Jaffna Branch** : 197,Arasady Road,Jaffna
(Between Kantharmadam Juction & Hindu Ladies College)
**London Branch** : 56, The Gardens, Harrow, Middlesex, HA1 4EY, UK.
**Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk**

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிக முள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு:
0777743334, 0773502612.

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் விற்பனைக்குண்டு. குறித்த தவணையில் மிருதங்கம் மற்றும் தோல் வாத்தியங்கள் அனைத்தும் மிகக் குறைந்த விலையில் திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
கே. கோவிந்தபிள்ளை,
192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு வீதியில் 2 பரப்புக் காணி வீட்டுக்குப் பின்புறமாக 10 அடி பாதையுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773583693

## ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஜோதிட நிலையம்

"பண்டித் ஆஞ்சனப்பா"

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர் கைரேகை,நாமநட்சத்திரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, உத்தியோகம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் ஒரு முறை இவரை சந்தித்து தீர்வு காணுங்கள்.

Room No:100,
GREEDY'S Hotel & Restaurant.
205, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்
T.P: 0772723004

**வீடு விற்பனைக்கு:** கோண்டாவில் டிப்போவுக்கு முன்புறம் 1985 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நல்ல நிலையிலுள்ள வீடு 3 பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0213211479
ஸ்ரீமுருகன் களஞ்சியம் கோட்றோட், மல்லாகம்.

## வீடு காணி விற்பனைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 1¾ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு:- சி.சி.நாதன், 16/3, விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P:0776146434

**எம்மினத்தின் நிலையை உணர்ந்து செயலாற்றும் அனைத்து வாக்காளப் பெருமக்களே! தபால் மூலம் வாக்களிக்கும் உத்தியோகத்தர்களே!**



*உள்ளூராட்சித் தேர்தல் - 2011*
**நல்லூர் பிரதேச சபை**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
*(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)*

**லயன் குமாரசாமி கதிர்காமநாதன் J.P**
**(சின்னமணி)**

உறுதியான தமிழ்த் தேசியம், ஊழலற்ற நிர்வாகம், நிலையான அபிவிருத்தி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு செயலாற்றுவதற்கு
வீட்டுச் சின்னத்துக்கு ☒ வாக்களித்து
விருப்பு வாக்கு இலக்கம் 4 இற்கும் ☒

**வாக்களித்து வெற்றியடையச் செய்வோம்.**

உரிமைக்கு: **வீடு** ☒
சேவைக்கு: 04

நண்பர்கள், ஆதரவாளர்கள்.

# மரண அறிவித்தல்

## காசிநாதர் கந்தையா சதாசிவம்



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நட்டுப்பாளி, கோவளத்தை வதிவிடமாகவும் தற்போது இல. 15,ராஜசிங்க வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட காசிநாதர் கந்தையா சதாசிவம் (முன்னாள் பிரபல வர்த்தகர், நாத்தாண்டியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு) 06.07.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காசிநாதர் கந்தையா (சாமி கந்தையா) ஆறுமுகம் -கனவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் நாத்தாண்டியா பிரபல வர்த்தகரும் முருகேசு அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற வைத்தியலிங்கம், காலஞ்சென்ற பாக்கியம் சோமசுந்தரம், காலஞ்சென்ற பொன்னம்பலம் (நவசிவாயம்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவசம்பு பாலாமணி மற்றும் பரஞ்சோதி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் குலதேவராஜா (உரிமையாளர்- TATA Wines, TATA Restaurant & TATA Transport (pvt) Ltd., வவுனியா), கிருஸ்ணமூர்த்தி (உரிமையாளர்- S.K.Agency, யாழ்ப்பாணம்), புஸ்பராஜன் (உரிமையாளர்- புஸ்பா டிரான்ஸ்போர்ட், பாட்டியாகம Tea Factory, கொழும்பு), அற்புததேவராஜா (உரிமையாளர்- அற்புதா Trading Company, பியர்ஸ் றேடர்ஸ், சிவசம்பு வைன்ஸ் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்), நந்தகுமார் (கனடா), உமாதேவி (கொழும்பு), புஸ்பாதேவி (கொழும்பு), சரோஜாதேவி (யாழ்ப்பாணம்), சந்திராதேவி (கனடா) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.15, இராஜசிங்க வீதி,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு.**

**தகவல்:**
**மனைவி,**
**பிள்ளைகள்.**

(5606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தின் எதிரொலி தேவாரம்

*''வள்ளுவன் தன்னை உலகினுக்கே- தந்து*
*வான்புகழ் கொண்டது தமிழ்நாடு-நெஞ்சை'*
*அள்ளும் சிலப்பதிகார மென்றோர்-மணி*
*யாரம்படைத்த தமிழ் நாடு''*

எனும் பாடலில் ''உள்ளம்கவர்'' இலக்கியமாகச் சிலப்பதிகாரத்தைச் சிறப்பித்துள்ளார் மகாகவி சுப்ரமணியபாரதியார். இந்த 'மணியார' சிலம்பு 'நற்றமிழ்வல்ல' ஞானசம்பந்தரது தேவாரத்திலும் செல்வாக்குச் செலுத்தி ஒலிக்கிறது.

சிலப்பதிகாரக் கதையின் கரு சங்க இலக்கியங்களில் இருந்துதான் பெறப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.'பேகன்' என்பவன் 'கண்ணகி' எனும் பெயரினையுடைய சொந்த மனைவியைப் பிரிந்து பரத்தையுடனிருந்ததாக அகநானூற்றில் ஒரு பாடல் உண்டு. நற்றிணையிலே 'ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலையறுத்த திருமா உண்ணி'' எனும் அடிகள் காணப்படுகின்றன. இவ்விரண்டையும் இணைத்து இளங்கோ அடிகள் சிலம்பை இயற்றியிருக்கவேண்டுமென்பர்.

*''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்*
*உரைசால் அடிகள் அருள மதுரைக்*
*கூல வாணிகர் சாத்தன் கேட்டனன்' [சிலம்பு.பதிகம்.87-89]*

எனும் அடிகள் மூலம் சாத்தனார் இளங்கோ அடிகளையே சிலப்பதிகாரத்தை இயற்றுப்படி கேட்டுக்கொண்டுள்ளமை தெரிகிறது. இளங்கோவின் சிலம்பும் சாத்தனாரின் மேகலையும் 'இரட்டைக்காப்பியம்' எனப்படுகின்றன. தமிழ் நாட்டில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் இவ்விரு காப்பியங்களும் எழுதப்பட்டிருக்கிறன. இரு காப்பியங்களிலும் ஞானசம்பந்தரது கவனத்திற்குரியதாகியது 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமே. சமணர்கள் பாரியதொரு செயற்பாட்டின் மூலம் தம்மைத் தமிழ் நாட்டில் பலப்படுத்த முயன்றமையால் அவர்கள் மீதே ஞானசம்மந்தரின் கவனம் அதிகம் சென்றது.

**இலக்கியக் காட்சி - 93**

தமிழ் நாட்டுக்கு வந்த சமணர்கள் ஆரம்பத்தில் வாழ்க்கை முறைகளில் அதிக கட்டுப்பாடுகளை விதித்து கடும் போக்கைக் காட்டியமையால் அக்கால மக்கள் வெறுப்பைக் காட்டினர். இதனால் சமணர்கள் தமது செயற்பாட்டில் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டி நேரிட்டது. இதன் வெளிப்பாடுதான் 'குறளுஞ் சிலம்பும்' எனலாம். திருவள்ளுவரும் தம்மை ஒரு சமணராக இனங்காட்டாமல் சமணத்துக்கு உயிர்ப்புக் கொடுத்தவர். உற்றுநோக்கிப் பார்த்தல் சிலம்புக்குக் குறள் இலக்கணமாகவும் சட்ட நூலாகவும் திகழ்திருக்கின்றமை தெரியவரும். இளங்கோ தம்மைச் சமண மதப் பற்றாளராகவோ பிறமத வெறுப்பாளராகவோ காட்டிக்கொள்ளாமல் பிற்காலத்தில் நாவலரால் ''செட்டிச்சியும் புறச்சமயத்தவளும்'' என்று தூற்றப்பட்ட கண்ணகியே 'உரைசால் பத்தினிக் குயர்ந்தோரேத்தலும்'(பதிகம்-56) என்று கூறியவாறு தெய்வமாக்கியவர்.

சமண சமயத்தவர்கள் தொடக்கத்தில் பெண்களை இழித்தும் ஒதுக்கியும் வந்ததனால் தமிழ்நாட்டுப் பெண்களின் எதிர்ப்பை அவர்கள் அதிகம் சம்பாதித்தமையை இளங்கோ அடிகள் அவதானித்திருப்பர். திராவிடர்களாகிய தமிழர்கள் பெண்களுக்கு முதன்மையளிப்பவர்கள் என்பதையும் இளங்கோவடிகள் அறியாமலில்லை. எனவே அவர்களுக்கு முதன்மை அளிப்பது போலக்காட்டினால் தான் தமிழ்நாட்டில் சமணம் நின்று நிலைக்குமென்று எண்ணி அதற்கான முயற்சியினை எடுத்தமை சிலம்பிலே தெரிகிறது.

சிலப்பதிகாரத்திலே காட்டப்படுகின்ற இந்துமத 'சக்திமூர்த்தங்கள்' பெரிதும் 'கோரவடிவம்' சார்ந்தனவாகவே உள்ளன. கொற்றவை ,பிடாரி, பத்திரகாளி, துர்க்கை என்பன பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகார 'வழக்குரைகாதை'யில் காணப்படுகின்றன. இத்தெய்வங்களிலும் பார்க்கக் கடுங்கோபங் கொண்டவளாகக் கண்ணகியை காட்டியுள்ளமை சிந்திக்க வைக்கிறது. இப்படி உருத்திர வடிவங்கொண்டு அடங்கியவள் போலக் காணப்பட்ட கண்ணகிக்கு சக்தியின் உயர் ஸ்தானத்தை சிலப்பதிகாரம் வழங்கியதால் ஞானசம்பந்தர் இறைவனை மாதொருபாகனாகப் பாடவேண்டி ஏற்பட்டிருக்கிறது. உயர்சக்தியான உமையிடமிருந்து ஞானப்பாலுண்டு 'தோடுடைய' என்று தொடங்கித்தான் ஞானசம்பந்தர் தமது போராட்டப் பணியை தொடங்கினார். சிலப்பதிகார வேட்டுவ வரியில் இளங்கோ கொற்றவையை

*'சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி*
*வலம்படு கொற்றத்து வாய் வாட்கொற்றவை'*
*[சிலம்பு.வேட்டுவவரி.63-64]*

என்று பாடியமையானது, ஞானசம்பந்தரை 'நிரை கழலரவஞ் சிலம்பொலியலம்பும்' என்று தொடங்கி திருக்கோணேச்சரப் பதிகத்தைப் பாடவைத்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகின்றது.

சிலப்பதிகாரத்தில் உள்ள புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்பனவற்றில் எமது ஆய்வுத் தாக்கத்திற்கு அடிப்படையானது வஞ்சிக்காண்டம். இதிலே இளங்கோவடிகள் சைவ சமயத்தைச் சேர்ந்தவனாகிய சேரன் செங்குட்டுவனைக்கொண்டு கண்ணகிக்குச் சிலை எடுப்பித்து விழா எடுக்க வைக்கின்றார். வடதேசத்து ஆரிய மன்னரை வென்று கனக விசயரின் முடிதனில் கல்லைச் சுமந்துவரச் செய்துதான் கண்ணகிக்கு விழா எடுக்கப் பட்டது. இந்த விழாவுக்கு இலங்கையிலிருந்து முதலாம் கயவாகு (கி.பி.174-190) மன்னனும் சென்றிருந்தான்.

பௌத்த மன்னனான இவனே இலங்கையிற் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கி வைத்தவனாவான். இந்தச்செய்தி அக்காலத்தில் இலங்கையில் பௌத்த அரசனின் கீழ்ச் சமணர்கள் இருந்தமையினை எடுத்துக் காட்டுகின்றது. ''தென்னிந்தியாவில் வாழ்ந்த திருஞானசம்பந்தப்பெருமான் ஈழத்தில் உள்ள திருகோணமலை அப்பனைப் பாடிய காலத்தில் ஈழத்தில் தமிழ்மக்கள் பலர் சமணர்களாக இருந்திருக்க வேண்டும்'' என்று பேராசிரியர் அ.சின்னத்தம்பி அவர்கள் 'ஈழத்தில் தமிழ்ச் சமணர்கள் வாழ்ந்த காலம்'' எனும் கட்டுரையில் (கலைமலர், கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை வெளியீடு, 1964 பக்-03) கூறியுள்ளார்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் வைத்துத் தேவாரங்களை நோக்கும்போது ''சிலப்பதிகாரத்தின் எதிரொலி தேவாரம்'' என்பதில் எவ்வளவு உண்மையுள்ளதென்பது தெரியவரும். குறிப்பாகப் பல்லவர் காலப் பக்தி இயக்கத்துக்கு அதீதீவிரமாக உழைத்த ஞானசம்பந்தர் சிலப்பதிகாரத்திலும் ஞானம் பெற்றிருந்தமையினை அவரது தேவாரங்களைப் படித்துப் பார்க்கும் போது நன்கு புலனாகிறது.

இலங்கையின் சிவத்தலங்களில் 'திருக்கோணேச்சரம்', 'திருக்கேதீச்சரம்' என்னும் தலங்களைப் பாடிய பெருமை ஞானசம்பந்தரையே சாரும். பக்தி இயக்கத்தின் படி அப்பரடிகள் தமிழ் நாட்டின் வடபகுதியில் நின்று பணியாற்றியமை அவர் ஈழத்தில் உள்ள சிவதலங்களைப் பாடமுடியாமற் போனமைக்கான வலுவான காரனமாக இருக்க வேண்டும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

**எம்.ஜி.சித்தாந்தன் கொக்குவில் இந்து.**

---

# ஒரு புதிய தரிசனம்

**சிறுகதை**

கஸ்தூரி என்ன செய்வது; ஏது செய்வது என்று ஒன்றும் புரியாமல் மனம் தடுமாறினாள். துன்பமும் துயரமும் அவளோடு கூடப் பிறந்தவை. இத்தனை வயதுக்கும் அவளோடு பிரியாத சினேகம் கொண்டவை.

துன்பப் புயல் அடிக்கும்போதெல்லாம் பாறையாக அசையாமல் நின்று பழகியவள். ஆனால் இப்பொழுது கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. முன்புவந்தவையெல்லாம் தற்காத்துக் கொள்ளும் போராட்டத்தில் ஊடுருவி நடந்த தாக்குதல்களாகவே இருந்தன. கொசுவைத் தட்டுவது போல் அவற்றையெல்லாம் தட்டிவிட்டிருக்கின்றாள். இப்பொழுது வந்திருப்பதைதட்டித்துடைத்து விட முடியாது.

மோகன் அவளுடைய கணவன். அவன் கஸ்தூரியைக் கைபிடித்து மனைவியாக்கிக்கொண்டதும் ஒரு விபத்து என்றுதான் இப்பொழுது அவள் நம்புகின்றாள். கஸ்தூரி இப்படி எத்தனை விபத்தில் மாட்டிக்கொண்டாள் என்பது கண்ணீர்க் கதை. கஸ்தூரியின் பெற்றோர் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அவளுடைய அப்பா விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வந்தார். கஸ்தூரியைப் பெற்றுப் போட்ட பின்னர் அவளுடைய அம்மா இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டாள். குழந்தையை வளர்ப்பதற்கு அப்பா ஒரு போராட்டமே நடத்திக் கொண்டிருந்தார். ஆற்றாமையால் அவர் மறுதிருமணம் செய்வதென்று தீர்மானித்தார். கஸ்தூரிக்கு ஒரு சித்தி கிடைத்துவிட்டாள்.

சித்தி ஆரம்பத்தில் குழந்தை கஸ்தூரியை நன்றாக வளர்த்து வந்தாள். காலப்போக்கில் சித்திக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தன. அந்தப் பிள்ளைகள் வளர வளர கஸ்தூரிக்குப் பிரச்சினைகளும் வளர்ந்து வந்தன. சித்தியிடம் மாற்றான் தாய் மனப்பான்மை வளர்ந்து வந்தது. அவள் தான் பெற்றெடுத்த பிள்ளைகளிடமிருந்து கஸ்தூரியை வேற்றுப் பிரிவுடன் நடத்த ஆரம்பித்து விட்டாள்.

கஸ்தூரி ஆறாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்த போது அவளைப் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்திவிட்டாள். சித்தியினுடைய பிள்ளைகள் ஒருவர் பின் ஒருவராகப் பள்ளிக்கூடத்துக்குச் சேர்ந்து விட்டனர்.

சித்திக்கு உதவியாகக் கஸ்தூரி வீட்டுவேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. சித்தியின் பிள்ளைகள் சீருடையணிந்து புத்தகப்பையுடன் பள்ளிக்குச் செல்வதை கஸ்தூரி ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நிற்பாள்.

அப்பாவும் கூட இப்பொழுது கஸ்தூரியிடம் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. அவர் சித்தியின் தலையணை மந்திரத்தில் சொக்கிக்கிடந்தார். இப்போதும் கஸ்தூரியைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சித்தி அப்பாவிடம் சொல்லிக் கொண்டே இருந்தார். அந்த மகுடிக்கு ஏற்றபடி அப்பா பாம்பு நடனம் ஆடிக்கொண்டு இருந்தார் . அப்பாவும் சித்தியும் தான் இப்படி என்றால் சித்தி பெற்ற பிள்ளைகள் மூவரும் இன்னும் ஒரு படி மேலே இருந்தார்கள். அந்தப் பிள்ளைகள் கஸ்தூரியைத் தமது அக்கா என்று மதிப்பதே இல்லை. அவளைத் தங்கள் வீட்டு வேலைக்காரியாகவே நடத்தி வந்தார்கள். இடி மின்னலாக வந்துகொண்டிருந்த துன்பங்களையெல்லாம் தாங்கும் இடிதாங்கி ஆனாள். பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொண்டாள்.

புறச்சூழலில் ஏற்படும் நன்மை, தீமைகளைப் பற்றி காலதேவன் கவலைப்படுவதேயில்லை. பெண்கள் விடயத்தில் அவனுடைய கைவண்ணம் அலாதியாகவே இருக்கின்றது. பருவத்தின் பூரிப்பில் நின்ற கஸ்தூரி பார்ப்பவர் கண்களையெல்லாம் உறுத்திக் கொண்டு இருந்தாள். அவளுடைய அழகு சித்தியின் எரிச்சலைக் கிளறிக்கொண்டிருந்தது. கஸ்தூரியை வீட்டிலிருந்து எப்படியாவது அப்புறப்படுத்தி ஆக வேண்டும் எனச் சித்தி முடிவு செய்தாள். புறோக்கர் கந்தையா அடிக்கடி வந்து போகத்தொடங்கினார். மோகனுடைய ஜாதகம் பொருந்தி வந்தது. நகரத்திலிருந்து கொண்டு சந்தைக்கு வருகின்ற பொருள்களை வாங்கி விற்கும் ஈரொட்டு வியாபாரம் செய்வதில் மோகன் கைதேர்ந்தவன். இந்தக் காலத்தில் எல்லா ஆண்களும் தான் குடிக்கின்றார்கள். மோகனுக்கு இருக்கும் செல்வாக்கின் அளவுக்கு இது பெரிய குறையொன்றும் இல்லை. திருமணமாகிக் குடும்பப் பொறுப்பு வந்துவிட்டால் சரியாகிவிடும் என்று சமாதானம் செய்து கொண்டார்கள். நல்லது, கெட்டது பார்த்துக் காலத்தைக்கடத்திக் கொண்டு போகச் சித்தி தயாராக இல்லை. அவள் போடுகின்ற தாளத்துக்கு எல்லாம் அப்பா கோவில் மாடுபோல் தலையாட்டிக் கொண்டிருந்தார். மோகன் கஸ்தூரி திருமணம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் சிக்கனமாக நடந்து முடிந்தது.

சனியன் தொலைந்தது; சங்கடம் தீர்ந்தது என்று சித்தியோடு அப்பாவும் சேர்ந்து நிம்மதியாகப் பெரும் மூச்சு விட்டார். ஆனால் கஸ்தூரியின் நிம்மதி திருமணத்தின் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டு சென்றது. வைரஸ் தொற்று ஏறிய கொம்பியூட்டர் புறோக்கிறாம் போல் அவளது வாழ்க்கை சீரழிந்து கொண்டிருந்தது. குடிவெறியில் வருகின்ற மோகன் எடுத்ததற்கெல்லாம் அவளை அடித்துத் துன்புறுத்தினான். அவளுடைய நகைகளையும் ஒவ்வொன்றாகப் பிடுங்கிக் கொண்டிருந்தான் . இந்த இலட்சணத்தில் அவள் ஒரு குழந்தையையும் வயிற்றில் சுமக்கத் தொடங்கினாள்.

திருமணத்தின் பின்னர் சித்தி இதுவரையில் அவளைப் பார்க்க வரவில்லை. அப்பா இரண்டு தடவைகள் ஒப்புக்காக வந்து போனார். கஸ்தூரி தன்னுடைய கஷ்ட நஷ்டங்களைத் தனக்குள்ளேயே போட்டுப் புதைத்துக் கொண்டிருந்தாள். வயிற்றிலே குழந்தையையும், மனதிலே துயரங்களையும் சுமந்து கொண்டிருந்தாள். பத்து மாதங்கள் நகர்ந்து விட்டால் எப்படியும் பிரசவத்துக்குச் சித்தி வந்து வீட்டுக்குக் கூட்டிச் செல்வாள் என்று இதுவரையில் நம்பிக்கையோடு இருந்தாள். ஆனால் அது நடக்காது போல் இருக்கின்றது.

கஸ்தூரியின் கணவனின் அடாவடித்தனங்கள் இப்பொழுது தாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்து விட்டன. பிரசவத்துக்கு உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை. அதற்கு ஆகும் செலவை உன்னுடைய அப்பனிடம் வாங்கிக்கொடு இல்லாது விட்டால் உன்னுடைய நகைகளைக் கொடு. இப்படித்தான் நகை விற்பனைப் படலம் தொடர்ந்தது. கஸ்தூரிக்குப் பிறந்த வீடும் சரியில்லை; புகுந்த வீடும் சரியில்லை. தொடர்ந்து வந்த காயங்களினால் மனம் மரத்துப் போய்விட்டது. சிறுவயதிலிருந்து அன்புக்காகவும், ஆதரவுக்காகவும் ஏங்கிப்போய் ஏமாந்து போனாள்.

அவளுடைய கணவனுக்கு அன்பு என்றால் என்னவென்று தெரியவில்லை. இப்பொழுது அவளுக்கு புதிய உறவொன்று கிடைத்திருக்கிறது. அவள் சுமந்து பெற்ற பிள்ளை தான் இப்பொழுது எல்லாமாக இருந்தது.

அவளிடம் இருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டுத்தான் இந்த உறவைப் பெற்றிருக்கிறாள்.

நகைகள் எல்லாம் முடிந்த பிறகு கஸ்தூரியின் கணவன் வீட்டில் உள்ளபொருள்களை ஒவ்வொன்றாக

(20 ஆம் பக்கம் பார்க்க)

**நாவற்குழி சிவராஜா**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Part time English Teacher
(After school hours)

We are seeking an innovative and skilled English teacher to join our leading schools in Jaffna. You will be a hardworking and enthusiastic teaching professional with excellent subject knowledge and passionate about helping underprivileged children.
The position will involve teaching English to students who require additional help.
The applicant will be a motivated individual with a keen interest in encouraging and inspiring students to love learning and excel in the subject area of English.

**Working time: After school hours and Weekends**

**Please submit your resume and cover letter by post or email:**
The Principal,
St. John's College,
Main Street,
Jaffna
Tel/ Fax No: 021 222 2432
Email : stjohns@sltnet.lk

"LUX IN TENEBRIS LUCET"

"LUX IN TENEBRIS LUCET"
LIGHT SHINETH IN DARKNESS ★ இருளில் ஒளி பிரகாசிக்கிறது ★ අන්ධකාරයේ ආලෝකය දිලිසේ

## International Federation of Red Cross and Red Crescent Societies

No:104, Dharmapala Mawatha
Colombo 07, Sri Lanka.
Tel: +94(11)7651200- Fax +94(11)2682672

**NOTICE OF VACANCY**

**The Sri Lanka Delegation, Colombo** of the **International Federation of Red Cross and Red Crescent Societies** seeks candidates for the following position:

| | |
|---|---|
| **Position** | - Driver (2 positions) |
| **Base station** | - Jaffna |
| **Contract** | - This position will be under a project based contract. |
| **Duration** | - 6 months (with possible extension) |

**Qualifications & Experience:**

*G.C.E Ordinary level *Five years driving experience with "A" class driving Licence
*Experience of working for the Red Cross/ Red Crescent would be an added advantage

**key Responsibilities:**

1. To drive the assigned vehicle according to the Rules and Regulations for use of Federation vehicles.
2. To transport passengers and cargo safely and as instructed.
3. Ensure that all occupants (including driver) of the vehicle are wearing safety belts.
4. Accountable for the proper use and security of federation vehicles and the equipment (jack, tools, etc.) assigned to the vehicle.
5. Performance of daily inspections according to the standard form for inspection for vehicles assigned or any other vehicles as instructed
6. Understand and obey all traffic laws and regulations.
7. Compliance with working hours as regulated. Drivers are recommended to work in accordance with the operational needs of the operation
8. At all times be in possession of a valid driving license and make sure that the license is renewed when necessary.
9. Advise the Car Dispatchers of needed service and maintenance of the assigned vehicle 3 days in advance.

**Skills & Competencies:**

*Self valid driving license (manual gears) * English Language (Spoken and written) and Tamil, Knowledge of sinhalese would be an added advantage * Basic mechanical skills to be able to do small repairs if necessary * Flexible and autonomous * Conscientious and punctual * Able to work under stress, possible long working hours * Team work * initiative and direction * interpersonal skills *resilience

Interested candidate are reguested to send in their resumes along with a covering letter stating *'why you are suitable for this position'* by post to:

**Human Resources Officer**
**International Federation of Red Cross and Red Crescent Societies**
**No.54/c1, Ward place**
**Colombo 7**
**Sri Lanka.**
**Fax No. 2682672**

**E-mail to:** hr. srilanka@ifrc.org

The last date for receiving applications will be **19th July 2011** for the above post, **Please indicate the relevant post on the envelope. Only short-listed candidates will be notified.**

(சி/1515) (38)




பவுண் ஒன்றுக்கு அதிகூடிய தொகை தரும் வங்கி

இச்சலுகை ஜூன் 16 முதல்
ஆகஸ்ட் 16 வரை வடக்கு மற்றும் கிழக்கு
NDB வங்கிக் கிளைகளுக்கு மட்டுமே.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

## நிலையான வைப்பு (5 வருடங்களில் முதிர்ச்சி)
## 13.00% வ.ஒ (வ.கி.வீ 10.53%)

ஆகக் குறைந்த நிலையான வைப்பு ரூ.5000

| காலம் | மாதாந்தம் | | முதிர்வின் போது | |
|---|---|---|---|---|
| மாதம் | வருடாந்த வட்டி வீதம் | வருடாந்த கூட்டு வட்டி வீதம் | வருடாந்த வட்டி வீதம் | வருடாந்த கூட்டு வட்டி வீதம் |
| 1 மாதம் | ---- | ---- | 9.00% | 9.38% |
| 3 மாதம் | 9.50% | 9.92% | 10.50% | 10.92% |
| 6 மாதம் | 10.00% | 10.47% | 10.75% | 11.04% |
| 1ஆம் வருடம் | 10.75% | 11.30% | 11.50% | 11.50% |
| 2ஆம் வருடம் | 10.75% | 11.30% | 12.50% | 11.80% |
| 3ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 11.58% |
| 4ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 11.04% |
| 5ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 10.53% |

ISO 9001.2008 தரத்தில் தர முகாமைத்துவ ஒழுங்கமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்ட இலங்கையின் முதல் நிதி நிறுவனமாகும்.

மனதில் அமைதியை ஏற்படுத்துவது

**பாதுகாப்பான கைகளில்**

நீங்கள் இருக்கிறீர்கள் என்று அறியும்போதே

**021 5671813**

இல.89,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம்.

ஒரு நீண்டகால முதலீட்டுத்தரதரம் RAM BBB/P2
18 ஜூலை 1956ல் ஒருங்கிணைக்கப்பட்டது.
நிதி நிறுவணச்சட்டம் 1988 இல 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையில் பதிவு செய்யப்பட்டது.


Since 1956
Alliance Finance
COMPANY PLC
*Built on Trust. Powered by Innovation.*

தலைமை: அலுவலகம் அலையன்ஸ் ,ஹவுஸ்,84,வாட் பிளேஸ்,கொழும்பு 7,இலங்கை. தொலைபேசி 011-2673673 (ext. 128/281/282/283)/ பக்ஸ்: 011-2691090, மின்னஞ்சல்:deposit@alliancefinace.lk
கிளைகள்: கம்ஹா,இரத்தினபுரி,காலி,யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,திருகோணமலை.

கம்பனி இல.PQ93
www.alliancefinance.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரைப் பேணுவோரே சிறந்த அறிவாளி



விஸ்வாமித்திரரும் வசிட்டரும் தேவ லோகம் சென்றனர். அங்கு விஸ்வாமித் திரருக்கு நாற்காலி இல்லை அவருக்கு கோபம் வந்து விட்டது. சமாதானம் செய்த பிரமன் வசிட்டருடன் பூமிக்குச்சென்று ''உங்களை விட அறிவில் குறைந்த ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்க'' என்றார்.

ஓர் ஏழை விவசாயியைப் பார்த்ததும் அறி வற்றவன் என்று விஸ்வாமித்திரர் முடிவு செய்து அழைக்க முற்பட்டார். வசிட்டர் பொறுமையாக அவனைக் கவனிக்கச் சொன்னார்.

விவசாயியின் மனைவி உணவு கொண்டு வந்திருந்தாள் சாப்பிடப் போன விவசாயி ''அம்மாவும் அப்பாவும் சாப்பிட்டு விட்டார்களா? என்றான்'' அவர்களுக்கு என்ன அவசரம் உழைக்கின்ற நீங்கள் முதலில் சாப்பிடுங்கள் என்றார்.


''முதலில் அவர்கள் சாப்பிட்ட செய்தியைச் சொல் பிறகு நான் சாப்பிடுகிறேன் என்று கூறிவிட்டு வயலுக்குப் போய்விட்டான்.

இவனா படிக்காதவன், அறிவற்றவன் என்று வசிட்டர் கேட்டார். தேவலோகத்தில் ''எனக்கு ஏன் நாற்காலி கிடைக்கவில்லை என்று இப்போது புரிகிறது'' என்றார் விஸ்வாமித்திரர்.

**தாய் தந்தையரைப் பேணுவரே அறிவில் சிறந்தவர்**

ஆ.கபிலன்
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அர்சுவேலி

## கற்க! கற்க! கற்கவே!



கல்விதான் அறிவை வளர்த்துவிடும்!
உண்மை ஒழுக்கம் கல்விதரும்
உயர்ந்து விளங்க செல்வம்தரும்!
எண்ணிய எண்ணம் ஈடேறும்
என்றும் சிறப்பு நாடோறும்!
கற்கக் கற்க கற்கவே!

கல்வி கல்லா மாந்தரிடம்
கனிவோ பனிவோ வாராது!
சொல்லில் இனிமை சேராது
செயலில் தெளிவும் நேராது!
எல்லாப் பலனும் ஈந்துவிடும்
இனிய கல்வி கற்கவே!

இளமையில் கல்வி கற்றாலே
அசையா ஆணி வேராகும்!
வளமாய் பசிய பயிர்போல
வளரும் அறிவோ தானாக!
அளவே இல்லை கற்றுவிட
அறிவைப் பெறவே துடித்திடுவீர்!
உளமும் உடலும் ஓம்பவிட
ஒவ்வொரு நாளும் கற்றிடுவீர்!

கை.சிவனுகா

## பொது அறிவு

1. பெண்களுக்கு வாக்குரிமையளித்த முதல் ஜனநாயக நாடு எது?
   **நியூஸ்லாந்து**
2. உலக வனதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
   **மார்ச் 21**
3. அண்மையில் ஏற்பட்ட நிலச்சரிவினாலும் பெரியளவான சுனாமியாலும் பாதிக்கப்பட்ட நாடு எது? **ஜப்பான்**
4. உலகில் தட்டையான சமதரையான நாடு எது?
   **மாலைதீவு**
5. டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது?
   **வானம்பாடி**
6. இலங்கையின் மிக நீளமான சுரங்கப் பாதை எது?
   **கொத்மலைச் சுரங்கம்**
7. நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு எது?
   **நோர்வே**
8. இலங்கையில் குகைக் கோயில் எங்கு உள்ளது?
   **மாத்தளையில்**
9. இத்தாலியின் தலை நகரம் எது?
   **ரோம்**
10. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் யார்?
   **பஸில் ராஜபக்ஷ**

சா. பபிதா,
கோண்டாவில் இராமகிருஸ்ண
மகாவித்தியாலயம்.




## சிந்திக்க வேண்டியவை

- மிகமிக நல்ல நாள் - இன்று
- மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
- மிகவும் வேண்டாதது - வெறுப்பு
- மிகக் கொடிய நோய் - பேராசை
- மிகவும் சுலபமானது - குற்றங்காணல்
- கீழ்த்தரமான விடயம் - பொறாமைப்படுதல்
- நம்பக் கூடாதது - வதந்திகளை
- ஆபத்தை விளைவிப்பது - அதிகாரப் பேச்சு
- செய்யக் கூடாதது - உபதேசம்
- செய்ய வேண்டியது - உதவி
- விலக்க வேண்டியது - விவாதம்
- உயர்வுக்கு வழி - உழைப்பு
- நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு

நிலானி, ஏழாலை


## நவதானியங்கள்

- நெல்
- பயறு
- கொள்ளு
- கோதுமை
- மொச்சை
- துவரை
- கடலை
- உழுந்து
- எள்ளு



## நவரத்தினங்கள்

- முத்து
- நீலம்
- கோமேதகம்
- பவளம்
- மரகதம்
- வைடூரியம்
- புஸ்பராகம்
- மாணிக்கம்
- வைரம்



## விடை தெரியுமா? 115

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகின் மிகப்பெரிய சஹாராப் பாலைவனம் எங்கு உள்ளது?
2. சீனாவின் தலைநகர் எது?
3. பறக்கும் போது தூங்கும் பறவை எது?
4. வாழ்நாளில் குரைக்காத நாய் எது?
5. அணுக்கொள்கையை முதலில் வெளியிட்டவர் யார்?

### விடைகள் 113

1. செவாலியர் விருது
2. உருது மொழி
3. எகிப்தைச் சேர்ந்த ஷேக் அய்மன் அல் ஜவாஹிரி
4. ஸ்கொட்டியா பிரின்ஸ்
5. 4 ஆவது

### வெற்றி பெற்றவர் விவரம்

★யோகராசா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
யாழ்/ மட்டுவில் கம்சாயினி கனிஷ்ட
மகாவித்தியாலயம், மட்டுவில் சாவகச்சேரி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால்14.07.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## சிந்தனைத் துளிகள்

- தாம் சரியான பாதையில் இருக்கிறோம் என்று நம்புகிறவர்கள் பொதுவாக எதையாவது சாதிக்கவே செய்கிறார்கள்.
- உன்னால் முடிந்த வரையில் உன் பணியை இன்று நன்றாகச் செய். நாளை அதை விட நன்றாகச் செய்யும் ஆற்றலை நீ பெறக் கூடும்.
- ஒருவருடைய நடத்தையை வைத்து, அவரை எடைபோட வேண்டுமே தவிர, அவர் செய்யும் தொழிலை வைத்து அல்ல.
- முதலில் கீழ்படியக் கற்றுக்கொள். பின்னர் கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.


ம.ரெஸ்னி,
தரம் - 4
யாழ்.[illegible]










அ.சோபிதன்
நுணாவில் மேற்கு ,
சாவகச்சேரி.



க.நிவேதனா,
தரம் -04
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.



சா.அபிசனா,
சென்ஜோன் பொஸ்கோ.



க.அனுஷன், தரம் 3பி,
பொஸ்கோ வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவும் கேளாதீர்கள்

புழுதிகள் அங்குமிங்குமாய்
படிந்திருக்கின்ற
எனது வீதிகளில் தான்
தினமும் நான் பயணம் கொள்கிறேன்
முன்னொரு காலத்தில்
எனது வீதிகள் இப்படியிருந்ததில்லை
புழுதிகளும் இப்படிக் குவிந்ததில்லை
இப்போது நாளுக்கு நாளாய்
புழுதிகள் குவிந்து கொண்டு தான்
இருக்கின்றன
வீதிகளில் மட்டுமல்ல
மனங்களிலும் தான்

விழித்திரையினுள்
சேமிக்கப்பட்டிருக்கின்ற
விலக்கப்பட முடியாத விம்பங்கள்
காட்சிகளாய் படர்ந்து கொள்கின்றன
என்ன நடந்து கொள்கின்றன
என்னை எதுவும் கேட்காதீர்கள்
பதில்களைப் பக்குவமாய் உரைக்கும்
பக்குவம் இப்போது என்னிடம் இல்லை
பக்குவப்படுத்தி எழுதும் திராணியும்
என் எழுத்துகளிடமும் இல்லை
எதை எழுதுவது எப்படி எழுதுவது
சொற்களுக்குப் பஞ்சங்கள்
நிறையவே உண்டு இங்கு
நிலவைக் கோடுகளால் மறைக்க
முடியாது
மறைத்து கொள்ளினும் நிலவு
மறைந்திடாது
எழுத்துகள் யாவும்
மாற்றுக் கருத்துக்களாய்
மொழிபெயர்க்கப்படுகின்றது
இதுதான் நான் பிறந்த தேசமா?

இப்படித்தான் எந்தன் நகரம்
இருந்ததா?
இவ்வளவு காலமாய் என் நகரம்
இப்படி இருந்ததில்லையே?
ஆயிரமாயிரம் கேள்விகள்
முளைவிடுகின்றன
பதில்கள் இருந்தும்
என்னை நோக்கிவர
மறுத்து விடுகின்றன
பதில்கள்
என்னை எதுவும் கேட்காதீர்கள்
இது எந்தன் நகரம் அல்ல
நவீனம் என்ற நரகம் இது
நான் ஓடி விளையாடித்திரிந்த
ஆலமரத்து நிகழ்களினுள்ளே
அரச மரங்களை யார்
வலிந்து நடுகைகள்?
என்னை எதுவும் கேட்காதீர்கள்
எல்லாவற்றும் எடுத்துரைப்பதற்கு
என் குரல் வளைக்குத் தன்னிலும்
தைரியங்கள் இல்லை
சூனியங்கள் தான் இப்போதும்
மனதினிடையே
அறுவடை செய்யப்படுகின்றன
அனைத்தையுமே எம்மனவில்
மறைத்து வாழப் பழகிக் கொண்ட
நாங்கள் இப்போதும்
பாலை வனங்களாய் தான்
வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்
என்னை எதுவும் கேட்காதீர்கள்
எல்லாவற்றையும் உரைக்கும்
பக்குவம் என்னிடம் இல்லை

வெற்றி · துஷ்யந்தன்

# தமிழ் கலாசாரம்

சங்க காலமதிலே
சரியவில்லை தமிழ்கலாசாரம்
கலியுககாலம்
காலெடுத்து வைத்ததால்
தாறுமாறோடு போகுது
தமிழரின் பயணம்
மங்கையொன்று வீதியிலே சென்றால்
தங்கையென்று மதித்தகாலம்
போனதடா
திருநாறு தரித்து
வேட்டி சால்வை அணிந்த
தீர்க்கமான பண்பு
திசைகெட்டுப்போனதடா
தொப்பி கழற்றி
பெரியோருக்குக் கொடுத்த சிறப்பு
தொப்பென்று விழந்து போனதடா
வந்தாரை உபசரிக்கும்
பண்பும் உருகிப் போனதடா



சீர்கெட்ட பண்பு
பாரினில் நடமாட
ஏர்பிடித்த தமிழனும்
பாறித்தான் போனானடா
கெட்டுப் போனது சமூகம்
இதில் பட்டுப்போனது கலாசாரம்
பஸ்ஸுக்குள் வந்த பெரியோர்
சீற்றின்றி தவிக்கையில்
நித்திரைக்குச் சொந்தமாய்
எத்தனையோ சிறுசுகள்
பாசாங்கு பண்ணுதடா
காதலும் வீரமும்
கைவந்த கலை
என்றானே தமிழன்
காதலிலும் தோல்வியடா
வீரத்திலும் தோல்வியடா
கண்மூடிக் கிடக்கின்றான்
களையிழந்த பண்பை
கடைப்பிடிக்க மறுக்கின்றான்
பெற்றோரை வணங்கு
தீமைக்குத் தயங்கு
என்றதே மூத்தோர் அமுதம்
உற்றுப் பாரடா இதை
கற்றுத் தான் பாரடா
நன்றிக்கு நாயடா
ஒற்றுமை கெட்டு
நிற்பவன் தமிழனடா
மாறவேண்டும் தமிழ் கலாசாரம்
ஊறவேண்டும் தமிழனுக்கு
வேறு ஒன்றும் தேவையில்லை
மாறு உந்தன் வழியினின்று

ஜெயராம் ஜெகன்
புதுக்குடியிருப்பு

# தெரியட்டும்..



உன்
கடை விழிப்பார்வைக்காய்
காத்திருந்து களைக்கின்றேன்...
உன்
நீள் விழிப் பரப்பின்
ஓரத்திலாவது
என் விம்பம் தெரியட்டும்
உனக்குள்.....

பா.பொன்நிலவன்,
மீசாலை.

# விஷப்பரீட்சை

தீயின் நாக்குச் சுடர்விட்டெரியும்
விளக்கின் அருகே என் மகளின்
பிஞ்சு விரல்கள் விளையாடத் துடிக்கும்
அந்த ஒரு வினாடி பதறித்தான் போனேன்!
சிமிலி விளக்குத்தான்....
என்றாலும் மனமதிர ஓடினேன்....
அதற்குள் தொட்டுவிட்டவள் வீரிட்டழுது
துடித்த துடிப்பில் இதயம் வலிக்க
அணைத்துக் கொண்டேன்!

மழைநீர் கொணர்ந்தென் கணவர்
விரல் நீவித் தடவுகையில்
முறைத்துப் பார்த்தேன்...
நெஞ்சால் அரக்கி பிள்ளை போனது
உங்களுக்குத் தெரியுமா?
ஒரு தலையாட்டல்

இனி அந்தப் பக்கமே நகரமாட்டாள்...
இதுபோதுமா உனக்கு?

என்னிடமிருந்து பறித்தெடுத்து முத்தமிட்டு
அணைத்துக் கொண்டவரின் கண்கள்
பனித்துக் கண்ணீர் வழிய நின்றகோலம்
கண்டு வாழாவிருந்தேன்...

தன் தவறுக்காக வருந்துகிறாரே?

கஜை. மகேஸ்வரன்



# இதுவும் பொய் என்பதா?

சென்றாய்.....
வென்றாய்....
வந்தாய்.....
ஏனோ இடையில்
எம்மை
கொண்டாய்?
எம் கண்ணீர் உனக்கு
தெரியலயா?
எம் கதறல் உனக்கு
கேட்கலையா?
சென்றோம் பதுங்கி
விழுந்தோம்...
உண்பதற்கு உணவின்றி
சுடுகாட்டில் வாழ்ந்ததாய்
ஒரு வாழ்க்கை...
எத்தனை முறை கேட்டிருப்போம்
பாதுகாப்பு வேண்டுமென
பாதுகாப்புக்குப் பதிலாகப்
புதைகுழியை அல்லவா
தந்தாய்...
நாம் கத்திய கதறல்
எதிரிருந்த - உன்
காதுகளில் விழவில்லை

நாம் பட்ட துன்பம்
அருகிருந்த உன் கண்களுக்கு
தெரியவில்லை...
இல்லை
தெரியாதது போல்
கிடந்தாய்....
ஆனால் எம்
கத்தல்களும்
கதறல்களும்
எம் இனம்பட்ட
அவலங்களும்
உம்மூடாகவே
வேறு ஒருவர் கையுக்கு
சென்றதைப் பார்த்தாயா?
இதுதான்
சொல்வார்கள்
காலம் பதில் சொல்லும்
என...
அன்று நாம் பட்ட
வேதனையை
இன்று அகிலம்
பார்க்கின்றது
இன்று உணர்வாய்
எம் வேதனையை
இன்று பிறர் கேட்க
என்ன பதில்
உன்னிடம் உண்டு
இது பொய் என்பதா?

மிலன்,
பாரதிபுரம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு - எமது உரிமை கட்டாயக் கடமை



ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

ஜனநாயகம் என்பது மக்களால் சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களே மக்களை ஆட்சி செய்யும் ஓர் அரசியல் வழிமுறை என்றே காலம் காலமாகக் கருதப்பட்டு வருகின்றது. நடைமுறையில் இந்தக் கருத்து வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்யப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்ட போதும் இது ஒரு பொதுக்கோட்பாடாக நிலைபெற்று வருகிறது.

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களை நியமிக்கும் உரிமையை அரசியல் கட்சிகளோ அல்லது சில தனிப்பட்ட குழுக்களோ கொண்டிருக்கின்றன. இதில் மக்களின் பங்களிப்பு எதுவுமே இருப்பதில்லை. பல்வேறு கட்சிகளாலும் குழுக்களாலும் நியமிக்கப்படும் வேட்பாளர்களுள் ஒருவரைத் தெரிவு செய்யும் உரிமை மட்டும் உண்டு.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிலிருந்து பிரதமரையோ, அமைச்சர்களையோ, துணை அமைச்சர்களையோ ஏனைய அதிகாரப் பீடங்களையோ தெரிவு செய்யும் உரிமை கூட அரசியல் கட்சிகளுக்கோ குழுக்களுக்கோ மட்டுமே உண்டு. இதிலும் மக்களின் பங்களிப்பு எதுவுமே இல்லை. எனவே 5 வருடங்களுக்கு ஒருமுறை அரசியல் கட்சிகள் முன்னிறுத்தும் நபர்களில் ஒருவரைத் தெரிவு செய்யும் உரிமை மட்டுமே மக்களுக்கு ஜனநாயகத்தில் வழங்கப்படும் ஓர் உரிமையாகும்.

இந்த உரிமை கூடப் பல சமயங்களில் பணம், அதிகாரம், சமூக, சாதிச் செல்வாக்குகள், பயமுறுத்தல்கள், கள்ளவாக்குப் போடுதல், வன்முறைகள் போன்றவற்றால் பாதிக்கப்படுவதுண்டு. எனினும் ஜனநாயகத்தில் மக்களுக்குரிய ஒரேயொரு உரிமை வாக்களிப்பு மட்டுமே என்ற காரணத்தால் அதை மிகவும் அவதானமாகவும் பயனுள்ள வகையிலும் பாவிக்க வேண்டும். சில சமயங்களில் இந்த உரிமை தவறாகப் பிரயோகிக்கப்படும் போது அது மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குப் பலம் சேர்ப்பதாக அமைந்துவிடுவதுமுண்டு.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் இந்த வாக்களிக்கும் உரிமை என்ற கட்டத்தைக் கடந்து கடமை என்ற நிலைக்கு உயர்ந்து விடுவதுண்டு. சொந்த இலாபங்களுக்காக மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபடும் குழுக்கள் வெவ்வேறு வேஷங்களில் மக்கள் முன் வரும் போதும் மக்கள் தங்கள் குரலை ஒருமித்து ஓங்கி ஒலிக்க வேண்டிய கட்டாயம் எழும் போதும் வாக்களிப்பு என்பது தவிர்க்க முடியாத கடமையாகிறது. மக்கள் தங்களின் நலன்களுக்காக உறுதியாக நிற்பவர்களையும் சொந்த நலன்களுக்காக மக்களின் உரிமைகளை விற்பவர்களையும் இனம் கண்டு வாக்களிக்க வேண்டிய கடமை எழுகிறது.

அண்மையில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தமிழ் மக்களும் இப்படியான ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியும், கட்டாயமாக வாக்களிக்க வேண்டியும் அந்த வாக் களிப்பைச் சரியாகப் பயன்படுத்த வேண்டியதுமான ஒரு தவிர்க்க முடியாத கடமைக்குள் தள்ளப்பட் டுள்ளனர்.

இன்று தமிழ் மக்கள் சலிப்படைந்த, ஒரு நம்பிக்கையிழந்த நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட பெரும் பின்னடைவு. அந்தப் போரின் போது தமிழ் மக்கள் மீது அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்தழிப்புகள், ஊனமுறல்கள் போன்ற கொடுமைகள் போர் முடிந்து 2 வருடங்களுக்கு மேலாகியும் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இராணுவ ஒடுக்குமுறைகள், வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாது வறுமையிலும் துயரங்களிலும் வாடுதல் போன்ற நிலைமைகள் ஒரு சலிப்பான நிர்க்கதியாக்கி விடப்பட்ட உணர்வை ஏற்படுத்துவதில் ஆச்சரிப்பட எதுவுமில்லை.

> **தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்போது வாக்களிப்பு என்பது உரிமை என்ற கட்டத்தைத் தாண்டி எமக்காக நாம் செய்ய வேண்டிய கடமை என்ற கட்டத்துக்கு உயர்ந்துவிட்டது. எனவே சலிப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஒதுக்கி விட்டு வாக்களிப்பதன் மூலம் எமது ஜனநாயக உரிமையை நிலை நாட்டுவது எமது ஜீவாதாரக் கடமையாகும்.**

இன்றைய அரசு இனப்பிரச் சினைக்கான ஒரு நியாயமான நிரந்தரமான ஒரு தீர்வை ஏற்படுத்தத் தயாராக இல்லை என்பது மிகத் தெளிவான விடயம்.

போர் முடிந்து பல மாதகாலங்களாகியும் அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக அரசாலும் அரசுடன் இணைந்துள்ள தமிழ்க் கட்சிகளாலும் குழப்பமான ஏமாற்றுகள் நிறைந்த அறிக்கைகளே வெளியிடப்பட்டன. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவும் சர்வதேசம் இந்தப் பிரச்சினை தொடர்பாகக் காட்டும் ஆதரவு காரணமாகவும் அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்தது. இந்தப் பேச்சுக்களில் ஒரு மாதிரித் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்குத் தயாரான வேளையில் அரசு திடீரென இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப் போவதாகத் தெரிவித்துவிட்டது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களால் எதையுமே சாதிக்க முடியாது என்பதற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டு காலாவதி யாகிப் போய்விட்ட இரு நாடாளுமன்றத் தெரிவுக்கு குழுக்களுமே போதிய சாட்சியங்களாகும்.

எனவே அரசோ, அரசுடன் நிற்கும் தமிழ்க் கட்சிகளோ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வித உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கப் போவதில்லை என்பது சந்தேகத்திற்கிடமற்ற விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமான, நிரந்தரமான தீர்வைக் காண விரும்பாத இந்த அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனமும் சலிப்பும் தோன்றுவது தவிர்க்க முடியாததே.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரித்தமை மாகாண சபையில் பொது நிர்வாக, பொலிஸ் அதிகாரங்கள் பறிக்கப்பட்டமை, உள்ளூராட்சிச் சபைகளின் மீதான மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டமை, தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவக் குடியேற்றங்கள் என்ற பேரில் சிங்களக் குடியேற்றங்கள். எங்கு புத்த விகாரைகளும் சிலைகளும் நிறுவல், இராணுவ ஒடுக்குமுறைகள். இவ்வாறாகத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் விரிவு படுத்தப்பட்டு வருகின்றன.

இப்படித் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும் கொடூரங்களும் தொடரும் நிலையில் நாம் சலிப்படைந்து சோர்வடைவோமானால் இது அடக்குமுறையாளர்களுக்கே சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தும்.

தமது நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்றொரு மாயையை ஏற்படுத்த அவர்களுக்கு வாய்ப்பை வழங்கி விடும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் என்பன தொடர்பான ஐ.நா. நிபுணர்களின் அறிக்கை, இலங்கையின் கொலைக்களம் என்ற பெயரில் சனல்- 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட வீடியோ நாடா என்பன இலங்கை அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. இந்தியா இவை பற்றி இதுவரை எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. ஆனால் தமிழக அரசும் தமிழக மக்களும் இந்திய மத்திய அரசுக்கு இவை தொடர்பாகப் பல அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றனர். சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் கூட இந்த விடயத்தில் இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவையே வழங்கி வருகின்றன. மேற்கு நாடுகள் வெளிப்படையாகவே உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை அவை பொய்யானவை, ஆதாரமற்றவை எனக் கூக்குரலிட்ட போதிலும் அவை இலங்கை அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. அது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அழுத்தங்களும் சர்வதேச அளவில் அதிகரித்து வருகின்றன.

இப்படியான ஒரு நிலையில் அரசு தான் முகம் கொடுக்கும் நெருக்கடிகளைப் பலவீனப்படுத்தத் தமிழ் மக்கள் தமது நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற மாயையை ஏற்படுத்த முனைகின்றனர். அதற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தல்களைப் பாவிக்கும் முகமாக அரசு இங்கு அமைச்சர்கள் உட்படத் தனது முழுவளங்களையும் இங்கு குவித்துள்ளது. ஒரு புறம் ஏமாற்றுகளாலும் மறுபுறம் இராணுவக் கெடுபிடிகள், மிரட்டல்கள் என்பன மூலமும் இந்தத் தேர்தலில் வெற்றியடைய முயற்சிக்கிறது. ஓர் உள்ளூராட்சிச் சபையில் வெற்றி பெற்றால் கூடத் தமிழ் மக்கள் தங்களை ஏற்றுக் கொள்கின்றார்கள் என்ற பிரசாரத்தை அரசும் அதைச் சார்ந்த தமிழ் குழுக்களும் மேற்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

இதன் காரணமாக இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் பலவீனமடையும் வாய்ப்புக்கள் உருவாகலாம். அது நிச்சயமாக தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை மேலும் வலுப்படுத்துவதற்கான சாதகமான சூழலை வழங்கிவிடும்.

சரிக்கும் பிழைக்குமிடையே போராட்டம் நடக்கும் போது நடுநிலை வகிப்பதோ, ஒதுங்கியிருப்பதோ சரியான பக்கத்தைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும். அது பிழையான பக்கத்துக்குச் சாதகமாகவே அமையும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்போது வாக்களிப்பு என்பது உரிமை என்ற கட்டத்தைத் தாண்டி எமக்காக நாம் செய்ய வேண்டிய கடமை என்ற கட்டத்துக்கு உயர்ந்துவிட்டது. எனவே சலிப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஒதுக்கி விட்டு வாக்களிப்பதன் மூலம் எமது ஜனநாயக உரிமையை நிலை நாட்டுவது எமது ஜீவாதாரக் கடமையாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலத்திலும் மங்காது ஒளிவீசிய மாமேதை

## அமரர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

தோற்றம்
10 • 05 • 1932



அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகத்தின் நிறுவுநர் ஈழத்தின் மூத்த தமிழ்ப் பேரறிஞர் **பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி** அவர்களின் மறைவுச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளோம். ஈழத்தில் மட்டுமல்லாமல் புலத்திலும் மங்காது ஒளிவீசிய மாமேதை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இறுதிக்காலம்வரை அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் புலமைக்குழுத் தலைவராக இருந்து மிகச்சிறப்பாக வழிநடத்தியவர். புலம்பெயர் நாடுகளில் வேற்றுமொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழர்களிடையே தமிழர்களின் இன அடையாளமாகக் கருதப்படுகின்ற மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாமல் பாதுகாப்பதில் அயராது உழைத்தவர். 2000ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்துக்கு நேரடியாக வருகைதந்து புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ்க்கலை ஆசிரியர்களை ஒருங்கிணைத்து அதனூடாக தமிழ்க் கலை முன்னெடுத்துச் செல்வதற்காக அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகத்தை உருவாக்கியவர். பல்லாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ்க் கலையை ஆர்வத்தோடு கற்பதற்கு ஏற்ற வகையில் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தினூடாகப் பல செயற்பாடுகளை முன்னெடுத்தவர். மாறிவரும் விஞ்ஞான உலகுக்கு ஏற்றவகையில் ஆளுமைமிக்க ஆசிரியர்களையும் விவேகமிக்க மாணவர்களையும் உருவாக்க வேண்டுமென்பதே அவருடைய பிரதான நோக்கமாக இருந்தது. வேற்றுநாட்டவரும் எமது மொழி, பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதில் அதிகமாகப் பாடுபட்டவர். கட்டாயமாக ஓய்வு தேவைப்பட்ட காலங்களில்கூட உடல் வலிமையையும் பொருட்படுத்தாமல் புலத்தில் வாழும் தமிழ்க்கலை மாணவர்களின் தொடர் கல்விக்கு உதவியாகத் தமிழர் கலைகள் என்னும் நூலை எழுதியவர். இலங்கைத் தமிழ் வரலாறு மற்றும் இலக்கியம் குறித்து 70 இற்கு மேற்பட்ட நூல்களையும் 200இற்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியவர். இவ்வாறு தமிழ் உலகத்துக்காக அயராது உழைத்த உலகப்புகழ்பெற்ற ஈழத்தின் மூத்த தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுடைய மறைவு உலகத் தமிழ்ச் சமுதாயத்துக்கும் தமிழுக்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து நிற்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் தமிழ் உலகத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் நினைவு சுமந்து (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 17.00 மணிக்கு சுவிற்சர்லாந்து சூரிச் மாநிலத்தில் அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகத்தால் நினைவு வணக்க நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறைவு
06 • 07 • 2011

**அனைத்துலகத்
தமிழ்க்கலை நிறுவகம்.**


International Institute of Tamil Arts,
Postfach 6711,
8050 Zurich, Switzerland.
iita@hotmail.ch

(5608) (38)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்பகப் புற்றுநோய்

இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் மார்பகப் புற்று நோயே முதலிடம் வகிக்கின்றது. (படம்:1) மார்பகங்களின் கல அமைப்பைப் பார்ப்போமேயானால், நெஞ்சுப் பகுதியின் தசைக்கு மேலே பால் உருவாகும் பைகள் (Lobules) அமைப்புக்களும் அதிலிருந்து உருவாகும் கான் (Duct) தொகுதிகளையும் கொண்டதாக அமைந்து ஈற்றில் சகல கான்களும் முலைக்காம்பில் முடிவுறுகின்றன. படம்:2 இல் காட்டப்பட்ட இந்த அமைப்பின் கான் (Duct) பகுதியின் கல மேலணியில் உருவாகும் பல படி நிலைகளுடான (Multi step Process) புற்றுநோயின் உருவாக்கத்தைக் காணலாம்.



படம்: 1




படம்: 2

> ## புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 10
>
> வடபகுதி மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை(TRAIL) ''அடிச்சுவடு பாதை நடை பயணம்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

### மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள் யாவை?

* பெண்களிலேயே அதிக அளவில் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகின்றது. (99% ஆன மார்பகப் புற்றுநோய் பெண்களிலும் 1% ஆன மார்பகப் புற்றுநோய் ஆண்களிலும் ஏற்படுகின்றது.)
* அதிக அளவில் வயதானவர்களில் (40 வயதுக்கு மேல்) இந்தப் புற்றுநோய் ஏற்படுகின்றது. குறைந்த வயதுள்ளோரில் ஏற்படும் மார்பகக் கட்டிகள் பெரும்பாலும் புற்றுநோயற்றவையாகவே காணப்படும். (படம்:3)
* அதிக அளவில் ஈஸ்ரொஜன் (Oestrogen) ஓமோன் சுரப்பு வரக் கூடியவர்களில் இந்தப் புற்றுநோய் அதிகளவில் ஏற்படும்.



படம்: 3

- மிகக் குறைந்த வயதில் பூப்படைதல் - பெண்கள் 12 வயதுக்கு கீழ் பூப்படையும் இடத்து அவர்களின் சூலகம் அதிகளவில் தனியே ஈஸ்ரொஜனைச் சுரக்கும் தன்மையுடையது.
- கூடிய வயதில் மாதவிடாய் நிற்றல்- 55 வயதுக்குப் பின்னர் நிற்றல்.
- பிந்திய வயதில் முதல் கர்ப்பம் தரிப்பவர்கள் 30 வயதுக்குப் பின் னர் கருத்தரிப்பவர்களில்.
- குழந்தை இல்லாதவர்கள்.
- தாய்ப்பால் ஊட்டாதவர்கள்.

* அதிக உடல் பருமன் உடையவர்கள் - இவர்களில் தோலின் கீழ் உள்ள கொழுப்புக் கலங்களில் ஈஸ்ரொஜன் (Oestrogen) உருவாக்கப்படுதல் மூலம் இந்தப் புற்றுநோய் அதிகரிக்கப்படுகின்றது.
* அதிக கொழுப்பு உணவு உண்ணுதல்.
* புகைப்பிடித்தல், மதுபானம் அருந்தும் பழக்கம் உடையவர்கள். (இலங்கையில் இந்தப் பழக்கமுடைய பெண்கள் மிகவும் குறைவாகும்.)
* நெருங்கிய உறவினரிடையே (தாய்வழியில் ) மார்பகப் புற்றுநோய் உடையவராய் இருத்தல். குறிப்பாக அவ்வாறான உறவினர்கள் இளம் வயதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்திருப்பின் கூடிய அளவில் பரம்பரை அலகுகளின் ஊடாக இலகுவில் புற்றுநோய் எற்படும் தன்மையைக் கொண்டவராக கருதப்படுவர். BRCA 1, BRCA 2 எனும் புற்றுநோயை உருவாக்கும் பரம்பரை அலகுகள் புற்றுநோய் மாற்றங்களைத் தூண்டுவதால் இவர்களில் மார்பகப் புற்றுநோய் இளம் வயதில் ஏற்படும்.

### மார்பகப் புற்றுநோயின் எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?

* மார்பகங்களில் நோவு இல்லாத கட்டிகள் ஏற்படல்.
* மார்பகங்களின் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்.
* ஒரு மார்பகம் அசாதாரணமாக மறு மார்பகத்திலும் பார்க்கப் பதிவாக இருத்தல்.
* முலைக்காம்பில் இருந்து ஏதாவது திரவம் அல்லது இரத்தக்கசிவு ஏற்படுதல்.
* முலைக்காம்பு உருமாறியிருத்தல் அல்லது உள்வாங்கியிருத்தல்.
* மார்பகங்களின் தோலில் சுருக்கங்கள் (Puckering) அல்லது குழிகள் (Dimpling) காணப்படுதல்.

# உடல் உறுப்புகளின் சீரான செயற்பாட்டுக்கு நற்சீரகம்

## கற்பூரவல்லி

வேறுபெயர் - கற்பூரவல்லி, ஓமவல்லி
தாவரவியற் பெயர்- Anisochilus Carnosus (அனிசோகிலஸ் கார்னோசஸ்)
குடும்பம்- Labiatae (லேபியேற்றே)
சிங்களப் பெயர்- கப்பர வள்ளிய
சமஸ்கிருதப் பெயர்- இந்து பர்ணி
ஆங்கிலப் பெயர்- Country Borage

குழந்தை மருத்துவத்தில் முக்கியமான மூலிகை. சிறுசெடி நிலத்தில் படர்ந்து வரும். இலை, தண்டு என்பன பச்சை நிறம். தனி இலைகள் சதைப்பற்றானவை. இலையை ஒடித்தால் கற்பூர மணம் உண்டாகும். பூக்கள் நீலநிறம். (வல்லி என்றால் கொடி, கற்பூர மணமுடைய கொடி என்பதால் கற்பூர வல்லி எனப்படுகிறது.



இதன்இலையைலேசாக வாட்டி வெள்ளைத் துணியில் வைத்துச் சாற்றை பிழிந்தெடுத்து கற்கண்டு சேர்த்துக் குழந்தைகளுக்குண்டாகும் இருமலுக்குக் கொடுக்கலாம்.

பெரியவர்களுக்குக் காணப்படக்கூடிய நாள்பட்ட சளிக்கு தினமும் இதன் இலைகளில் 1,2 ஐ கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டு வர விரைவில் குணமேற்படும். கற்பூரவல்லி இலைச் சாற்றை நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி , அந்த எண்ணெயைத் தலைக்கு வைத்து வரத் தலைநீரேற்றம், பீனிசம், மூக்கடைப்பு, மூக்கால் நீர் வடிதல் என்பன குணமடையும்.

## சீந்தில்

வேறு பெயர்- அமிர்த வல்லி, சோமவல்லி, அமுதவல்லி
தாவரவியற் பெயர்- Tinospora cordifolia (ரைனோஸ்போரா கோடிபேலியா)
குடும்பம்- Menispermaceae (மெனிஸ்பேமேசியே)
சிங்களப் பெயர் - ரஸகிந்த
சமஸ்கிருத் பெயர்- அமிர்தா, குடுச்சி
ஆங்கிலப் பெயர்-Heart Leares Moon seed

இது கொடி வகையைச் சேர்ந்தது. பிற தாவரங்களைச் சுற்றி வளரும். தனி இலைகள். இதயவடிவானவை. நுனி கூர்மையாக இருக்கும்.

சீந்திலில் சாதாரண சீந்தில், பொற் சீந்தில், பேயச்சீந்தில் என்ற வகைகள் உண்டு. இதில் சீந்தில், பொற்சீந்தில் இரண்டும் ஏறத்தாழ ஒரே விதமான மருத்துவக் குணமுடையவை.

பேய்ச் சீந்தில் என்பது ஆகாசகருடன் என்றும் கொள்ளன் கோவை என்றும் அழைக்கப்படும் . அதன் குணங்கள் வித்தியாசமானவை.

சீந்தில் இலை,கொடி, வேர் என்பன மருத்தவத்தில் பயன்படுகின்றன.

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் நீர்த்தோஷம், மூக்கடைப்பு, சளி என்பனவற்றுக்கு சீந்தில் இலையை வாட்டி தலையில் அல்லது மார்பில் போட்டு வர மாறும். சீந்திலில் முற்றிய கொடியே மருத்துவத்தில் பயன்படுகிறது. இதிலிருந்து எடுக்கப்படும் வெண்ணிறமான மாப் போன்ற பதார்த்தம் சீந்தில் சக்கரை (அமுதச்சக்கரை) எனப்படுகிறது. இது மதுமேக நோயினால் ஏற்படும் நீர் வேட்கை, கை கால் எரிவு என்பற்றுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. சீந்தில் தண்டு, கொத்த மல்லி,அதிமதுரம் என்பவற்றைச் சமவளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை மாலை பருகி வர சுரம், செரியாமை, வயிற்றுப் பெருமல் என்பன நீங்கும்.

## நற்சீரகம்

வேறு பெயர்- போசனகுடேரி, அசை, சீரி
தாவரவியற் பெயர்- Cuminum Cyminum (கியுமினம் சைமினம்)
குடும்பம்- Umbelli Ferae (அம்பெலி பேரே)
சிங்களப்பெயர்- சூதுரு
சமஸ்கிருதப் பெயர்- ஸ்வேத ஜீரக
ஆங்கிப் பெயர்- Cumin Seed

இது சிறு பூண்டு வகையைச் சேர்ந்தது. தண்டு, இலைகள் என்பன பச்சை நிறம். இலைகள் வெட்டுண்டு சிறைப் பிரிப்பாகக் காணப்படும். பூந்துணரில் சிறிய மஞ்சள் நிறப் பூக்கள் காணப்படும். இதன் விதை மருந்தாகப் பயன்படுகிறது.

நற்+சீர்+அகம்= உடலின் அகத்தை- உள்ளுறுப்புக்களைச் சீராக நல்ல நிலையில் பேணுவது என்ற கருத்தில் இது நற்சீரகம் எனப்படுகிறது. இது உணவாகவும் மருந்தாகவும் பயன்படும் ஒரு மூலிகையாகும்.

சீரகத்தைத் தினமும் உணவில் அளவுடன் சேர்த்து வந்தால் அசீரணம், வயிற்றுப் பொருமல், வயிற்று மந்தம், பித்தக் கோளாறுகள் என்பன ஏற்பட மாட்டாது. சீரகத்தைப் பொடி செய்து கற்கண்டு சேர்த்துச் சாப்பிட இருமல் தணிவடையும். சீரகத்தைப் பொடி செய்து பசு வெண்ணெயுடன் சாப்பிட்டுவர வயிற்று நெரிவு, வயிற்றுப் புகைச்சல், எரி குன்மம் என்பன நீங்கும். 50 கி சீரகத்தை நல்லெண்ணெய் 1லீ இல் இட்டுக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொண்டு தினமும் தலைக்கு வைத்து வர தலைவலி, கண் குத்து , கபாலக்குத்து, மந்தம் என்பன தீரும். சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலரிசி என்பவற்றைச் சமவளவில் எடுத்து தூள் செய்து 500 மி.கி. அளவில் சுடு நீரில் காலை, மாலை சாப்பிட்டு வா செரியாமை, வயிற்றுப் பெருமல், வாய்வு முதலிய நோய்கள் மாறும்.




Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 170



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. விடயம்
4.வாசலில் இருக்கும்
6.வர்த்தகம்
8.பொருந்த, ஏற்ப, தக
10. தாய்மைப் பேறின் ஆரம்பம்
11. விலங்கு
13.அரைவாசி
14.நிலத்தட்டுக்கு மேல் இருப்பது
15.நல்லதைக் குறிக்கும்
17.மகாபாரதம், இராமயணம் எல்லாம் இந்த வகையைச் சார்ந்தவை.
19. விழி
20. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
21. ஒட்டியிருந்து தொல்லை தருவது
22.ஒரு பாத்திரம்
23. நிலத்தில்

### மேலிருந்து கீழ்

1. ஏழாவது திதி
2. பாடல்
3. ஈகை, ஈகம்
4. சமையலறையிலும் குளியலறையிலும் தொல்லை தருவது
5. கணவன், மனைவி
7. நோகசு
9. அந்தியேட்டி போன்ற கிரியை
12. மணிக்கூடு
15. எம்முடையது என்பதைக் குறிக்கும்
16. வானத்தில்
17. அங்கு அல்ல
18. மறைவில் தீட்டப்படுவது
19. மிருகங்களைப் பிடிப்பதற்கு வைக்கும் தடம்
21. சாப்பிடு

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிர சுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 170**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*

இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 20.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7.சொற்சிலம்பம் போட்டி இல.170 க்கான விடைகள் 24-07-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 168 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) சீவகசிந்தாமணி (7)வடிவம் (8)தினை (9)சமன் (10)யாசி. (12) தகும். (13)வேள்வி (14) முரண். (15)காலை. (16) டமார். (19) பாவலன். (21) பருகி. (23)திடும். (24)அறிவிலி.

### மேலிருந்து கீழ்

(1)சீவல் (2)வடி. (3)கவசகுண்டலம். (4)சிம்மம் (5)தாதி (6)மனையாள் (11)சிவிகை. (12)தர (13)வேலை (14)முன்பாதி (15)கார் (17)மான் (18)அருவி (20)வடு. (21)பறி. (22)கிலி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 168 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **அ. திரேஸ்நேருஜினி,** 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

2 ஆம் பரிசு — **தி.செல்வராணி,** 121/13 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

3 ஆம் பரிசு — **த.டிலக்சனா,** மு.ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை, புத்துவெட்டுவான்.

4 ஆம் பரிசு — **க.தர்மலிங்கம்,** 43, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **இ.மேகலா,** வளலாய் கிழக்கு, அச்சுவேலி.

### பாராட்டுப் பெறுவோர்

**திரு.கு ஜெயகோபன்,**
11/1 R.D.D விடுதி, வவுனியா.

**யோ.கோமஸ் கொலகியர்,**
6 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

**க.ஞானோதயன்,**
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# ஒரு புதிய...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விற்றுக்கொண்டிருந்தான். அவனது வீட்டுக்கு வருகிற ஆசாமிகள் கஸ்தூரியைப் பார்க்கிற பார்வையே சரியில்லை. எல்லோருமாகக் கூடி அவளையும் ஒரு விற்பனைப் பொருளாக்கி விடுவார்களோ என்று அவள் அச்சப்பட்டாள். வீட்டில் வந்து குடியேறிய தெருநாய் ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து அதன்பின் மனிதரையும் கடிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

கஸ்தூரி முன்னெச்சரிக்கையாக இருந்ததால் தலையைக் குறிவைத்து எறியப்பட்ட கல் தலைப்பாகையைத் தட்டிக்கொண்டு போனது. பணம் கொடுத்து பசிதீர்க்க வந்த ஆசாமிக்குப் பச்சை தண்ணீரும் கிடைக்கவில்லை. அம்பு எய்தவனிடமே ஆவேசமாகத் திரும்பி வந்து மோதியது.

மன அடுப்பில் சூடு ஏறிக்கொண்டிருந்த ஆத்திரத் தண்ணீரின் வெப்பநிலை கொதிநிலைக்கு ஏறியது. மோகன் கஸ்தூரியை முரட்டுத்தனமாகத் தாக்கினான். ஒரு வயதுகூடச் சரியாக நிரம்பாத அவளுடைய பெண் குழந்தை இதனைப்பார்த்து வீறிட்டு அலறியது.

மோகனின் கோபம் குழந்தையின் பக்கமாகத் திரும்பியது பாய்ந்து சென்று பிள்ளையை உதைந்துத் தள்ள காலை வீசினான். அந்த ஒரு கணத்தில் தாய்மை புலியாகப் பாய்ந்தது. கதவு ஓரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவுக்குப் போடுகின்ற வார்த்தடி அவளுடைய கைக்கு மாறியது. அடுத்த விநாடியே அந்த வார்த்தடி மோகனின் காலைப் பதம் பார்த்தது.

கஸ்தூரி கொடுத்த அடியினால் மோகன் அலறியபடி சுருண்டு விழுந்தான். தன்னுடைய குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள். நேராகச் சித்தியிடம் வந்து சேர்ந்தாள். வீட்டில் அப்பா இருக்கவில்லை. மோகனைத் தான் அடித்து முறித்து போட்டு விட்டு வந்தித்ப்பதாகச் சொன்னாள். அதைக் கேட்டு சித்திக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. என்ன செய்வதென்று ஒரு நிமிடம் யோசித்தாள்.

''அடிப் பாவி மகளே! ஒருவேளை நீ மோகனை அடித்துக் கொலை செய்து விட்டாயோ? இப்பொழுது இங்கே வந்து எங்களையும் கொலையில் மாட்டி விடப்பார்க்கிரியா? உடனே இங்கிருந்து போய்விடு இல்லாவிட்டால் உன்னைக் காவல் துறையிடம் பிடித்துக் கொடுத்துவிடுவேன்'' என்று கூறி கஸ்தூரியை உள்ளே எடுக்காமற் துரத்திவிட்டாள். கைப்பிள்ளையோடு கண்ணீர் சோர வீதியில் இறங்கிய கஸ்தூரி கால் போன திசையில் நடக்கத்தொடங்கினாள். மீள முடியாத துன்பத்தின் நடுவிலும் ஓர் அதிர்ஷ்டம் இருக்கத்தான் செய்தது. வீதியோரமாகச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு விளம்பரப் பலகை எதேச்சையாகக் கண்ணிற்பட்டது. பாதிக்கப்பட்ட மகளிர் புனர்வாழ்வு நிலையம் என்ற அந்த விளம்பரப்பலகை கஸ்தூரியை உள்ளே வா என வரவேற்பது போல இருந்தது. எந்தத் தயக்கமும் இன்றி உள்ளே நுழைந்தாள். அங்கேயிருந்த மேற்றன் அவளைப் பார்த்ததுமே அவளுடைய நிலைமையை ஓரளவு ஊகித்துக்கொண்டார். கஸ்தூரிக்கு அந்த இல்லத்தில் தங்குவதற்கு அனுமதி கிடைத்தது. இதற்கிடையில் கஸ்தூரியிடம் அடிவாங்கிய மோகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

மருத்துவமனையில் மோகனிடம் இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று விசாரித்தார்கள். பல குற்றங்களில் ஏற்கனவே மோகன் சம்பந்தப்பட்டிருந்தான். அதனால் உண்மையான காரணத்தைச் சொல்லி வம்பை விலைக்கு வாங்கிக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஏதே ஒரு சாட்டுப்போக்குச் சொல்லி அவன் மழுப்பிவிட்டான்.

இறைவனால் கொடுக்கப்பட்ட கஸ்தூரி என்னும் செல்வத்தைச் சீரழித்த மோகன் தன் வாழ்க்கையையும் சேர்த்துக் குட்டிச்சுவராக்கி விட்டான். இப்போது அவனை ஆதரிப்பார் யாருமில்லை. ஊன்று கோல்களைத் தாங்கிய படி தாண்டித்தாண்டி நடக்க வேண்டிய துர்ப்பாக்கியம் அவனுக்குக் கிடைத்திருக்கின்றது.

கஸ்தூரி உறுத்தும் பல நினைவுகளோடு அவள் கடந்த காலத் துயரங்கள் மீதில் ஒரு பயணத்தை நடத்தினாள். அப்பா, சித்தி, கணவன் என்ற வேதனைச் சங்கிலிகள் நீண்டன. எல்லா வேதனைகளையும் ஆறுதல்படுத்தப் பிறந்த தன் கையில் ஏந்திய செல்விக்காக அவள் வாழத்தானே வேண்டும். உறவுகள் தொலையாகிப் போனாலும் வாழும் து[illegible] கஸ்தூரி தனித்துப் போராடி வாழப் புறப்பட்டுவிட்டாள். ★

# சிலப்பதிகாரத்தின்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசம்பந்தருக்கும், நாவுக்கரசருக்கும் பிற்பட்டவரான சுந்தரர் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்தில் பௌத்த, சமணர்கள் பற்றிய குறிப்புக்கள் எதுவுமில்லை.

ஞானசம்பந்தரதும் நாவுக்கரசரதும் பரமனவரிகளாக சமணர்களே விளங்கியிருக்கின்றனர். ஞானசம்பந்தர் பாடிய இரண்டு ஈழத்துத் திருத்தலப் பாடல்களில் பௌத்தர்களையும் இணைத்தே பாடியுள்ளமை ஆராயத்தக்கது.

*''புத்தராய்ச்சில புனை துகிலுடையவர்*
*புறனுரைச் சமணாதர்*
*எத்தராகி நின்றுண்பவரியம்பிய*
*வேழைமை கேளேன்மின்...''*

*என்று திருக்கேதீச்சரப் பதிகத்திலும்*

*''நின்றுணுஞ் சமணுமிருந்துணுந்தேரும்*
*நெறியலாதன புறங்கூற*
*வென்று...''*

*என்று கோணேச்சரப் பதிகத்திலும் பாடுவதற்கு சிலப்பதிகார வரந்தரு காதையில் வரும் 'கடல்சூழ் இலங்கை கயவாகும் வேந்தனும்'* (சிலம்பு. வரந்தருகாதை, 160) எனும் அடியின் முக்கியத்துவமும் ஒரு காரணமாகலாம்.

சிலப்பதிகாரத்தின் ஆற்றலால் இலங்கையில் செல்வாக்குப் பெற்ற கண்ணகி வழிபாட்டை ஞானசமபந்தரால் இல்லாமற் செய்துவிட முடியவில்லை. இலங்கைச் சிங்கள மக்களும் கண்ணகியைப் ''பத்தினித் தெய்யோ'' என்று போற்றி வழிபாடாற்றுகின்றனர். ஐந்தாங்குரவரான ஆறுமுக நாவலர் (1822-1979) கண்ணகி வழிபாட்டை இலங்கையில் இல்லாமற் செய்ய எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. மாறாக, 'கண்ணகி' 'கண்ணகை அம்மன்' ஆகப் பிரதிட்டை செய்யப்பட்டு ஞானசம்பந்தர் முதலானோரது திருமுறைகள் அவள் ஆலயங்களிலும் ஓதப்படுவதனையே காண்கின்றோம்.

*தேவாரத்தை வேதசாரமென்று கூறலாம் என்றால்- இத் தேவாரத்தை சிலப்பதிகாரத்தின் எதிரொலி எனக் கூறுவதில் தவறென்ன இருக்கிறது என்றும் கேட்கத் தோன்றுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 25

# உறவுகளைப் புரிந்து கொள்ள ....

நமது நாளாந்த வாழ்க்கை உறவுகளை அடிப்படையாகக் கொண்டது. பலதரப்பட்ட உறவுகளை நாம் சந்திக்கின்றோம். அவை குடும்பங்களிலும் வேலைத் தளங்களிலும் நண்பர்கள் வட்டத்திலும் வீதிகளிலும் எனப் பல பரிணாமங்களைப் பெறுகின்றன.

உறவுகளை ஆரம்பிப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் நாம், எமது குறிப்பிடத்தக்களவு நேரத்தையும், சக்தியையும்,. பணத்தையும் பயன்படுத்துகின்றோம். இவ்வாறான பல பயனுள்ள உறவுகளால் எமக்கும் எமது உறவுகளுக்கும் சமுதாயத்துக்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் எமக்குப் பயனளிக்காத சில உறவுகளை நாம் தொடர்வதில்லை. பலருக்குக் கெடுதலை ஏற்படுத்தக் கூடிய சில உறவுகளும் உருவாவதுண்டு.

உறவுகளை உருவாக்குவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் அவசியமான சில காரணிகளை ஆராய்வோம். இவற்றில் உறவுகளை உருவாக்குவதற்குத் தனிமனிதர்கள் செலுத்தும் ஆர்வம், அவற்றுக்காகப் பயன்படுத்தக்கூடிய நேரம், ஒத்த ஆளுமைக் கூறுகள் ,உறவுகள் உருவாவதற்கான புறச்சூழல், உறவுகளில் தங்கியிருக்க வேண்டிய தனி மனிதர்களின் தேவை, அந்த உறவுகளைப் பேணுவதற்காக அவர்களால் பயன்படுத்தக்கூடிய வளங்கள் மற்றும் உறவுகளின் திருப்தியளிக்கும் தன்மை என்பன, உறவுகளின் நீண்டுநிலைக்கும் தன்மையை எடுத்தியம்பவல்லன. தொடர்பாடலை உளவியல் ரீதியாக நோக்கினால் அது ஒரு மனிதன் தன்னோடு தான் கொள்ளும் உறவு என்றும் பிறரோடு கொள்ளும் உறவு என்றும் வகைப்படும். இவையிரண்டும் ஒன்றிலொன்று தங்கியிருப்பவையும், ஒன்றினால் மற்றொன்று பாதிக்கப்படுபவையுமாகும். உதாரணமாகத் தன்னுடன் நல்லுறவைப் பேணும் ஒருவரால் பிறருடனும் நல்லுறவைப் பேணமுடியும். ஒருவர் தன்னுடன் பேணும் உறவிற்கு அடிப்படையாகத் அவருடைய குழந்தைப் பருவ அனுபவங்கள், தன்னைப்பற்றிய சுயமதிப்பு, சுயநோக்கு, குற்றவுணர்வுகள் ஏற்படுத்தும் தாக்கம் நனவிலி மனதின் பங்களிப்பு மற்றும் அவருடைய தன்னைப் பற்றிய விழிப்புணர்வின் அளவு என்பன அமைவதை அவதானிக்கலாம். சில மனிதர்களின் ஆளுமைக்குள் உள்ள பிளவுபட்ட தன்மை, ஒன்றையொன்று எதிர்க்கும் பாங்கில் அமைவதால் அவர்களால் தம்முடன் ஒரு நல்லுறவைப் பேணுவது சிலவேளைகளில் சவாலானதாக அமையலாம்.

இவ்வாறான விடயங்களில் தங்கியிருக்கும் ஒரு மனிதனின் அடிப்படை ஆளுமையிலேயே பிற மனிதர்களுடனான உறவும் தங்கியிருக்கும். மேலும் இவ்வுலகைப்பற்றியும் உறவுகளைப் பற்றியும் தேவைகளைப் பற்றியும் நிலவும் மனிதர்களின் மனப்பாங்கும் மற்ற மனிதர்களுடனான அவர்களது உறவை நிச்சயிக்கின்றன. அடுத்ததாகத் தொடர்பாடலின் சில அடிப்படைகளையும் அவற்றை மேம்படுத்துவதற்கான சில வழிமுறைகளையும் ஆராய்வோம்.

(1) தொடர்பாடலில் கையாளப்படும் விடயத்தின் சார்புநிலை.

| A • | • X | • B |
|---|---|---|

மேலே காட்டப்பட்ட வரைபடத்தில் A யும் Bயும் தொடர்பாடலில் ஈடுபடும் இரு நபர்களாயின் X என்பது தொடர்பாடலில் கையாளப்படும் விடயத்தின் சார்பு நிலையாகும். இங்கு X என்பது A இற்கு அருகில் இருக்கும் போது அத் தொடர்பாடல் A இற்கு இலகுவானதாகவும் B இற்கு கடினமானதாயும் அமையும். Aக்கும் Bக்கும் சமதூரத்தில் X இருக்கும் போது இருவரும் சம ஈடுபாட்டுடன் தொடர்பாடலில் ஈடுபட முடியும். பலமான ஆளுமை மிக்கவர்களால் தன்னுடன் தொடர்பாடலில் ஈடுபடும் மற்ற நபருக்கு அருகில் தொடர்பாடல் மையம் இருக்கும்போது ஆரோக்கியமான தொடர்பாடலில் ஈடுபட முடியும்.

$$\frac{\text{உறவிலிருந்து A பெற்றுக்கொள்ளும் திருப்தி}}{\text{உறவுக்காக A பயன்படுத்தும் சக்தி}} = \frac{\text{உறவிலிருந்து B பெற்றுக்கொள்ளும் திருப்தி}}{\text{உறவுக்காக B பயன்படுத்தும் சக்தி}}$$

மேற்படி சமன்பாடு உறவுகளைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமானது. உறவொன்றுக்காக ஒருவர் பயன்படுத்தும் சக்திக்கும் அவர் பெறும் திருப்திக்கும் உள்ள விகிதம் அவ்வுறவிலுள்ள பிறிதொருவர் பயன்படுத்தும் சக்திக்கும் அவர் பெறும் திருப்திக்கும் ஓரளவிலேனும் சமமாக அமையும் போது தான் உறவுகள் நீண்டு நிலைக்கும்.

(3) தன்னை வெளிப்படுத்தலும் நம்பிக்கையைப் பேணுதலும் நெருக்கமான உறவொன்றில் மிகவும் முக்கியமானது. மேலும் சுயவெளிப்பாடு நெருக்கமான உறவுகளுக்குரிய திறவுகோலாகவும் அமைகின்றது.


தன்னைச் செவிமடுப்பவரின் நம்பகதன்மைகளில் இரகசியமாகக் காக்கப்பட வேண்டிய பல விடயங்களைப் பழக்க தோஷத்தால் பலருக்கும் கூறி பல நெருக்கமான உறவுகளை நாம் இழந்து விடுவதும் உண்டு.

(4) உடலின் மொழியும் உணர்வு வெளிப்பாடும்.

வார்த்தைகளால் சொல்ல முடியாத பல செய்திகளை எமது உடல் அவயவங்கள் பிறருக்குத் தெளிவாகச் சொல்கின்றன. கண்கள் இவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன. நாம் நிற்கின்ற தோரணை, நடக்கும் பாங்கு, இருக்கும் விதம் பேசும் தொணி, அணியும் ஆடைகள் என்பன எமது உண்மையான மனநிலையை வார்த்தைகள் இன்றியே விளம்பக் கூடியவை.

துரதிஷ்டவசமாக நாம் வாயால் சிலவற்றைக் கூறும்போது எமது உடல் அதை மறுத்துரைப்பதை மற்றவரால் இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும்.

(5) தொடர்பாடல் வலயங்கள்




பொதுசன உறவு வலயம்
(INTIMATE ZONE)

A- நெருக்கமான உறவு வலயம்

இது ஒருவரைச் சூழ இருக்கும் ஒன்றரை அடி விட்டமுள்ள வட்டப் பிரதேசமாகும். எம்முடன் நெருக்கமான உறவில் உள்ள ஒரு வரையே நாம் இவ் வட்டத்தினுள் அனுமதிப்போம். மேலும் சில வேளைகளில் நெருக்கமான உறவில் உள்ள இருவர் ஒருவர் மற்றவரை இவ்வலயத்திலிருந்து வெளியேறவும் அனுமதிப்பதில்லை. எமது சமுதாயத்தில் நாம் எம்மை அறியாமலேயே காதலர்களை இனங்காணுவது இந்த வலயத்தை இனங்காண்பதனாலாகும்.

B தனிப்பட்ட உறவு வலயம் (Personal Zone)

இது ஒருவரைச் சூழவுள்ள 3 அடி விட்டமுள்ள பிரதேசமாகும். நெருக்கமான உறவு அல்லாத ஆனால் தனிப்பட்ட உறவில் எம்மோடு இணைபவர்கள் நம் இந்த வலயத்தினுள் வருவார்கள். சாதாரணமாக நண்பர்கள் இந்த வலயத்துக்குரியவர்கள்.

C) சமூக உறவு வலயம் (Social Zone)

இது ஒருவரைச் சூழவுள்ள 6 அடி விட்டமுள்ள பிரதேசமாகும். சமூக உறவில் எம்முடன் இணைபவர்களுடன் நாம் இந்தப் பிரதேசத்தைப் பயன்படுத்துகின்றோம்.

D) பொதுசன உறவு வலயம் (Public Zone)

இது ஒருவரைச் சூழவுள்ள 6 அடி விட்டமான பிரதேசத்துக்கு வெளியில் உள்ள வலயமாகும்.

பொருள் பொதிந்த உறவுகளைப் பேணிப் பயனுள்ள பல பணிகள் புரிய எமது உறவுகளைப் புரிந்து கொள்வோம். ✱

வைத்திய கலாநிதி
ஜி.ஜே. பிரதீபன் MBBS, MD

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 10

மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.

சமயப் பெரியார்கள் பலர் மக்களினுடைய நோய்களைக் குணப்படுத்திய வரலாறுகள் பல எம் மத நூல்களிலே காணப்படுகின்றன. உதாரணமாகக் கி.பி. 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வாழ்ந்த திலகவதியார், அப்பர் சுவாமிகளது சூல நோயைக் குணப்படுத்தியிருக்கிறார். சூலநோய் என்றால் என்ன? அது வயிற்றிலே அதாவது இரப்பையிலும் முன் சிறு குடலிலும் ஏற்படும் புண் அல்லது அழற்சி நிலையாகும். இதனை ஆங்கிலத்திலே கஸ்றைற்றிஸ் (Gastritis) என்று சொல்வார்கள். சூலநோயின் போது அப்பர் சுவாமிகளுக்கு ஏற்பட்ட அறிகுறிகள் அனைத்தும் கஸ்றைற்றிஸ் நோயின் அறிகுறிகளை ஒத்ததாகவே இருந்தன.

அப்பர் சுவாமிகளுக்கு அவர் தனது மனச்சாட்சிகளுக்கு விரோதமாகச் செயற்பட்டதால் மன அழுத்தம் ஏற்பட்டு அது சூலநோயாக உருவெடுத்தது. சூல நோய் வந்ததற்கான அடிப்படைக் காரணமான மன அழுத்தத்தை திலகவதியார் உளவளத்துணை மூலமாகப் போக்குகின்றார். அத்துடன் திருநீற்றை ஒழுங்கு விதிக்கமைய அப்பர் சுவாமிகள் வாயில் போடுகின்றார். தூய்மையான திருநீறு காரத்தன்மையானது. இது வயிற்றில் இருக்கும் அமிலத் தன்மையைக் குறைத்து வயிற்று நோவைக் குறைக்கவல்லது. இந்த வகையான மருந்துகளைத்தான் நாம் அன்ரசிட்ஸ் என்று சப்பிச் சாப்பிடும் குளிசையாகவும், பாணிமருந்துகளாகவும் பாவித்துக் கொண்டிருக்கின்றோம்.

கடுமையான நோய்வாய்ப்பட்டு ஒருவர் படுக்கையில் இருக்கும் பொழுது பண்ணிசை பாடும் மரபு அல்லது திருமுறைகள் ஓதும் மரபு அன்றுதொட்டு இருந்து வருகின்றது. கிறிஸ்தவ மதத்திலும் இந்த மரபு இருந்துவருகிறது. இந்த இனிமையான அமைதியான இசையானது மனிதனின் உடல் வலியையும் மனவலியையும் குறைக்கவல்லது . அமைதியான இசை ஒருவர் குணப்படும் வீதத்தை அதிகரிக்கிறது எனச் சில ஆராய்ச்சிகள் சொல்கின்றன. நோயாளிகளின் பராமரிப்பிலே நவீன மருத்துவ முறைகளில் கூட இசையின் பங்கு அதிகரித்து வருகிறது.

மதத்துக்கும் மருத்துவத்துக்கும் இருக்கின்ற நெருக்கம் பற்றிச் சொல்லிக் கொண்டே போகமுடியும். இதனால் மட்டும் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. இனி நாம் என்ன செய்யப் போகின்றோம் என்பதே இன்று முக்கியமானதாகி நிற்கின்றது. சரித்திர காலத்தில் கூட சந்தித்திராத பல சோக வரலாறுகளைச் சுமந்து நொந்துபோன ஒரு நோய் வாய்ப்பட்டுப்போன சமுதாயமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளைக் கூடச் சரியான முறையில் செய்யாமல் விட்டுவிட்டோமோ என்ற குற்ற உணர்வு இருந்து கொண்டிருக்கின்றது. எமது சமூகக்கட்டமைப்புக்கள் உருக்குலைந்து போயிருக்கின்றன. எமது கலாசார விழுமியங்கள் சிதைந்து சின்னாபின்னமாகப் போயிருக்கின்றன. மனிதனை மனிதன் மதிக்கும் மனிதத்துவம் கெட்டுப் போயிருக்கின்றது.

(தொடரும்)

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**இதுவரை கிடைக்கப்பெற்ற SMS முடிவுகள்**

| | | |
|---|---|---|
| 'A' | 78 பேர் | 91.7% |
| 'B' | 4 பேர் | 4.7% |
| 'C' | 1 பேர் | 0.01% |
| 'D' | 3 பேர் | 3.52% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டிய அரங்கேற்றம்



'நாட்டிய கலாமந்திர்' இயக்குநர் 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவியரான சிவகாமி-சிவப்பிரியா சகோதரிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 16.07.2011 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

புதுடில்லியைச் சேர்ந்த புகழ்பெற்ற பரதநாட்டிய தாரகை ஸ்ரீமதி ரமா வைத்தியநாதன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். 'வீரகேசரி' பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநரும், இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைவருமான எஸ்.குமார் நடேசன் கௌரவ அதிதியாகவும் அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்பு அதிதியாகவும் இந்த நிகழ்வில் பங்குபற்றுவர்.

உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் ந.வித்தியாதரன்-இரத்தினகலா தம்பதியரின் புதல்வியர்களான சிவகாமி, சிவப்பிரியா ஆகியோர் முறையே கொழும்பு விச்சளி சர்வதேச பாடசாலை, கொழும்பு பீவர் சர்வதேச பாடசாலை ஆகியவற்றின் மாணவியராவர்.

# அறியாமை இருளைப் போக்கும் பத்திரிகை வாசிப்புப் பழக்கம்

ஆதியில் பத்திரிகைகளின் படைப்பு, மக்கள் அதற்கு அளித்த கௌரவம், கற்கைநெறிகளுக்கு உதவுகின்ற பத்திரிகைகள், நூல்கள் என்பவை பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும். பத்திரிகையை எழுத்துப் பிழையின்றி வாசிப்பதனால் உண்டாகும் நன்மைகள் அளப்பெரியவை என்பதைக் கவனத்தில்கொள்வது நன்மை பயக்கும்.

ஆன்மிகவாதிகளின் கூற்றின் பிரகாரம் ஆதாம்-ஏவாள் காலத்துக்குப் பின்னரே பைபிள், பகவத்கீதை, புராண இதிகாசங்கள் தோன்றினவாம்.

மொழியின்றிப் பத்திரிகையோ நூல்களோ தோன்றியிருக்க வாய்ப்பில்லை என்றும் கூறலாம். ஆகவே மொழி தோன்றிய பின்னர் உலக மக்கள் பத்திரிகைகளுக்கு உகந்த கௌரவத்தை நல்கினர் என்பது கண்கூடு.

காலப்போக்கில் உலக மொழிகள் அனைத்திலும் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இதனை நாள்தோறும் அச்சிட்டு விற்பனைக்கு சந்தைப்படுத்தியதால் கல்லூரி மாணவர்கள் தொடக்கம் அனைத்துத் தரப்பினரும் வாசிக்கத் தலைப்பட்டனர். இதனால் உலகப் புதினங்கள் மட்டுமன்றி நாளடைவில் மதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், தாவரவியல், பௌதீகவியல், சட்டம், விளையாட்டு, சினிமா போன்ற துறைகளுக்கென்று பத்திரிகையில் பிரத்தியேக பக்கங்கள் ஒதுக்கப்பட்டன.

பத்திரிகை மூலம் சொல்லறிவும், கல்வியும் விருத்தியடைந்து கொண்டே செல்கின்றன என்று கூறினாலும் மிகையாகாது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றபின் பல்கலைக்கழகம் செல்கின்றான். அங்கு பட்டப்படிப்பை நிறைவு செய்துகொண்ட பின் மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ வெளியேறித் தாய் நாட்டுக்குச் சேவை செய்யத் தலைப்படுகின்றான். இதற்கு அவன் பத்திரிகையிலிருந்து பெற்ற அறிவும் ஓரளவுக்குக் கைகொடுத்து உதவியது எனலாம். பத்திரிகை வாசிக்கும் திறனும் கற்றலின் ஒரு பகுதியே. இது தொடரப்படும்போது உலக விடயங்களை அறிந்துகொள்ள முடியும். இது எமக்கு எந்த வேளையிலும் பக்கதுணையாக இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

நாம் பத்திரிகையில் வாசித்த விடயம் மேலும் பல விஷயங்களை அறிய உதவுகின்றது. பத்திரிகை வாசிக்கும் கலையின் நிமித்தம் எல்லையற்ற அறிவுக்கடலில் நீந்துகின்றோம். ஒருவர் பத்திரிகையைத் தானே வாசிக்கும்போது சில சொற்பிழைகள் ஏற்படும். இந்தத் தவறால் அர்த்தங்கள் முழுமையாக மாறிவிடலாம். இதில் கூடிய அவதானம் தேவை.

ஒவ்வொரு மனிதனுக்கும் பத்திரிகை வாசிப்பானது முக்கியமான ஒன்று. புத்திஜீவிகள் அனைவரும் இதனை ஒப்புக்கொள்கின்றனர்.

வாழ்நாளில் பத்திரிகையைக் கையில் எடுக்காதவன் அறியாமையினால் உழல்வான். மற்றவர் ஏமாற்றும் தன்மைக்கு இது வித்திட்டுவிடும். எனவே ஓய்வுநேரத்திலாவது பத்திரிகையைக் கையில் எடுத்து அறியாமை என்னும் இருளைப் போக்கிடவேண்டும். பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதற்கு பொருளாதாரச் சிக்கல் தடையாகவிருப்பின் பொது நூல் நிலையங்களுக்குச் சென்று வாசிக்கலாம். பத்திரிகைகளைப் புறம் தள்ளுவது அறியாமையை எடுத்துக்காட்டுகின்றது என்பது கல்விமான்களின் கருத்தாகும்.

அருணா தருமலிங்கம்,
வந்தாறுமூலை கிழக்கு, செங்கலடி.

# முத்துக்கு முத்தாக

ஐந்து ஆண்பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட நாள்களுக்கிடையில் அவர்களின் தாய், தகப்பன் படும் பாட்டையும், கடைசி நாள்களில் தமது பிள்ளைகளின் துணை இல்லாமல் நஞ்சு அருந்தித் தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ளும் நிலையையும் கூறும் கதைதான் இந்தப் படத்தின் கதை. இந்தப் படத்தின் கதையை ராசு- மதுரவன் இயக்க தாய் - தகப்பனாக, சரண்யாவும் - இளவரசும் நடித்திருக்கிறார்கள். இவர்களின் பிள்ளைகளாக நட்ராஜ், பிரகாஷ், விக்ராந்த், வீரசமர், ஹரிஸ் வாழ்கிறார்கள். ஒரு தாய் தகப்பன் ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்து ஆளாக்கப்படும்பாடு இருக்கிறதே, அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஆனாலும், அந்தப் பிள்ளையை வளர்ப்பதில் தமது கஷ்டங்கள் துன்பங்களை மறந்து விடுகின்றார்கள். அதே போலத் தான் முத்துக்கு முத்தாக படத்தின் கதையும்.

5 ஆண் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கக் கஷ்டப்படும் இளவரசும் சரண்யாவும் அந்தக் கஷ்டங்களைத் தனது பிள்ளைகளின் புன்னகையைப் பார்த்து மறந்து போகிறார்கள். பெண் பிள்ளைகளைப் பெற்றால் ஆண்டி ஆவான் என்று ஆரம்ப காலங் களில் பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் பட்ட கஷ்டத்தை வைத்துச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது ஆண் பிள்ளைகளைப் பெற்று கஷ்டப்படுகின்ற குடும்பங் களைப் பார்க்கின்றோம். ஆண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள், தமது குடும்பத் துக்கு ஒரு மகாராணி வந்து விளக்கு ஏற்றி வைப்பாள். மாமன், மாமியை கண்கலங்காமல் பார்ப்பாள் என்பதெல்லாம் மலையேறிவிட்டது.

இந்தப் படத்தில் ஆண் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டபோதும் ஒரு மருமகள் கூட மாமன் மாமியைப் பார்க்க முடியாமல் அதாவது, சரண்யாவும் - இளவரசும் தவிக்கின்ற காட்சிகள் ஒவ்வொன்றையும் அழகாக எடுத்திருக்கிறார் இயக்குநர். படத்தின் ஆரம்ப காட்சிகள் பிள்ளைகளுடன் பெற்றோர்கள் ஒன்றாக இருந்து உண்டு, மகிழ்ந்து உறவாடி வரும்போது அந்த வீடு ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் மகிழ்வுத் திருவிழாவில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்தைப் பார்க்கின்றபோது ஒரு குடும்ப உறவின் பலத் தைப் பார்க்கின்றோம். இந்தப் படத்தில் வரும் "மண்வாசம் வீசும் எங்க ஊரு, ஊருக் குள்ள அப்பாவுக்கு நல்ல பேரு" என்ற பாடலைக் கேட்கின்ற போது கண்ணீர் விடாதவர்கள் இருக்க முடியாது. தனது அப்பாவைத் தரக் குறைவாகப் பேசிவிட்டான் என்பதற்காக யாரோ ஒருவனை இழுத்துப் போட்டு அடிக்கும் காட்சி ஆண் பிள்ளைகளுக்கு இடையேயான அளவுக்கதிமான அன்பு, பாசத்தைக் காட்டுகிறது.

விமர்சனம்

இவ்வளவு பாசமுள்ள ஆண் பிள்ளைகள் அதே பாசத்தோடு வளர, இடையில் வரும் மருமகள்களான சுஜிபாலா, வர்ஷினி, ஜானகி, காயத்திரி, ஜெயலட்சுமி போன்றவர்களால்தான் குடும்பத்தில் பிரச்சினை வருகிறது. ஒவ்வொருவராக வீட்டைவிட்டு 4 ஆண் பிள்ளைகளும் வெளியேற ஒருத்தர் மட்டும் கடைசியில் கொலை ஒன்றைச் செய்துவிட்டு ஜெயிலுக்குப் போய்விட, கூட்டமாக வாழ்ந்த இல்லம் குருவிக்கூடு கலைந்தது போலாகிறது. காட்சி நகருகிறது. பாசத்தோடு இருந்த பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்காகச் சரண்யாவும் இளவரசும் அவர்களின் வீடுகளுக்குச் சொல்கிறார்கள். அங்கே மருமகள்களின் நஞ்சு கலந்த வார்த்தைகளே விருந்தாகிவிட, கண்ணீரும், கவலையுமாக ஊர் திரும்புகிறார்கள். ஷெனாயின் பின்னணி இசையில் அழுகிறது தியேட்டர். எத்தனையோ படங்களில் நடித்திருந்தாலும் இளவரசுக்கு இந்தப் படம்தான் பொருத்தமான சிம்மாசனம். சரண்யா கொடுத்தது நஞ்சு கலந்த உணவு என்று தெரிந்த பின்பும் ஆத்தா, கறிக் குழம்பு இன் றைக்கு அம்புட்டு ருசியாருக்கே... என்று பெருமையோடு உணவை விழுங்குகிற காட்சியில் தேம்பி அழவைக்கிறார்கள்.




சரண்யாவும் இந்தப் படத்தில் இன்னும் ஒருபடி மேலேறி கதற வைக்கிறார் . ஒரு புறம் மனசைக் கிள்ளிவிட்டு அழ வைத்தாலும் மறுபுறம் வயிற்றைக் கிள்ளிவிட்டுச் சிரிக்க வைக்கவென்றே கொண்டு வந்திருக்கிறார்கள் சிங்கம் புலியை. இந்தப்படத்தில் விக்ராந்த் - மோனிகா காதல் காட்சிகள் அழகுபடுத்தப்பட்டு, உணர்வோடு நகர்கின்றன. "என்ன பண்ணி தொலைச்சா" என்ற பாடல் இளம் உள்ளங்களின் மனதில் அடி ஆழ நரம்பின் அதிர்வில் கொள்ளை கொள்கிறது. விக்ராந்தைக் கேட்காமல் அவனுக்கு அத்தைப் பெண்ணை நிச்சயதார்த்தம் செய்கிறார்கள் சரண்யாவும் இளவரசும். பெற்றோர் மீது அதிக பாசம் வைத்திருந்ததால் தனது காதலைக் குழிதோண்டிப் புதைக்கிறான் விக்ரந்த். மோனிகாவின் தாய் தகப்பன் சிறு வயதிலேயே இறந்துவிட்டதால் விக்ரந்தை அதிகமாக விரும்பியிருந்தால் இந்த முடிவைத் தாங்கமுடியாமல்... விக்ரந்துக்கு அனுமதி கொடுத்துவிட்டுத் தனியவந்து குளறி அழுகிறாள். வீதியிலே கொதிக்கிற வெயில் காலத்தில் தர்ப்பூசனிக்கு மரியாதை. அதேபோல் குடும்ப உறவுகள் கேள்விக் குறியாக இருக்கும் இந்தக் காலத்தில்தான் இதுபோன்ற படங்களுக்கு வரவேற்பு. படத்தின் முடிவில் சிறையிலிருந்து மீண்டுவரும்போது வீரசமரை வெட்டுவதற்காக கொலையுண்ட ரகுவண்ணனின் அண்ணனும் அடியாள்களும் துரத்துகிறார்கள். இதற்கிடையில் அங்கே வந்த வீரசமரின் சகோதரர்களும் அதனைக்கண்டு சண்டையில் ஈடுபடுகிறார்கள். ரகுவண்ணன் செய்தது பிழை என்ற உண்மை ரகுவண்ணனின் அண்ணனுக்கும் அடியாள்களுக்கும் தெரியவர, வீரசமரையும் அவனது சகோதரர்களும் மன்னிப்புக் கேட்டுவிட்டு அந்த இடத்தைவிட்டு நகருகிறார்கள். சரண்யாவும்- இளவரசும் நஞ்சு அருந்தி இறந்தது தெரியாத 5 பிள்ளைகளும், ஒன்றாகத் தாய், தகப்பனைப் பார்க்க ஓடி வருகிறார்கள். அங்கே இருவரும் இறந்து கிடக்கிறார்கள். தாங்கள் விட்ட பிழையை நினைத்துக் கதறி அழுகிறார்கள். இன்றைய காலத்துக் குடும்பங்களில் இடம்பெறும் கதையைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்ல, தனது பணத்திலேயே இயக்குநர் படம் எடுத்திருப்பது வியக்கத்தக்கது. ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் கண்டிப்பாகப் பார்க்கவேண்டிய படம். ஒரு தாய், தகப்பன் ஆண் பிள்ளைகளைப் பெற்றுப் படும்பாட்டை இந்தப்படம் விவரிப்பதே சிறப்பு.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதம் எமக்கு ஏற்படுத்திய வலிகளை வாக்களிப்பின் மூலம் வெளிப்படுத்துவோம்

## கூட்டமைப்பு வேட்பாளர் சுஜீவன் கூறுகிறார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலி.வடக்குப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் சண்முகலிங்கம் சுஜீவன். இளம் வேட்பாளரான இவர் தனது எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து உதயனுக்கு வழங்கிய செவ்வி இங்கே.

கேள்வி: தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் போருடன் வரலாறு காணாத மிகப்பெரும் மானுட அவலத்தைச் சந்தித்த பின்னர் அதன் தாக்கம் இன்ன மும் அகலாத நிலையில் இந்தக் இரண்டரை ஆண்டுக்குள் அடுத்தடுத்துத் தேர்தல்களைச் சந்திக்க வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளார்களே. இது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: சுயாதீனமாகச் சிந்திப்பதற்கும், சுதந்திரமாக நடமாடுவதற்கும் இயல்பான அமைதியான நிலை இல்லாத ஓர் அசௌகரியமான அச்சுறுத்தல் நிலவும் சூழலில் 'ஜனநாயகம்' என்ற சொல் அதன் அர்த்தத்தை இழந்து அவலப்படுகின்றது. இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான அமைதிச் சூழலே இல்லை. அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமது பிரசாரக் கூட்டங்களை ஜனநாயக விரோத சக்திகள் குழப்பியதையும் அங்கிருந்த மக்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டதையும் அறிவீர்கள். இந்த அராஜக நிலை கிளிநொச்சிவரை தொடர்ந்து கொண்டே போகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் திராணியற்ற அரசு, எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபமெனத் தேர்தலை நடத்தி அச்சுறுத்தல் அரசியல் மூலம் அரசியல் அனுகூலங்களை அடைய முயல்கிறது. இந்தச் சூழலில் நடத்தப்படும் தேர்தல்கள் எந்த வகையிலும் ஜனநாயகத் தன்மையுடையவை என மக்கள் நினைக்கவில்லை. உண்மையும் அதுவே ஆகும். ஆனால் தேர்தலை அரசு அனுகூலமான சகல வழிமுறைகளையும் பிரயோகித்து நடத்தவே போகிறது. மக்கள் இதனை விரும்பாவிட்டாலும் அதனை எதிர் கொண்டேயாக வேண்டிய நிலையுள்ளது. தேர்தலை அங்கீகரிப்பது இலங்கையில் ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது என்ற அரச பொய்ப் பிரசாரத்தை ஏற்றுக்கொண்டதாகிவிடும். அதனை நிராகரித்துப் புறக் கணிப்பது அரசின் ஆதரவுச் சக்திகளுக்கு முடிசூடிக் கொள்ளும் வாய்ப்பை வாரிக் கொடுத்துவிடும். இதுவே இன்று தமிழ்மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் பெரிய கேள்வியாகும். எனவே விரும்பியோ விரும்பாமலோ வாக்களிக்க வேண்டியது தமிழ் மக்களின் தமிழுணர்வுடன் கூடிய தார்மீகப் பொறுப்பாகியுள்ளது.

கேள்வி: அதிகார பலமோ, நிர்வாகச் சுதந்திரமோ அற்றதெனப் பகிரங்கமாக அனைத்துத் தரப்பினராலும் நன்குணரப்பட்டுள்ள மாகாண சபைகள் உட்பட உள்ளூராட்சி சபைகளுக்கான ஆட்சியை வென்றெடுப் பதில் அர்த்தமேதும் இருக்கிறதா?

பதில்: சிந்திக்க வைக்கும் கேள்வி. ஆனாலும் எங்களுக்கானதை எங்களுக்கானதென உரிமையுடன் அடையாளப்படுத்த வேண்டியது முக்கியம். அதனை அடுத்தவர்கள் கைவசம் செல்ல விடுவது எத்தகைய முட்டாள் தனமானது என்பதையும் சிந்தித்தேயாக வேண்டும். கலட்டித் தரையானாலும், ஓட்டைக் குடிசையானாலும் எமக்குரியதை எம்வசம் வைத்துக் கொள்வதன் மூலமே காலம் வரும்போது அதனை வளமான நிலமாக வாழத்தக்க மாளிகையாக மாற்றிக்கொள்ள முடியும். தன் கைப் பொருளை அடுத்தவர் பிடிக்குள் செல்ல அனுமதிப்பது புத்திசாலித்தனமானதல்ல.

கேள்வி: இன்றைய சூழலில் வலி.வடக்குப் பிரதேசம் இராணுவப் பிடிக்குள் இருந்து இன்னமும் முற்றாகவிடுபடவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் இன்னமும் தமிழ் மக்களின் வதிவிட உரிமையை நிராகரித்த வண்ணம் உள்ளது. மீள்குடி யேற்றம் என்ற பெயரில் மக்கள் தொடர்ந்தும் அலைக்கழிக்கப்படுகிறார்கள். இந்த அவல நிலைமைக்கு முடிவு கட்டாமல் அங்கு தேர்தலை நடத்தும் அரசு அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கிறதென அர்த்தம் கொள்ளலாமா?

பதில்: உங்கள் கேள்வியின் தொனி, இல்லை என்ற பதிலையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்தத் தேர்தல்கள் அரசின் அரசியல் நகர்வுத் தந்திரோபாயமே அன்றி வேறில்லை. இந்த வகையில் தேர்தல்களை நடத்துவதன் மூலம் மட்டும் ஓர் அரசு தன்னுடைய ஜனநாயகத் தன்மையை நிரூபித்துவிட முடியாது. உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் இத்தகைய தேர்தல்களை கேலிக்கூத்ததாகவே கருதுகிறார்கள். கடந்த தேர்தல்களில் மக்களின் வாக்களிப்பு வீதம் இதனையே ஓங்கி உரைப்பதாக உள்ளது.

கேள்வி: இந்த நிலையில் இந்தத் தேர்தல் வெற்றியின் மூலம் நீங்கள் என்ன சாதிக்க முடியும் என நினைக்கிறீர்கள்?

பதில்: இந்தக் கேள்வியை என்னை நானே பல தடவைகள் கேட்டுக் கொண்டதுண்டு. ஆனால் ஒன்றுமட்டும் சொல்ல முடியும். எமது மக்கள் சலுகைகளுக்காகக் கையேந்தி பல்லிளிப்பவர்கள் என்ற அவமானங்களுக்கான மேலாதிக்க வாதிகளின் கருத்தை நாம் உடைத்தெறிய வேண்டும். நாம் நாமாக வாழ உணர்வுபூர்வமாக சிந்திக்க வேண்டும். நமது வெற்றியென்பது நமது தமிழர் என்ற மனிதம் சார்ந்த அடையாளத்தை இழக்க மாட்டோம் என்ற செய்தியை உலகுக்குச் சொல்ல உதவும்.

கேள்வி: வலி.வடக்கு மக்களின் இன்றைய வலிமை அவர்களின் சில தசாப்தகால வலிகளைப் போக்கும் ஆற்றலை இழந்துள்ள நிலையில், இன்றைய தேர்தலில் நீங்கள் வழங்கும் உத்தரவாதங்களால் அவர்கள் வாழ்க்கை மேம்படுமா?

பதில்: மக்களின் துயர்களைப் போக்க, அவர்கள் தசாப்த காலங்களாகச் சுமந்துவரும் மௌன வலியை மாற்ற தேர்தலில் வழங்கும் உத்தரவாதம் உதவும் என்பது பொய்யான வாக்கு. ஒட்டுமொத்தமாக ஓர் இனத்தின் அரசியல் வாழ்வுரிமையை வழங்கும் மனோபக்குவமற்ற இனவாத அரசொன்றிடமிருந்து வலி.வடக்கு மக்களின் உரிமைகளைத் தொடர்ந்தும் போராடித்தான் பெறவேண்டும். இதுவரை அப்படித்தான் நடந்து வந்துள்ளது. இதுவே இனியும் தொடரும் அதுதான். அரசும் அரசு சார்ந்தோரும் சலுகைகளைப் பெற்றுத் தரலாம். உரிமை களையல்ல.

ஆகவே வலி சுமந்து நிற்கும் மக்கள் தமது வலிமையை ஒருமையுணர்வுடன் கூடிய வாக்களிப்பின் மூலம் உணர்த்த முடியும். அந்த வலிமையே வலி.வடக்கு மக்களை மட்டுமல்ல அனைத்து தமிழ் மக்களையும் அவர்கள் காலம் காலமாக சுமந்து வரும் வலிகளில் இருந்து அவர்களை விடுவிக்கும். நானும் அவர்களில் ஒருவனாக நின்று அவர்களுக்காக சகல ஜனநாயக நெறிகளுடாகவும் போராட வேண்டும். போராடுவேன். அவ்வளவு மட்டுமே இப்போது என்னால் வழங்கக்கூடிய உத்தரவாதமாகும்.

கேள்வி: தேர்தல் காலத்தில் மக்கள் முன் நீங்கள் வைத்திருப்பது வாக்குறுதி அல்லாது வேறென்ன என்று கூறுவது?

பதில்: இப்போது குறிப்பாக வலி.வடக்கு பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் நாம் கூறி வரும் விடயங்கள் எதுவும் தேர்தலுக்காகக் கூறப்படுவதாக இந்தப்பகுதி மக்கள் எவரும் கருதமாட்டார்கள்.

ஏனென்றால் வலி. வடக்கு பிரதேச மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான குழு அமைக்கப்பட்ட நாள்முதல் அந்தப் பகுதி மக்களின் நலன்கள், அபிவிருத்தி தொடர்பான விடயங்கள்-முகாம் மக்கள் எதிர் கொள்ளும் நெருக்கடிகள், வாழ்வியல் பிரச்சினைகள் குறித்தும் அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய அத்தியாவசியமான நடவடிக்கைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேசி வந்துள்ளதுடன்பல்வேறு அமைப்புகள் ஊடாகவும் தனிப்பட்ட முறையிலும் என்னாலானதை செய்து வந்துள்ளேன்.

எனவே இது தேர்தலுக்கான வெற்று வாக்குறுதிகளுடன் இணைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். நாற்காலிக் கனவுகளுடன் மக்கள் பணியாற்ற முடியாது என்பதில் எனக்கு தீர்க்கமான நம்பிக்கையுண்டு. எனவேதான் நான் மக்கள் ஆதரவைக் கோரி நிற்கின்றேன்.




## விழித்திருக்கும் உலகுக்கு உங்கள் ஜனநாயகப் பண்பைக் காட்டுங்கள்

# ஜூலை 23இல் வாக்களித்து சர்வதேசத்துக்கு 'நல்ல செய்தி'யை முரசறைந்து அறிவியுங்கள்!

ஜூலை மாதம், தமிழர் தம் வாழ்வோடும் வளத்தோடும் இணைந்த மாதம். ''ஆடிப் பட்டம் தேடி விதை' எனப் பெருவிளைச்சலைப்பெற, தரையைப் பண்படுத்தும் பணி இந்த மாதமே தொடங்கப்படுவதுண்டு.

ஆடி மாதம் ஈழத்தமிழர் வாழ்வில் பல சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவிக்க வைத்ததை மறக்க முடியாது. குறிப்பாக 1983 ஜூலை 23 ஆம் திகதி இலங்கையில் தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டகறை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாதது. வேதனைகள் தொடர்கதை அல்ல. சோதனைகளை வெற்றி கொள்ள நாம் திடசங்கற்பம் பூணவேண்டும்.

எதிர்வரும் ஜூலை 23 இல் நாம் ஒரு சோதனையை எதிர் கொள்கிறோம். 'உள்ளூராட்சித் தேர்தல்' என்ற வடிவத்தில் இந்தச் சோதனை இடம்பெறுகிறது. இந்தச் சோதனையின்பெறுபேற்றினை- இலங்கை அரசும், வெளிநாட்டு அரசுகளும் உன்னிப்பாகஅவதானித்துக் கொண்டு இருக்கின்றன. இந்தச் சோதனை அல்லது தேர்தலில் ''எம் தேர்வுகள்' இவர்களுக்கு ஒரு செய்தியை எடுத்தியம்பக் காத்திருக்கிறது.

அந்த வகையில் இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியம் வாய்ந்த தேர்தல் ஆகும். மறுபுறத்தில் தமிழ் மக்கள் எடுக்கப்போகும் தீர்மானத்தை உலகம் எதிர்பார்த்து நிற்கிறது. உலகம் எம் மீது கண்வைத்து விழித்துள்ள இந்த வேளையில் நாம் உறங்கக்கூடாது.

தமிழ் வாக்காளர் அனைவரும் இந்த தேர்தலில் தவறாது வாக்களிக்க வேண்டியது அவசியம். அதனூடாக தங்கள் வாக்குரிமை ஜனநாயகத்தை வெளிப்படுத்த வேண்டும். அறுதியாகவும், உறுதியாகவும் சொல்வதற்கு ஆகக் குறைந்தது நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது வீதமான வாக்காளர்களும் வாக்களித்து, ஜனநாயகப் பற்றினை வெளிப்படுத்த வேண்டிய தேவை என்றுமில்லாதவாறு தற்போது எழுந்துள்ளது.

ஜனநாயக அரசு என்பது பற்றி ஆபிரகாம்லிங்கன், மகாத்மாகாந்தி உள்ளிட்ட பலர்பலவிதமாகக்கூறி உள்ளனர். ஆபிரகாம் லிங்கன் 'மக்களால், மக்களுக்காக மக்களைத் தேர்ந்தெடுக்கும் மக்கள் அரசே ஜனநாயகம்' என்றார்.

'பலமானவர்கள் கொண்டுள்ள அதே வாய்ப்பினை பலவீனமானவர்களும் கொண்டிருப்பதே ஜனநாயகம்' என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். எது எவ்வாறாயினும், தற்காலம் 'ஜனநாயகத்தின் காலம்' என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்து மிகப் பலம்வாய்ந்ததாகப் பதிந்துள்ளது. அல்லாமலும் 'ஜனநாயகம்' என்பது ஒரு நாகரிக செயலொழுங்காகக் கருதப்படுகிறது.

இலங்கையும் ஒரு ஜனநாயக நாடென்று ஆளப்படுபவர்களால் கூறப்படுகின்றது. அது உண்மையில் ஒரு ஜனநாயக நாடா? அல்லது எதிர்மாறானதா என, வேறு பல ஜனநாயக நாடுகள் ஐயப்பாட்டுடன் உள்ளன. அதனை இங்கு ஆராய்வது பொருத்தமன்று. ஜனநாயகத்தின் உண்மையான முகத்தை உலகத்துக்குக் காட்டவும், தமிழர்களும் நாகரிகமான ஜனநாயக வாதிகள் என உலகத்துக்கு உரத்துச் சொல்லவும், எமது ஜனநாயக உரிமையான வாக்குரிமையைப் பயன்படுத்தத் தவறக் கூடாது.

ஜனநாயகம் என்பது இலங்கையில் வெறும் எழுத்திலுள்ள ஒரு விடயமா அல்லது மக்களால் அது உண்மையில் அனுபவிக்கப்படுகிறதா என உலகம் தற்போது கண்களை அகல விழித்துக் கொண்டு பார்க்கின்றது.

நீ.செல்லப்பா

இந்த வேளையில், ஜூலை 23 இல் எமது ஜனநாயக உரிமையை வெளிப்படுத்துவோம்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு நேர காலத்துடன், வெயிலின் தவிப்புக்குள் அகப்படாமல் மு.ப. 10 மணிக்கு முன்பே, உங்கள் வாக்குகளை உங்கள் எதிர் காலத்தை மனதில் இருத்திச் செலுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 10.07.2011 முதல் 16.07.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும். உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். குடும்ப ரீதியான, தொழில் ரீதியான சில பிரச்னைகளை நினைத்துக் குழப்பம் அடைவீர்கள். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும். தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். எதிர்பார்த்த பதவி உயர்வுகளைப் பெறலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள், வாகனங்கள், பொழுது போக்கு விடயங்கள், பயணங்கள் போன்றவற்றால் அனுகூலம் பெறலாம். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். எந்தப் பிரச்சினைக்கும் உடனுக்குடன் முடிவுகள் எடுப்பீர்கள்.

### இடபம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். மற்றவர்களுக்காக உங்களின் பணத்தைச் செலவிடலாம். பிள்ளைகளை முன்னிட்ட செலவுகள் அதிகரிக்கும். அவர்களின் கல்வி விடயங்களுக்காக சிலரிடம் கடன் அல்லது கைமாத்து வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். எந்த வேலையையும் விறுவிறுப்பாக எடுத்த வேகத்தில் முடிக்க முடியாமல் திணறலாம். சோர்வு, சோம்பலால் வேலைகளில் கவனக்குறைவாகச் செயற்பட்டு மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மற்றவர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். பணிச் சூழ்நிலை நிம்மதிக் குறைவு, கோபம், எரிச்சல் ஏற்படுத்துவதாக அமையலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், பயணங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### மிதுனம்

செலவுகள் அதிகரித்து, சேமிப்பில் கைவைக்கலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவுகளுக்கும், வசூலிப்பு முயற்சிகளுக்கும் உகந்த நாள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம்.உழைப்பில் கடுமை காணப்படும். பொறுப்புகள் கூடும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். பொன், பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களிலும் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளால் அனுகூலம் இல்லை. பணிபுரிவோர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆள்படலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பீர்கள். விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவின ர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில காரியங்களைச் சாதிக்கலாம். மறதி, கவனக்குறைவு, திட்டமிட்ட வேலைகளை மாற்றி அமைத்தல் போன்றவற்றைச் சந்திக்கலாம்.

### கடகம்

அடுக்கடுக்காகப் பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். பெண்கள் வழியில் உதவி கிடைக்கலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மனைவி, குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றவும் கணிசமான பணம் செலவிடலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். தொழில் ரீதியான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம். பொறுப்பாக வேலை செய்தாலும், மற்றவர்கள் குற்றம், குறை சொல்வது தொடரும். பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. தேவையானதைப் புரட்டிக் கொள்ளலாம். தந்தை, அதிகாரிகள், அரசியல்வாதிகள், மருத்துவ சிகிச்சைகள், உறவுப் பெண்கள், சகோதரிகள், பெண் பிள்ளைகள் வழியில் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். ஆடம்பர விடயங்களுக்காக செலவு செய்தும் சந்தோஷம் அடைவீர்கள். உத்தியோகம் தொடர்பான சலுகைகளைப் பெறலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருமானம் கூடும். ஊக்கம், உற்சாகம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கவும், வசதி, வாய்ப்புகளை அதிகரிக்கவும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிலருடன் தற்பெருமையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பல நாள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொன், பொருள்கள் சேரும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகளும், எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகிப் பாசம் கூடும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். ஓய்வின்றிப் பரபரப்பாகச் செயற்படும் சூழ்நிலை உருவாகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவு ஏற்படலாம். திட்டமிட்ட வெளியூர்ப் பயணம் செல்லலாம். பணவரவுகளைப் பெறலாம்.சோர்வு, சோம்பல் குடிகொள்ளும்.

### கன்னி

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் சூழ்நிலை உருவாகும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலரின் வீட்டுக்குச் செல்லலாம். எதிர்பார்த்த விடயம் ஒன்று நடக்காமல் ஏமாற்றம் ஏற்படலாம். கடுமையான செலவுகளையும், தொழில் ரீதியான சங்கடங்களையும் எதிர்கொள்வது தொடரும். உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்காமல் ஆதங்கம் அடையலாம். பற்றாக்குறைப் பிரச்சினைகளைத் தவிர்க்க அவ்வப்போது பிறரிடம் கடன், கைமாத்து வாங்கும் சூழ்நிலை உருவாகும். தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைக்காமல் இருப்பது நல்லது. சுறுசுறுப்பாகச் செயற்பட முடியாமல், அடிக்கடி வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் சூழ்நிலையும் உருவாகலாம். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அவற்றை எல்லாம் அசராமல் செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் அனுகூலம், ஆதாயம் பெறலாம்.

### துலாம்

உற்சாகம், தெம்புடன் செயற்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்துக்கு முடியும். பணவரவுகளைப் பெறலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பு நிகழும். செலவுகளுக்கு குறைவிருக்காது. தொழில் ரீதியான விடயங்களில் ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செயற்படவும். மற்றவர்கள் பேச்சைக் கேட்டு எதையும் செய்ய வேண்டாம். உறவினர்கள், நண்பர்கள், சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். சிலர், தொழில் ரீதியாக புதிய இடங்களுக்குச் செல் லும் சூழ்நிலை உருவாகும். சகோதரர்கள், பங்காளிகளுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். அவர் களிடம் கடும் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். நிலம், பூமி விவகாரங்களும் சாதகமாக இருக்காது. பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

### விருச்சிகம்

மறக்க முடியாத புதிய அனுபவங்களைப் பெறலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் சுணக்கம் ஏற்பட்டாலும் பின்னர் விறுவிறுப்பாக முடிவடையும். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்றாமல் சாக்குப் போக்குச் சொல்லலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். தொழில், உத்தியோகம், வியாபார ரீதியான விஷயங்களில் முன்னேற்றம் உண்டு. கடந்த கால இழப்புகளை எல்லாம் ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும். சில விஷயங்களில் தந்திரமாகச் செயற்படுவதன் மூலம் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையிலான இணக்கம் பாதிக்கப்படலாம். ஒருவரை ஒருவர் குறைசொல்லி விமர்சிக்கலாம். கூட்டுத் தொழில் செய்வோர் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். வாகனங்களில் செல்லும்போது வேகத்தைத் தவிர்க்கவும். குருவால், வீண் பழிகள், வராமல் இருக்க எச்சரிக்கை அவசியம். பணவரவுகளைப் பெறலாம். நண்பர்களால் ஆதாயம் பெற முடியும். நீண்ட நாள் நட்புகள் தொடரும்.

### தனுசு

எதிலும் பொறுமை நிதானமாகச் செயற்பட வேண்டும். தண்டச் செலவு, அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதால் மனக்குழப்பத்துக்கு ஆளாகலாம். கடன் மிகுதிகள் தீரும். நீண்டநாள் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். வேலைகளில் பொறுப்புகள், சுமை அதிகரித்து உங்களைக் கசக்கிப் பிழியலாம். கடந்த காலத்தில் வாங்கிய கடன்களை எல்லாம் தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். சிலர் சொத்துக்களை விற்றும் அவற்றைத் தீர்க்கலாம். பணிபுரிவோர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காணலாம். எந்த விடயத்திலும் தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உடன் பிறந்தவர்கள் உங்களின் முயற்சிகளுக்குத் துணையாக இருப்பர். பங்காளிகளுடன் ஏற்பட்ட பகை விலகிப் பாசம் அதிகரிக்கும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றில் பணம் கரையலாம். பெண்கள் குடும்ப விவகாரங்களில் பொறுப்போடு செயற்பட வேண்டும்.

### மகரம்

கணிசமான பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும். உங்களுக்காக மற்றவர்கள் செலவிடலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலரின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். பெண்கள், சகோதரிகள், தாயார், உறவுப் பெண்கள் வழியில் செலவுகள், சிரமங்கள் நேரும். வாகனங்களாலும் பிரச்சினைகள் நேரும். பணிபுரிவோருக்கு புதிய பொறுப்புகள் தேடிவரலாம். எந்த விடயத்திலும் அவசரமாக இறங்கிவிட்டுப் பின்னர் வருத்தம் அடைவது, பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள், சகோதரர்கள் வகையில் அதிருப்தி, ஆதங்கம் ஏற்படலாம். அடிக்கடி ஆரோக்கியக் குறைவுகள் வரலாம். அலைச்சல்களைக் குறைத்து, சாப்பிடுவது, தூங்குவது உட்பட எதையும் நேரத்துக்குச் செய்து பழக வேண்டும். புதியவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். காரிய வெற்றி உண்டு. கடன் மிகுதி தீரும்.

### கும்பம்

திட்டமிட்ட வேலைகள் சரியானபடி நடக்கும். தம்பதியர் இடையே ஒற்றுமை கூடும். விருந்து, விசேஷங்களால் மகிழ்ச்சி உண்டு. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடலாம். எந்த வேலையையும் சுலபமாக முடிக்க முடியாமல் தவிக்கலாம். வருமானத்திலும் தடை ஏற்படலாம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் பணிபுரிந்தாலும், குறை சொல்பவர்களே அதிகம். வீடு, மனை வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் பின்னடைவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்களிலும் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரிடலாம். தந்தை, அதிகாரிகள், அரசியல்வாதிகள், மருத்துவம் தொடர்பான விடயங்களும் அனுகூலமாக இருக்காது. பெண்களால் ஆதாயம், உதவி பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வேலைப்பளு அதிகரிக்கும்.

### மீனம்

குழப்பங்கள், தடுமாற்றங்கள், வீண் பயங்களுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியாகத் திடீர்ப் பயணங்கள் செல்லலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். அடிக்கடி சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு, கூட்டுத் தொழிலில் சிக்கல், வேலையாள்களால் தொல்லை போன்றவற்றைச் சந்திக்கலாம். உடல் நலம் தொடர்பான விடயங்களிலும் அக்கறை அவசியம். பேச்சில் தன்னம்பிக்கை தெரியும். திட்டமிட்ட வேலைகளைத் தடங்கலின்றி முடிப்பீர்கள். சகோதரர்களுக்காக சில நல்ல காரியங்களைச் செய்ய நினைப்பீர்கள். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் பெறலாம். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பெண்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். தேவையான உதவிகளும் கிடைக்கும். பொன், பொருள் சேரும். கடன் மிகுதிகள் வசூலாகும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். தண்டச் செலவு, ஆதாயமில்லா அலைச்சல் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது நலவாய நாடுகளுடன் இந்தியாவின் கூட்டு மஹிந்தவை அதிர வைத்ததா...?

**சண்டே லீடர் பத்திரிகையில் கடந்த வாரம் பிரசுரமாகியிருந்த கட்டுரையின் தொகுப்பு**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலோ அல்லது மனித உரிமைகள் சபையிலோ இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் எதுவும் கொண்டுவரப் படுமாயின் இந்தியாவும் பொது நலவாய நாடுகளும் தமக்கு ஆதரவாக இருக்குமென ஜனாதிபதி எண்ணியிருக்கிறார்.

இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்றச் சாட்டுகள் எழுந்த போது பொது நலவாய நாடுகள் அமைதியாகவே இருந்தன.

இந்தியாவில் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டி நடைபெற்ற போது ஜனாதிபதி விசேட விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

**ஜனாதிபதியின் எண்ணம்**

இந்த அழைப்புக்கும் தமது அமைப்புக்கும் தொடர்பு இல்லையென பொது நலவாயச் செயலகம் மறுப்பு விடுத்தது. ஆனால் உறுப்பு நாடுகள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தன. இது போன்றே இந்தியாவின் உதவி இலங்கைக்கு கிடைக்குமென ஜனாதிபதி எண்ணுகிறார் போலும்.

அடுத்த வருடம் பொது நலவாய நாடுகள் கூட்டம் இலங்கையில் நடைபெறுவதனால் இந்தச் சந்தர்ப்பத்தின் மூலம் இந்த அமைப்பில் உறுப்பு நாடுகள் தமது பக்கம் நிற்பதாகக் காட்டலாம் என்று ஜனாதிபதி நம்பியிருப்பதாகத் தெரிகிறது.

இரு வாரங்களுக்கு முன்புதான் பாலித்தீவிலும் இந்தோனேஷியாவிலும் பொது நலவாய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இலங்கைக்கான பிரசாரங்களை நடத்தி இருந்தார்.

ஆனால், ஒரு வாரத்துக்கு முன்பதாக ஜூன் 23 ஆம் திகதி லண்டனிலுள்ள பொதுநலவாய நாடுகள் செயலகம் ஓர் அறிக்கை விடுத்துள்ளது.

சனல் - 4 இல் கட்சிப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பாக தமது அமைப்பு மிகவும் கவனம் செலுத்தி வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் செயலகத்தில் இந்தியாவைச் சேர்ந்த கமிலேஷ் சர்மா செயலாளராகவும் அமிர்ரு பெனார்ஜி அரசியல் ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்கள். இவர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கை பிரிட்டன் பிரதி வெளிநாட்டு அமைச்சர் அரிஸ்டர்பேர்ட் இவ் விடயம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையை ஒத்திருந்தது.


**நீண்ட மௌனத்தின் பின்னான அறிக்கை**

நீண்ட கால மௌனத்தின் பின் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் இந்த அறிக்கை ஜனாதிபதிக்கு மிகுந்த அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் கொடுத்தது.

இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்றாததால்தான் இவ்வாறான அழுத்தங்களை இந்தியா பொது நலவாய நாடுகள் மூலம் கொடுப்பதாகப் பலர் கருதுகிறார்கள். பொது நலவாய அமைப்பின் இந்த வகையான தமக்கெதிரான நடவடிக்கைகளினால் ஜனாதிபதி பயந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

சிவ்சங்கர் மேனன் அடங்கிய மூவர் குழுவினரது பேச்சு பற்றிய அறிக்கைகள் எதுவுமே ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை. ஆனால் பிரதமர் டி.எம்.ஜெயரட்ண விடுத்த அறிக்கையில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண அழுத்தம் கொடுக்கும்படி இந்தியா நிர்ப்பந்திக்கப்படுகிறது எனக் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

அடுத்த வருடம் பொதுநலவாயக் கூட்டமும் 2018 இல் பொதுநலவாய விளையாட்டும் நடைபெறவிருக்கும் நாட்டில், குழப்பமும் குளறுபடிகளும் அதிகரித்துள்ளன.




அரசுக்கும் ஜனாதிபதிக்கும் சர்வதேச அழுத்தங்கள் இவ்வாறு இருக்கையில், உள்நாட்டிலும் பல்வேறு தலையிடிகள் எழுந்துள்ளன.

**அரிசியில் 'ஆசெனிக்'**

இங்கிருக்கும் அரிசியில் ''ஆசெனிக்'' இருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தலைவர் நாடு முழுவதும் பிரசாரம் மேற்கொள்கிறார். அதே நேரத்தில் இலங்கை மின்சார சபையைக் கலைத்த ஜனாதிபதியின் செயலை அமைச்சர் சம்பிக்க ரணவக்க எதிர்த்ததோடு தனது பதவியை இராஜினாமாச் செய்யவும் முன்வந்தார்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரிசி தொடர்பாக பிரசாரத்திலீடுபடும் அமைச்சர் களான சம்பிக்கவையும், விமல் வீரவன்சவையும், பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு அவ்வாறு நடக்கும் படி ஜனாதிபதி எச்சரித்தார்.

ஆனால் சம்பிக்க திருப்பியடித்தார். அடுத்த கிழமை ஒரு வார இதழில் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் சனல் - 4 வெளியீட்டுக்கு எவ்வித மறுப்பு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதில் காட்டப்படுவது போல யாராவது குற்றமிழைத்தால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதேசமயம் ''அரிசியில் ஆசெனிக்'' பற்றிய பரப்புரையை நிறுத்தும்படி ஜாதிக ஹெல உறுமயவுக்கு ஜனாதிபதி கட்டளையிட்டும் அத்துரெலிய ரத்தின தேரர் உட்பட பல உறுப்பினர்கள் தமது பிரசாரத்தைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்கள்.

இது தனக்கெதிரான நாடுதழுவிய எதிர்கருத்தை உருவாக்குமென ஜனாதிபதி கருதுகிறார்.

இவ்வாறான நெருக்கடிகள் மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அரசைச் சேர்ந்த அமைச்சர்கள் பலரும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தோரும் 13 ஆவது திருத்தத்தை காணி, பொலிஸ் அதிகாரங்களோடு அமுல் நடத்தியும் வடகிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும்படி வெளிப்படையாகவே கூறிவருகிறார்கள்.

**நீண்ட கால மௌனத்தின் பின் பொது நலவாய நாடுகள் அமைப்பின் இந்த அறிக்கை ஜனாதிபதிக்கு மிகுந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது. இந்தியாவுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்றாததால் தான் இவ்வாறான அழுத்தங்களை இந்தியா பொதுநலவாய நாடுகள் மூலம் கொடுப்பதாகப் பலர் கருதுகின்றனர்.**

இந்தியாவையும் மேற்கு நாடுகளையும் சீண்டி பகைப்பதால் நாடு பல்வேறு நெருக்கடிக்குள் தள்ளப்படுமென்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

**தோல்வியில் முடிந்த சந்திப்பு**

எப்படியிருப்பினும் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஹிலாரி கிளிங்டனைச் சந்திக்க நினைத்தது வெற்றியளிக்கவில்லை. ரணில் தன்னோடு நட்புடைய பிரிட்டன் பத்திரிகைகளில் அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்.

**ஷாருமி**

அமெரிக்காவுக்குச் செல்லமுன் தனது விஜயம் பற்றி மஹிந்தவுக்கு அறிவித்த ரணில், ஹிலாரி கிளிங்டனுடன் சந்திப்புக் கிடைக்குமாயின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவாறு பேச்சு நடத்துவேன் எனக் கூறி இருந்தார். ஆனால் அமெரிக்கா இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Standard Institute of Business Management (SIBM)

முதலில் பதிவுசெய்யும் 25 மாணவர்களுக்கு மட்டும்
மொத்தச் செலவு ரூபா 750,000/-

Destination of Global Education

எமது நிறுவனம் இப்போது
புதிய **UK Student Visa** நியதிகளை
அனுகுவதற்று தயாராகிவிட்டது

விரையுங்கள் லண்டன் நகரிலுள்ள
சிறந்த கல்லூரிகளில் அனுமதி பெற்றுத்தரப்படும்



ஆங்கிலம் என்றால் அச்சம் தோன்றுகிறதா?
**IELTS** என்றால் பீதி ஏற்படுகிறதா?
எந்த ஒரு பயமும் வேண்டாம்!
உங்களுக்கு ஆங்கில அறிவு அறவே
இல்லாவிட்டாலும் கவலை இல்லை நாங்கள்
உங்களுடன் இருக்கிறோம்
மூன்று கிழமைகளில் இலவச பயிற்சியுடன்
உங்களை லண்டன் நகருக்கு செல்ல தயாராக்கு கின்றோம்

உங்கள் நம்பகரமான சேவைக்காக:

**SIBM**

**83/1, Penniquik Lane, Wallawatha. H.Line: 0777713542**

## ஈர விழிகளிலிருந்து

### அமரர் கந்தசாமி ஐயர் முத்துக்குமாரசாமி
(கிளாக்கர்)



தோற்றம் 10.12.1945 — மறைவு 06.07.2011

முகாமையாளர் கதிரை இங்கு
அனாதையாகிப் போனதுவோ
முப்பத்தெட்டு ஆண்டு உறவும்
முடிவுக்கு வந்ததுவே அச்சகத்து
வெற்றிடத்தை நிரப்புதற்கு யாருமில
எப்பவுமே மந்திரியாய் வலக்கரமாய்
இணைந்து ஆற்றும் நினது நேர்மை
இறைவனுக்கும் பிடித்ததாலோ
இப்பிரிவு...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம்

## பறந்தோடினவோ? ஆண்டுகள் இரண்டு



### அமரர் இரத்தினம் வைகுந்தவாசன்
(திதி:பூர்வ பக்க தசமி)

| உறவின் நிழலில் | இறைவன் கழலில் |
|---|---|
| 1952 ★ 11 ★ 05 | 2009 ★ 07 ★ 01 |

கண்கள் உங்களைக் காணத் துடிக்கின்றன
வாய் விட்டுப் பேசுவதற்கு மனம் எண்ணுகிறது
புன் சிரிப்பால் எங்களை வயப்படுத்தி
அன்பும் நேசமும் காட்டிய தந்தையே!
உங்கள் பிரிவின் துயர் எம்மை விட்டு நீங்கவில்லை
நீங்கள் எங்களிடம் வரமாட்டீர்களா?

பிறவுண் வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

பாவிக்கப்பட்ட பழைய தளபாடங்கள், இரும்புப் பொருள்கள் மற்றும் நானாவித பொருள்களின் ஏலவிற்பனை - 2011

| ஏல விற்பனை நடைபெற உள்ள இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை - ஊர்காவற்றுறை | 12.07.2011 | முற்பகல் 11 மணி |
| ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை | 13.07.2011 | முற்பகல் 11 மணி |
| சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சாவகச்சேரி | 15.07.2011 | முற்பகல் 11 மணி |
| பிரதேச வைத்தியசாலை - கோண்டாவில் | 15.07.2011 | முற்பகல் 11 மணி |
| பிரதேச வைத்தியசாலை-சங்கானை | 19.07.2011 | முற்பகல் 11மணி |

மேற்படி வைத்தியசாலைகளில் இடம்பெறவுள்ள ஏல விற்பனைத் திகதிக்கு முதல் நாள் சம்பந்தமான பொருள்களின் பட்டியலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்தல் பலகையிலும் குறித்த வைத்தியசாலை அறிவித்தல் பலகையிலும் பார்வையிடலாம். ஏல விற்பனக்குரிய பொருள்களை ஏல விற்பனைத் திகதியன்று காலை 8.30 மணி முதல் 10.00 மணிவரை பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
(சி/1568) பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

இல.12, கட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் காணியுடன் கூடிய வீடு 2½ பரப்பில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0779684168, 004747371392, 0778445291

## விற்பனைக்கு

211, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கடையும் நிலமும் குளி 15.99 விசாலமுள்ளது. விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 075 7463938
(5624)

## TIPPER விற்பனைக்கு

TATA 3 கியூப் NPLL XXXX எனும் இலக்கமுடைய Tipper உடன் விற்பனைக்குண்டு.தொடர்பு: 0773638482

## பணியாளர்கள் தேவை

**பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.**

01. களஞ்சியக் காப்பாளர்
02. குடாநாட்டுக்குள் வான் ஓட்டக்கூடிய வாகன சாரதிகள்.
03. விற்பனையாளர்கள்.
04. காவலாளி.
05. கணக்குப் பதிவாளர்

தொடர்பு:-
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225003, 021 2222901
(5620)

## DIPLOMA IN PROJECT MANAGEMENT

சமூக சேவைத்துறை தொழில் வாய்ப்பிற்காக எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைக் கல்வி முறையில் (Distance learning) நடத்தப்படும் இப்பயிற்சி நெறியானது அரச சார்பற்ற நிறுவனத் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

Programme Coordinator- DIPM,
Mecwin Resource,
P.O.Box 206,
Kandy.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் அற்புதா றேடிங் கொம்பனி
உரிமையாளர்
அற்புத தேவராஜா அவர்களின் அன்புத் தந்தை
**காசிநாதர் கந்தையா-சதாசிவம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Maha Kanapathy Agency,
Transporters & Suppliers, Jaffna.

## மரண அறிவித்தல்கள்

### யோசேப் வின்சன் (பஞ்சம், சம்மாட்டி)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் வின்சன் (பஞ்சம்) 02.07.2011 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் சவுரியம்மாவின் (தங்கம்) அன்புக் கணவரும், பேக்மன், டொறத்தி, டொறின், றிக்மன், றெஜினா ஆகியோரின் அருமைத் தந்தையும் றாணி, ஜீவா, அழகு, சந்திரா, நிக்சன் ஆகியோரின் அருமை மாமனும் றொகான், றொசானி, நிசானி, இந்திக்கா, தர்ஷிகா, பிரியா, பிரவீன், செல்லா, சேரா, றெமியூசன் எவ்லின், மகிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சென்.செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

93/2, சென்.செபஸ்ரியன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(5661)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### கந்தையா ஐயம்பிள்ளை



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் நாறம்மலயை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பிரபல புகையிலை வர்த்தகர் கந்தையா ஐயம்பிள்ளை (செல்லையா) நேற்று (09.07.2011) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா, மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னம்மா,சண்முகம் மற்றும் செல்லத்துரை (முன்னாள் நாறம்மல வர்த்தகர்), காலஞ்சென்ற பூங்காவனம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் சுந்தரலிங்கம், இராஜலிங்கம், காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் யோகேஸ்வரி,ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கமலர், யோகேஸ்வரி,பரமேஸ்வரி, திருமகள், சிவலிங்கம், தவமலர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மண்கும்பானிலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (11.07.2011) திங்கட்கிழமை சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான் மேற்கு,
வேலணை.

தகவல்:
இராஜலிங்கம்(மகன்).

## Vacancy

### Office Manager
Requirements

* Able to Speak English
* Diploma in Management
* Service Minded
* Minimum 3 years Experience(Admin, Management)
* Computer skills
* Leadership skills
* Age 25-45 years

Will Pay 30,000/ month

### Computer Assistant
Requirements

* Able to Speak English
* Dipolama in Computers
* 2 Years Computer experience
* Maximum Age 40

Will Pay 20,000/ month

*Contact-:0777530086*
*0772139361*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய நோய்ச் சிகிச்சையில் யாழ்.ஆஸ்பத்திரியில் இப்போது ஒருபடி முன்னேற்றம்.... ஆனால்....

ஒரு புதன் கிழமை. நேரம் முற்பகல் 10 மணி. புதிதாக வடிவமைக்கப்பட்ட கதீற்றர் ஆய்வுகூட்டத்தில் இதய சிகிச்சை நிபுணர்கள், தாதியர்கள், துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் அடங்கிய குழு காத்துக் கொண்டிருக்கின்றது. அனைவரும் "கதீற்றர்" ஆய்வு கூடத்தில் அணிவதற்கேற்ற மெல்லிய நீல நிற உடையில் அதற்கு மேல் "எக்ஸ்" கதிர் ஊடுருவாத அங்கியை (Lead apron) அணிந்திருக்கின்றனர். நோயாளி கொண்டு வரப்பட்டு பரிசோதனை செய்யும் கட்டிலில் ஏற்றப்படுகின்றார். இதயத்துக்கு குருதியை வழங்குகின்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு உள்ளதா என்று பரிசோதனை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட அந்த நோயாளி பரிசோதனை நடைபெறுவதை அவதானித்துக் கொண்டு இருக்கின்றார். சிறிது நேரத்தில் அந்தப் பரிசோதனையை சிறப்பாக செய்து முடித்த திருப்தியில் கதீற்றர் ஆய்வுகூடத்தை விட்டு வெளியே வருகின்றனர் இதய சிகிச்சை நிபுணர்கள்.

வட மாகாணத்தின் மருத்துவத்துறையில் மைல் கல்லாக இந்த நிகழ்வு இடம் பெற்றது வேறு எங்குமல்ல, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்தான். கதீற்றர் ஆய்வு கூடம் இதயம் சம்பந்தமான சில வகையான நோய்களைக் கண்டு பிடிப்பதற்கும் அவற்றுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் பெரிதும் பயன்படுகின்றது.


இலங்கையில் உள்ள அரச வைத்திய சாலைகளைப் பொறுத்தவரையில் இத்தகைய கதீற்றர் ஆய்வு கூட வசதி ஏற்கனவே கண்டி, கொழும்பு, காலி, குருநாகல் ஆகிய நான்கு இடங்களில் காணப்பட்டது. இப்போது ஐந்தாவதாக யாழ்ப்பாணத்தில் முதல்முதலாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர கொழும்பில் ஆசிரி (வைத்திய சாலை), லங்கா (வைத்தியசாலை), டேடன்ஸ் போன்ற தனியார் வைத்தியசாலைகளிலும் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இருந்து இப்படியான பரிசோதனைகளுக்காக நோயாளர்கள் கொழும்புக்கும் கண்டிக்கும் அனுப்பப்பட்டனர். இங்கு குறித்த பரிசோதனைக்கும் சிகிச்சைக்குமாக அங்கு நீண்ட காத்திருப்புப் பட்டியல் (Waiting list) காணப்பட்டதால் அவர்கள் சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. வசதியான சிலர் தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று பரிசோதனைகளையும் சிகிச்சைகளையும் செய்து கொண்டனர். யாழ்ப்பாணம் - கொழும்பு பாதை மூடப்பட்ட காலங்களில் நோயாளர்கள் பெரிதும் கஷ்டங்களை அனுபவித்திருந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை கதீற்றர் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய நோய் கண்டறியும் பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகள் பற்றி யாழ் போதனா வைத்தியசாலையின் இதய நோய் சிகிச்சை நிபுணர் பி.லக்ஸ்மன் குறிப்பிடுகையில்-

கதீற்றர் ஆய்வு கூடம் மூலமாக இதயம் சம்பந்தமான நோய்களை நுணுக்கமாகக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகளைச் செய்யலாம். அத்துடன் இதய நோய்களுக்கான சிகிச்சைகளும் வழங்கப்படலாம். உதாரணமாக இதயத்துக்கு குருதியை வழங்கும் இரத்தக் குழாய்களோடு தொடர்பான நோயைக் (Coronary Artery disease) கண்டறிதலும் சிகிச்சை அளித்தலும், பிறப்பில் காணப்படுகின்ற நோய்களுக்குச் (Congenital herat disease) சிகிச்சை அளித்தல், நிரந்தரமான இதய இயக்கி பொருத்துதல் (Permanent Pacemaker Implantation) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதயத்துக்கு குருதியை வழங்குகின்ற இரத்தக் குழாய்களில் காணப்படுகின்ற அடைப்புகளை இனங்காண்பதற்காக செய்யப்படுகின்ற பரிசோதனை அன்ஜியோகிராம் (Angiogram) எனப்படுகின்றது. இதன் மூலம் எந்த எந்த இரத்தக் குழாய்களில் எத்தனை சதவீதமான அடைப்புகள் இருக்கின்றன என்பதை அவதானிக்கின்ற இதய சிகிச்சை நிபுணர் குறிப்பிட்ட நோயாளி சத்திர சிகிச்சை (By pass Surgery) செய்துகொள்ள வேண்டுமா, ஸ்ரென்ற் (stent) வைக்க முடியுமா அல்லது (Angioplasty) எனப்படுகின்ற சிறிய பலூன் மூலம் அடைப்பை அகற்ற முடியுமா என்ற முடிவுக்கு வருவார்.

இவ்வாறு பிறப்பில் காணப்படுகின்ற இதய நோய்களுக்கான சில சிகிச்சை முறைகளையும் கதீற்றர் ஆய்வு கூடத்தில் செய்ய முடியும். சோணை அறைகளுக்கிடையில் காணப்படும் துவாரம் (ASD), இதய அறைகளுக்கிடையில் காணப்படும் துவாரம் (VSD) எக்கோ பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டு அவை சத்திர சிகிச்சை இல்லாமல் மூடப்படலாம். இதனை Device Closure என்று குறிப்பிடுவார்கள்.

இது தவிர சில நோயாளர்களுக்கு நிரந்தரமான இதய இயக்கி (Permanent pack maker) பொருத்தப்பட வேண்டுமென இதய சிகிச்சை நிபுணர் தீர்மானித்தால் கதீற்றர் ஆய்வுகூடத்தில் அவற்றையும் பொருத்த முடியும். இவ்வாறு பல்வேறு வகையில் நோயைக் கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் கதீற்றர் ஆய்வுகூடம் பயனளிக்கும் என்றாலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் உண்மையில் ஒர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அதன் பயன் பெறக் கூடியதாக உள்ளது. அதாவது நோயைக் கண்ட்றிகின்ற முறை (Dia gnosing Method) மட்டுமே தற்போது இங்கு செய்யப்படமுடியும். ஏனெனில் இதய நோய்க்கான சிகிச்சை அளிக்கத் தேவையான இதய சத்திர சிகிச்சை நிபுணரும் (Cardiac Thoracic Surgeon) இதய சத்திர சிகிச்சைப் பிரிவும் (Cardiac Thoracic unit) அதற்கான அதி தீவிர சிகிச்சைப் பிரிவும் (Intensive Care Unit) யாழ். போதனா வைத்திய சாலையில் இல்லை. அதாவது முழு அளவிலான (Full fledged Cardiac Thoracic unit) இதய சத்திர சிகிச்சைப் பிரிவு கொண்டிருந்தாலே இதய நோய்களுக்கான சிகிச்சைகளை



கதீற்றர் ஆய்வு கூடத்தில் செய்ய முடியும். அதன் மூலம் கதீற்றர் ஆய்வுகூடத்தை முற்றுமுழுதாகப் பயன்படுத்த முடியும்.

இதயத்தில் இருக்கின்ற வால்வு களில் காணப்படுகின்ற சுருக்கத்திற்கான சிகிச்சை முறையும் (Balloon Valvular Plasty) இதய சத்திரசிகிச்சைப் பிரிவு கொண்டிருக்குமாயின் அதனை இங்கேயே செய்ய இயலும். அதாவது இதய சத்திர சிகிச்சைப் பிரிவு பூரணத்துவ நிலை இல்லாமல் குறைந்த நன்மையைத்தான் பெறக் கூடியதாக இருக்கும். ஏனெனில் இதய நோய் சம்பந்தமான சிகிச்சை அளிக்கப்படும் போது சில வேளைகளில் நோயாளி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நிலை தோன்றலாம்.

இதய சிகிச்சைப் பிரிவுடன் (Cardiology unit) இதய சத்திர சிகிச்சைப் பிரிவும் (Cardiac Thoracic Unit) அமைக்கப்படும் போதுதான் முழுமையான சேவையை நோயாளர்கள் பெறக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான வசதி ஏற்படுத்தப்படுமாயின் வடமாகாணத்தில் உள்ள கிட்டத்தட்ட 1.2 மில்லியன் மக்கள் பயன் பெறமுடியும். இதன் மூலம் வவுனியா, மன்னார் மக்கள் மட்டுமின்றி கிழக்கு மாகாண மக்களும் இந்த சேவையை பெறக் கூடியதாக இருக்கும். தற்போது இங்குள்ள நோயாளர்கள் ஏறத்தாழ 300 கி.மீ தூரத்திலுள்ள கண்டிக்கோ அல்லது 400 கி.மீ தூரத்திலுள்ள கொழும்புக்கோ செல்ல வேண்டி உள்ளது.

கொழும்பு, கண்டி அரச வைத்திய சாலைகளில் இதய நோயாளர்களுக்கு மொழிப் பிரச்சினையும் காணப்படுகின்றது. தனியார் வைத்தியசாலைகளில் இதயத்துக்குக் குருதி வழங்கும் இரத்தக் குழாய்களின் அடைப்பைப் பரிசோதிப்பதற்கான அன்ஜியோகிராம் (Angiogram) பரிசோதனைக்காக 35 ஆயிரம் தொடக்கம்

## விரைவில் முழுமைத்துவம் தேவை... அது எப்போது?

40 ஆயிரம் ரூபா வரை செலவாகின்றது.

இதயத்துக்குக் குருதியை விநியோகிக்கின்ற குழாய்களில் அடைப்பு இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள இதய சிகிச்சை நிபுணர்கள் முதலில் ETT (Exercise treadmill test) பரிசோதனை செய்யும்படி நோயாளர்களைக் கேட்கின்றனர். இந்தப் பரிசோதனையின் முடிவுக்கு ஏற்பவே அஞ்ஜியோகிராம் பரிசோதனை செய்யப்படுகின்றது. இந்தப் பரிசோதனையின் முடிவில் குறிப்பிட்ட நோயாளருக்கான சரியான சிகிச்சை முறையையும் சிபாரிசு செய்கின்றனர்.

இதனால் தனது நோயின் தன்மையை அறிந்துகொள்ளும் நோயாளி ஒருவர் மேலதிக சிகிச்சை தேவைப்படுமாயின் அது எத்தகையது, அதற்கான செலவு எவ்வளவாகும் போன்ற விவரங்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதனால் இனிவரும் காலங்களில் நோயாளர்கள் இதயநோய் சிகிச்சைக்கான பணத்தைத் தமது வலுவுக்கு ஏற்பபெற்றுக்கொண்டு தமது சிகிச்சையைத் தொடரலாம்.

முன்னைய காலங்களில் கொழும்புக்குச் செல்லும் நோயாளர்களுக்கு அஞ்ஜியோகிராம் செய்தபின்னர் உடனடியாக by pass சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டும் என்று இதய வைத்திய நிபுணர் சிபாரிசு செய்கின்றபோது அந்த நோயாளி அதற்கான ஆயத்தத்துடன் இருக்க மாட்டார்.

எனவே இதய வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி பொருத்தமான, தேவையான சிகிச்சை முறையை நோயாளர்கள் தெரிவு செய்ய முடியும்.

சில சந்தர்ப்பங்களில் அஞ்ஜியோகிராம் செய்தபின்பு மேலதிக சிகிச்சை தேவைப்படாமல் நோயாளர் மருத்துவ சிகிச்சையைத் தொடரமுடியும்.

முழு அளவிலான இதய சத்திர சிகிச்சைப் பிரிவு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுமாயின் இதயத்துக்குக் குருதி வழங்கும் குழாய்களிலுள்ள அடைப்புகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை (By Pass Surgery), வால்வு மாற்று சத்திர சிகிச்சை (Valve replacement Surgery) பிறப்பில் காணப்படுகின்ற இதய நோய்களுக்கான (Congenital heart disease) சத்திரசிகிச்சை என்பன மேற்கொள்ளப்பட முடியும்.

இது தவிர இதய சத்திர கிசிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்ட பின்பு கதீற்றர் ஆய்வு கூடத்தை முழுமையாகப் பயன்படுத்தலாம். இதன்மூலம் Angio Plasty, Stent வைத்தல், வால்வு சுருக்கங்களுக்கான சிகிச்சை முறை (Balloon valvular Plasty) போன்றவற்றையும் மேற் கொள்ளக் கூடியதாக இருக்கும். பிறப்பில் காணப்படுகின்ற ASD எனப்படும் சோணை அறைகளுக்கிடையில் காணப்படுகின்ற துவாரத்தில் கிட்டத்தட்ட 75% மானவை சத்திர சிகிச்சையின்றியே மூடக் கூடியதாக இருப்பதால் அவற்றையும் கதீற்றர் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ள முடியும்.

மொத்தத்தில் இதய சத்திர சிகிச்சைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும் போது இரண்டு வகையான நன்மைகள் கிடைக்கும். ஒன்று சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவேண்டியவர்கள், சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்தப்படுவர். இரண்டாவது, இதய சத்திரசிகிச்சை தொடர்பான வசதிகள் கிடைப்பதால் கதீற்றர் ஆய்வு கூடத்தினை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சை பிரிவு, இதய சிகிச்சைப் பிரிவு உள்ளடங்கலாக நான்கு மாடிக் கட்டடத் தொகுதி ஒன்று அமைப்பதற்கும் தேவையான உபகரணங்களுக் கும் 450 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டு உள்ளது. அதற்கென கட்டடத் தொகுதி தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கதீற்றர் ஆய்வுகூடத்துக்கு எதிராக உள்ள இடத்தில் அமைக்கப்படும். தேவைப்படும் நிதி கிடைத்தால் மட்டுமே முற்றுமுழுதான சேவை கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

கதீற்றர் ஆய்வு கூடத்தில் பணியாற்றுவதற்கெனப் பயிற்றப்பட்ட ஆளணியினரும் இதய சிகிச்சை நிபுணர்களும் இருந்தும், கதீற்றர் ஆய்வுகூடத்தை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக இருப்பது என்பது நோயாளர்களின் துரதிர்ஷ்டமே. இதய சத்திர சிகிச்சைப் பிரிவு, இதய சிகிச்சைப் பிரிவு அடங்கிய நான்கு மாடிக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு பூரணமான சேவையை இதய நோயாளர்கள் அனுபவிப்பார்கள் என்று எதிர்பார்ப்போம். ✱

செஞ்சடையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

இணுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த சோமசுந்தரம் யதீந்தா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (888232613V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் காப்புறுதிப் பத்திரம் என்பன சுன்னாகம் கே.கே.எஸ் வீதிக்கும் இணுவில் கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் இடையில் 05.07.09 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகத்தில் அமைந்துள்ள ஆபிரகாம் பெஷன் ஹவுஸில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தொடர்பு:- 0772284490, 021 3755154

## தேவை

யாழ். காட்சியறைக்கு பாதுகாப்பு அலுவலர்கள்

1) க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.
2) 24 - 45 வயதுக்கு உட்பட்டவர்கள்
3) நல்ல தேகாரோக்கியமுடையவர்கள்.
4) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இவ்விளம்பரத்திலிருந்து 7 நாளுக்குள் தங்கள் விண்ணப்பத்தை கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், குணநலச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு, கீழுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

Human Resource & Legal Manager
HUNTER & COMPANY PLC
P.O.Box 214, 130 Front Street, Colombo 11.
Tel: 2328171, Fax: 2447491
(சி/1620)

## வீடு, வளவு விற்பனைக்கு உண்டு

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையில் 789 பேருந்து பாதையில் வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்து ¾ km தொலைவில் 3¾ பரப்புக் காணி, வீடுவளவு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு:- 0779051154,0770544969

## பஸ் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள JJ - XXXX என்ற இலக்கமுடைய அரை சொகுசு பஸ் உடனடியாக விற்பனைக் குண்டு. தரகர்கள் தேவையில்லை
தொடர்பு:- 0778865513

## ஒத்துமாறல்

வவுனியா நகரில் மத்திய அரசின் திணைக்களம் ஒன்றில் (central) முகாமைத்துவ உதவியாளராகக் கடமைபுரியும் ஒருவர் யாழ் நகரில் பணிபுரியும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.
மாலை -6 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.
T.P.No. 0243242194

## கடை வாடகைக்கு

இல: 77, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிடமும் முன்னால் உள்ளது.
தொடர்புக்கு:- 077 3973164 (5670)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் (A 9 வீதி) காட்சியறை, அலுவலக, கடை என்பவற்றுக்கு பாவனைக்குரிய 700 ச.அடி கொண்ட இரண்டு தளங்கள் வாடகைக்கு உண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0776043794

## கடை வாடகைக்கு

இல 146 (374) யாழ்.மானிப்பாய் வீதியில் எல்லா விதமான வியாபாரத்துக்கும் ஏற்ற கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0772915826

## இலைக்கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச மூலிகைத் தோட்டம் நவக்கிரியில் இலைக்கஞ்சி வழங்கும்நிகழ்வுவைவ ரீதியாக நாளை திங்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஐ)

## வீட்டுடன்கூடிய காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு புனித சந்தியோகுமையோர் கோவிலுக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் முதலாவது இரண்டு பரப்புக் காணி ... த்துடன் கூடிய நல்ல தண்ணீர்க் கிணறு உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
021 2226266
077 4333276
(சி/1619)

## விற்பனைக்கு

நல்ல தண்ணீர், சுற்றுமதிலுடன் கூடிய வீட்டுடன் யாழ். நகரத்திலிருந்து 5 நிமிட தூரம் 2 பரப்பு, 6 குளி விற்பனைக் குண்டு.
0776142601

## Dolpin Van விற்பனை

LH113 -GL, 56-xxxx, 4 கதவு,நீளம், Manual New face, customback door, புதிய Engine, D/AC, Rotatable seats, PS/PM/C-lock, cutglass, boofer புதிய paint முகவர்கள் தேவையில்லை.
cash-21/90
கொழும்பு-தெகிவளை
0723705472

## விற்பனைக்கு

WPLC 6291 என்னும் இலக்கமுடைய Toyota, Daiyana வாகனம் விற்பனைக்கு உண்டு
தொடர்பு:- 077 3973164 (5669)

## Angels Beauty Parlour & Trainning Center

**ஏஞ்சல்ஸ் அழகு நிலையம், பயிற்சியகம்**

★ புதிய பிரிவுகள் ஆரம்பம்.
Diploma & Certificates Courses
(டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பயிற்சிகள்)

Facial / Hair Colour / Strighting
Bridal Makeup / Eye brow Shape / Cake Icing
Haircut / Perming

வார மற்றும் வார இறுதி வகுப்புக்கள் இடம்பெறும்.
இல: 94, கன்னாதிட்டி, (மக்கள் வங்கி அருகில்)
E-mail:- angels beautyparlour@ymail.com
T.P:- 077 6277332.
(5679)

## மலேசியா

**தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

## Mega Offer

| Printer | UPS | Router | Monitor | Dongle |
|---|---|---|---|---|
| Epson<br>Laser Printer - 11000/=<br>Ink Jet Printer - 4600/=<br>Photo Printer - 23500/=<br>CD Printer - 26500/= | DCP 650VA - 3800/=<br>1200VA - 9900/=<br>1KVa to 10KVa | D-Link<br>4 Port- 6300/=<br>4 Port Wireless 6800/=<br>Single Port - 3000/= | 19"Dell -10500/=<br>16" Topview - 9250/=<br>19" Asus - 11500/=<br>Kingston 4GB pen drive 900/= | MF180 - 3500/=<br>E 153 - 4000/=<br>Huawei - 5000/=<br>ZTE MF112 - 4750/=<br>Optus - 5250/=<br>D-Link - 5600/= |

## Thirumurugan Com Net

No.259,KKS Road, Jaffna
No.05, Thirunagar Road, Kilinochchi
T.P_ 021 222 7835

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Head phone, Woofer
Mother Board, Web camera
Key Board, Mouse



நம்பமுடியாத விலையில் நம்பகரமான உத்தரவாதத்துடன்

EPSON EXCEED YOUR VISION
D-Link Building Networks for People

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 08 . 1949
மறைவு 01 . 07 . 2009

**தம்பிப்பிள்ளை கந்தசாமி**
(UNHCR சாரதி)

அப்பா எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஈராண்டுகள் கடந்து விட்டன
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
என்றும் உம் நினைவுகளுடன்........

வாழைகாடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (5678)
குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ லண்டன் வதிவிட உரிமைபெற்ற 1976 ஆம் ஆண்டு உத்திரம் 1 ஆம் பாதம் 20 பாவம், உயரம் 5' 8" உடைய மணமகனுக்கு 1984 ஆம் ஆண்டுக்குப் பின்பு பிறந்த உயரம் 5' 2"க்கு மேல் 5'4"இக்குள், O/L என்றாலும் A/L என்றாலும் படித்த அழகான நிறமான மெல்லிய பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. ஸ்பொன்சர் செய்து எடுக்கப்படும்.
தொடர்பு : 077 5388785. (சி/1618)

## உதவி முகாமையாளர் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு யாழ்ப் பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு உதவி முகாமையாளர் (தமிழ், சிங்களம், ஆங்கிலம் தெரிந்த) ஒருவர் உடன்தேவை. Electrical, Mechnical அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். விருப்பம் உடையவர்கள் கீழுள்ளமுகவரிக்கு 15 ஆம் திகதிக்கு முன் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
இல: 68, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225575, 077 9877309.
(5663)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, வளன்புரத்தில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு அருகில் 3பரப்பு, வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு. காணிக்குரிய உறுதி யும் [illegible] உண்டு.
தொடர்பு: 077 8532352

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

From Cyprus & Poland our representative will be at Office on 12th July 2011. Please call for the free admissions

- UK → அதிகூடிய கட்டணம் - ரூபா. 150,000/- , Student Visitor Visa
- USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
- CANADA → IELTS, Sponsor தேவையில்லை, No age limit, PR
- POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- GERMANY → Tuition Fee இல்லை, IELTS 5.5, PR
- CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.

Next Intake: Aug.2011

பஸ்னா - 0778 438403, 0771000044, அல்சரா - 0778339943

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## மரண அறிவித்தல்

**திருமதி எஸ்தர் சொலமன்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எஸ்தர் சொலமன் (08.07.2011) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொலமனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜோசப் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் சரோஜினி, ராஜினி, குமுதினி ஆகியோரின் அருமைத் தாயும் காலஞ்சென்றவர்களான திரேசம்மா (மணி), பப்டிஸ்ட் மற்றும் பெனடிக்ட் (St. இனசன்ட் (A.C.)), றெஜினோல்ட் ஆகியோரின் சகோதரியும் ஜீவராஜா, காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் கருணாகரன் ஆகியோரின் மாமியும் சுஜித்தா, நிவோஷலா, சஞ்ஜீவன், சந்துருகன், ஜயனன் ஆகியோரின் பேர்த்தியும் எஸ்தர் மெனாசா, அன்ரனி மரினோ ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.07.2011) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18, நக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தகவல்: சந்துரு (பேரன்).
(5673)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இந்து, உருத்திரபுரம் ம.வி. உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயது பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் உருத்திரபுரம் மகாவித்தியாலய அணியும் சம்பியன் வென்றன.

காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் பூநகரி பிரதேச செயலகத் தெரிவு அணி வெற்றி பெற்றுள்ளது.

முதலில் இடம்பெற்ற ஆண்கள் பிரிவுகளுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.



இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் விவேகானந்தா வித்தியாலய அணியை எதிர்த்து உருத்திரபுரம் மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் இரு அணியினரும் ஆட்டம் தொடங்கிய முதல் எதுவித கோள்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் உருத்திரபுரம் மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நட்பு ரீதியான ஆட்டத்தில் பூநகரி பிரதேசசெயலகத் தெரிவு அணியை எதிர்த்துக் கிளிநொச்சி பிரதேச செயலகத் தெரிவு அணி மோதிக்கொண்டது.

இதில் பூநகரி பிரதேச செயலக தெரிவு அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் சிறந்த வீரராக பூநகரிப் பிரதேச செயலகத் தெரிவு அணியில் இடம்பெற்ற வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஞானமனேகரன் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த கோல்காப்பாளராக கிளிநொச்சி பிரதேச செயலகத் தெரிவு அணியில் இடம்பெற்ற வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நாகவர்ணன் தெரிவு செய்யப்பட்டார். இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்றஉறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.(த-23)

## வலிகாமம் வலய விளையாட்டு விசேட தேவையுடைய மாணவர் சம்பியன்



பெரியவிளான் றோ. க.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் விசேட தேவையுள்ள சிறிசங்கர்சாரலன், அருட்சோதி மதுஷா ஆகிய இரு மாணவர்களும் விசேட தேவை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வலிகாம வலயமட்டத்தில் பங்குபற்றி சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கத்தையும் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகள் கடந்த மாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



மாகாண மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளின் 11 வயதுப் பிரிவுக்கான மெய்வன்மைப் போட்டியில் 75 மீற்றர் ஓட்டத்தில் மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை மாணவி விதுஷனா நிர்மலேஸ்வரன் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். சாதனை படைத்த மாணவியுடன் பாடசாலை அதிபர் திருமதி கே.சரவணபவன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெறுப்பாசிரியர்கள். (த-26)

# கரவெட்டி விக்னேஸ்வராவை வென்றது நெல்லியடி ம.வி.

யாழ்ப்பாணம், ஜூலை 10

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகம், வடமராட்சி பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ருவென்ரி-20 கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

பிரியதர்சன் 99 ஓட்டங்களையும், டினாலன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி வீரர்களான கௌதமன், அனுரதன், ஆதவன், ஜெயதர்சன், அனோஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

209 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அனுரதன் 40 ஓட்டங்களையும், றஜீவன் 31 ஓட்டங்களையும், விதுஷன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி வீரர்களான பிரசாந், அந்ததன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் டினாலன், மதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சிறந்த வீரராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரியதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (த-23)

# மாற்று வலுவுள்ளோர் போட்டியில் வடமாகாணத்தில் இருந்து 7 பேர்

நாவற்குழி, ஜூலை 10

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 7 பேர் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீதுவ, நாரகேன்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள தேசிய அபிலிம்பிக் போட்டிகளில் தேசிய அபிலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சும், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து மே மாதம் யாழ்ப்பாணத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கு நடத்திய போட்டிகளில்தான் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த வருட இறுதிக்குள் தென்கொரியாவில் நடைபெறவுள்ள சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்பவர்களைத் தெரிவதற்கான போட்டிகளில் ந.ஜெயக்குமார், கி.லோஜினி, ந.பிருந்தாகரன் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

ஏனைய 4 பேரும் தேசிய மட்டப்போட்டிகளில் மட்டும் பங்குபற்றுகின்றனர்.

அண்மையில் கிரேக்க ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச பரா ஒலிம்பிக் போட்டியில் சிவபூமி இல்லத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அதுபோல மாற்றுவலுவுள்ளோரின் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தும் தென்கொரிய அபிலிம்பிக் போட்டிகளில் வடமாகாண வீரர்கள் இந்த முறை பங்கேற்றுத் தமது திறமைகளை வெளிப்படுத் [illegible] (த-12)

# சர்வதேச மைதானம் அமையும் இடத்தை அமைச்சர் பார்வை

கிளிநொச்சி, ஜூலை 10

வடமாகாணத்தில் சர்வதேச விளையாட்டரங்கு அமையவுள்ள இடத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே நேரில் சென்று பார்வையிட்டார். கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து சென்று பார்வையிட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் சர்வதேச போட்டிகளை நடத்தக்கூடிய வகையில் விளையாட்டு மைதானங்கள் இல்லை. இதன் காரணமாக 325 மில்லியன் ரூபா செலவில் புதிய விளையாட்டரங்கை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த விளையாட்டரங்கு அமையவுள்ள இடத்தையே அமைச்சர் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் பின்னர் மாவட்ட செயலகத்தில் வடமாகாண விளையாட்டுத்துறையை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் திறன்மிகு வீரர்களைத் தெரிவு செய்து வீரர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றைச் சர்வதேசவிளையாட்டரங்கு அமையவுள்ள இடத்தில் நடத்துவது எனத் தெரிவிக்கப்பட்டது.(த-6-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஆறுமுகம்



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், தம்பா ஒழுங்கை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் நேற்று (09.07.2011) சனிக்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து - சின்னத்தம்பி, இளையபிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கந்தையா, இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயகுமார், சசிகலா, (ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), சத்தியகலா, சதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெ.ஜெயக்குமாரின் (சுரேஸ் பற்றிக்கடை, சுன்னாகம்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பா ஒழுங்கை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## காரைநகர் முன்பள்ளிக்கு தண்ணீர் தாங்கி அன்பளிப்பு

காரைநகர், ஜூலை10

காரைநகர் பிட்டியெல்லை முன்பள்ளிப் பாடசாலைக்கு ஐ.தே.கவின் யாழ் .மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தண்ணீர் தாங்கி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இந்த முன்பள்ளிப் பாடசாலைக்கு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் பாடாசலையின் குறைபாடுகள் குறித்துக் கேட்டறிந்தார். இதனை அடுத்து தண்ணீர்த் தாங்கி ஒன்றினை அவர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதே வேளை, பிட்டியெல்லைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் இருந்து 7 லட்சம் ரூபாவினையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன் இந்தக் கிராமங்களுக்கு சென்ற அவர் மக்களை சந்தித்து குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார்.

தமது கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே மின்சாரம் வழங்குவதற்கு 7 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **திரு. செல்லன் சின்னராசா**

(உரிமையாளர், வினோ பல் பொருள் வாணிபம்)

சீரோடும் சிறப்போடும் சிறந்த நற்குணத்தோடும்
பாரோர் போற்ற பண்போடு வாழ்ந்து
பேரோடும் புகழோடும் வாழ வைத்த எம் தலைவா
பதை பதைக்க விட்டு பரமனடி சேர்ந்தாயோ.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி: திரு. ஈஸ்வரி சின்னராசா
பிள்ளைகள்:
சி.அனுராஜ், சி.சிந்துஜா, சி.வினோறாஜ்.

மருதங்கேணி,
தாளையடி.

## களஞ்சிய உதவியாளர் தேவை

எமது நிறுவனத்தில் மேற்குறித்த பகுதியில் உதவியாளராக வேலை செய்வதற்கு A/L வரை படித்த ஆண்கள் தேவை.
அலுவலக தினங்களில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரைக்குமிடையில் சுய விரைக் கோவையுடன் சமுகம் தரவும்.

**நலின்ஸ் பிறைவேற் லிமிட்டெட்,**
**இல. 8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

## தவறிவிட்டது

கடந்த 08.07.2011 வெள்ளிக்கிழமை வவுனியாவிலிருந்து தனியார் மினி பஸ் மூலம் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்தபோது இயக்கச்சிக்கும் பளைக்குமிடையில் பெறுமதிமிக்க உடுபுடைவைகள் அடங்கிய பாக் ஒன்று தவறிவீழ்ந்து விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
T. குகராஜன், ராணி வாசா NEAR CHURCH கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P: 0755279959, 0777492273, 0217210858.

## கார் தேவை

பழைய மொடல் கார் ஒன்று தேவை.
தொடர்பு:- 0771807672

## வேலையாள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள குளிர்பான (ஐஸ் கிறீம்) நிலையத்தைப் பொறுப்புடன் நடத்தக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.
தொடர்பு: 0777804493

## கலை விழா

பருத்தித்துறை, ஜூலை10

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் ஆனித் திங்கள் நிறை மதி கலை விழா எதிர்வரும் 14ஆம்திகதிவியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது. இந்த விழாவுக்குமுதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் இடம் பெறவுள்ளன. விழாவில் கலந்து கொள்ளும் அனைவரும் பண்பாட்டுக் கோலத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-190)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஸ்வலிங்கம் மனோன்மணி



ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஸ்வலிங்கம் மனோன்மணி நேற்று (09.07.2011) சனிக்கிழமை அதிகாலை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -வள்ளியம்மை தம்பதியரின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (பொன்னுக்கோன் மாஸ்ரர்- ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, சரவணமுத்து, கந்தையா மற்றும் செல்லப்பா ஆகியோரின் சகோதரியும், சந்திரமணி(கனடா), வள்ளிநாயகி(கொழும்பு), கதிர்காமநாதன், விக்னராஜா(சுவிஸ்), கேதீஸ்வரன்(ஜேர்மனி), கலேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சிவராஜா (முன்னாள் அதிபர், யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்-கனடா), சிவராசா(கொழும்பு), ஜெகதீஸ்வரி, மல்லிகா(சுவிஸ்), சோதீஸ்வரி(ஜேர்மனி), சந்திரவதனி(கனடா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற செல்லத்துரை(ஓவசியர்) அன்பு மைத்துனியும், கனடாவில் வசிக்கும் சசிகா, பிரதீபன், வினுதீப் காலஞ்சென்ற சிவகீசன் மற்றும் ஜெயகீசன், உதயகீசன்(U.K), கார்த்திகா, சோபிகா, கௌசிகா(யாழ். இந்து மகளிர் கல்லூரி), சுவிஸில் வசிக்கும் விமல், விதுஜா, வினோஜன், ஆகாஷ், அகல்யா, (ஜேர்மனி), காருணி, சின்மயி(கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

02, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

### கிஸ்ணர் கார்த்திகேசு



வட்டு. வடக்கைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை வசிப் பிடமாகவும் கொண்ட கிஸ்ணர் கார்த்திகேசு நேற்று (09.07.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிஸ்ணர்- பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பாக்கிநாதன், சுந்தரலிங்கம், சரஸ்வதி, தவமணி, காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் குணரத்தினம், வஸ்தலா, பரமேஸ்வரன் ஆகியோரின் ஆன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

மடத்துப்பிள்ளையர்
கோயிலடி, தொல்புரம்
கிழக்கு, சுழிபுரம்.

(5699)

தகவல்:
சா.பாக்கியநாதன்
(விநாயகர்
மரஅரிவு ஆலை)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனங்களின் உரிமையாளராகிய
அற்புதேவராஜா அவர்களின் அன்புத் தந்தையும்
முன்னாள் பிரபல தொழிலதிபரும் ஆகிய

**காசிநாதர் கந்தையா சதாசிவம்**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஊழியர்கள்,**
**அற்புதா ரேடிங் கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**சிவசம்பு வைன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளவத்தையில் இருந்தே மீண்டும் யாழ்ப்பாணத்துக்கான சொகுசு பஸ் சேவை

## பஸிலின் பணிப்பின் பேரில் நேற்றைய கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு வெள்ளவத்தை கடற்கரை வீதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான சொகுசு பஸ் சேவையை ஆரம்பிக்க இணக்கம் ஏற்பட்டது. இதன்படி பழைய இடத்தில் இருந்தே பஸ் சேவை நேற்று இடம்பெற்றது.

திடீரென கிடைத்த உத்தரவின் பேரில் பஸ் சேவை புறக்கோட்டைக்கு இடம் மாற்றப்பட்டதால் மக்கள் அவலமும் சிரமமும் அடைந்தனர். இந்த விடயம் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரின் பணிப்பின் பேரில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

பஸ் நிறுவன உரிமையாளர் தியாகராஜா துவாரகேஸ்வரன் தலைமையில் பஸ் உரிமையாளர்கள் பங்குபற்றினர்.

பொலிஸார் தெரிவித்த புதிய நடைமுறைகளை ஏற்றுக் கொண்டதை அடுத்து பழைய இடத்தில் இருந்து சேவையை நடத்த இணக்கம் ஏற்பட்டது.

இதன்படி பஸ்சேவை பழைய இடத்தில் இருந்தே மீண்டும் நடைபெறுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினார். (ஒ-ஐ)

# சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்தின் மீது நேற்று அதிகாலைவேளையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வல்வெட்டித்துறையிலுள்ள தமது அலுவலகம் இனந் தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை தாக்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

அதிகாலை மூன்று மணிக்கு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சாக்கடைக் கழிவுகளை பொலித்தீன் பைகளில் நிரப்பி அவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதனால் தாக்குதல் நடத் தப்பட்ட பகுதி அலங்கோலமாகக் காட்சி அளித்தது. தாக்குதல் நடத்தியவர்கள் தமது வாகனத்தில் உடனடியாக அங்கிருந்து அகன்று விட்டனர் என்பதை வாகனச் சத்தம் புலப்படுத்தியது.

இச் சம்பவம் பற்றி உடனடியாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தொலை பேசியில் அறிவித்தேன். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தாக்குதல் நடந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து வல்வெட்டித்துறைப்பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள்ளேன் - என்றார். (த-4-236)

# அச்சுவேலி - தொண்டமானாறு வீதி இன்று போக்குவரத்துக்குத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

அச்சுவேலி- தொண்டமானாறு வீதிப் போக்குவரத்துக்காக இன்று மு.ப 11 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தப் பாதையை வைபவ ரீதியாக திறந்து வைப்பார்.

கடந்த வருடம் செல்வச் சந்நிதி ஆலய பெருந்திருவிழாவின் போது இந்தப் பாதை பொது மக்கள் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டது. எனினும் உற்சவம் பூர்த்தியானதும் பாதை மீண்டும் மூடப்பட்டது. சுமார் 20 வருடங்களின் பின் இந்தப் பாதை பொது மக்கள் போக்குவரத்துக்கு இன்று திறக்கப்படவிருக்கிறது. (ஒ-ஐ)

## பிரசாரத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

தாம் தமது ஆதரவாளர்கள் சகிதம் பிரசார நடவடிக்கைக் காகச் சென்ற போது படையினர் மறித்து அங்கு செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தனர் என விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரனின் கவனத்துக் குக் கொண்டு வந்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

அரச சார்பு வேட்பாளர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பிரசாரம் செய்ய படையினர் அனுமதித்தனர் என்பதையும் கூட்டமைப்பு வேட்பாளர் சுட்டிக் காட்டினார். (ஒ-ஐ-426)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### இந்தியாவை ஒருபோதும் பகைக்க மாட்டோம்

நாங்கள் இந்தியாவை ஒருபோதும் பகைக்க மாட்டோம். இந்தியாவிலிருந்து தான் தமிழர்களும், சிங்களவர்களும் இந்த நாட்டுக்கு வந்தனர். இந்தியா எமது நெருங்கிய நட்பு நாடு.

இந்திய மீனவர்கள் எமது நாட்டில் தடைசெய்யப்பட்ட 'ட்றோலர்'களைப் பாவித்து எமது பிரதேசத்தினுள் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அவர்களைக் கைது செய்தால் உடனடியாக தமிழ் நாட்டில் போராட்டம் நடக்கிறது. ஆனால் தமிழக மீனவர் எமது கடற்பகுதியில் நுழைகின்றனர். அது குறித்து ஜெயலலிதாவோ வேறு எவருமோ நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

நான் முன்னர் அதாவது சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது இந்திய அமைதிப் படை 'ஆட்சி' செய்து கொண்டிருந்தது. அப்போது என்னை ஆரத்தழுவி வரவேற்றார் தம்பி பிரபாகரனுடன் இருந்தவரான பாலகுமாரன் - என்றார். (ஒ-15)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று மாலை முன்னாள் அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரையை லியம் பொக்ஸ் ஆற்றினார். (ஒ-ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த அரசு முயன்று வருகிறது. அந்த வகையில் அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது எட்டப்படும் இணக்கத்தின் அடிப்படையில் தயாராகும் ஆவணத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் தீர்வு யோசனையை முடிவு செய்யலாம் என்ற முனைப்புடன் அரசு திட்டம் வகுத்துச் செயற்பட்டு வருகிறது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இவ்வாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்திவருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அரசின் இந்த செயற்பாடு குறித்து கருத்து வெளியிட்ட ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல - அரசு முன்வைத்த மங்கள முனசிங்க, திஸ்ஸ விதாரண ஆகியோரின் அறிக்கைகளுக்குப் பூரண ஆதரவை நாம் தெரிவித்தோம்.

அதே போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு, பேச்சு நடத்தி அவர்களுடன் காணும் இணக்கப் பாட்டுடன் தெரிவுக்குழுப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை ஆராய்ந்து ஆதரிப்பது குறித்து முடிவு செய்வோம் -என்றார். (ஒ-ஐ)

## பொதுமக்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயபுரம், முழங்காவில், வலைப்பாடு ஆகிய கிராமங் களைச் சேர்ந்தவர்களே இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

'சனல் 4'க்கு எதிராக சுலோகங்கள் கொண்ட சுலோக அட் டைகளை அந்த மக்களிடம் கொடுத்த படையினர் பேரணியாகச் செல்லுமாறு கட்டளையிட்டனர். அதைத்தொடர்ந்து அந்த மக்கள் மனக்குமுறலுடன் அணி வகுத்து சென்றனர் என் றும் அந்தப் பேரணியை விசேட ஏற்பாட்டில் சிலர் படம் எடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் சென்ற ஒருவர் தமது மனக்கொதிப்பை, எரிச்சலை ஆவேசத்துடன் வெளியிட்டார். அவர் கூறியதாவது:-

"எம்மை இராணுவத்தினர் அச்சுறுத்தி 'டிரக்'கில் ஏற்றினர். வீடு வீடாகச் சென்ற படையினர் ஆயுத முனையில் வீட்டுக்கு ஒருவராவது வர வேண்டும் என்று நிர்ப்பந்தித்தே 'டிரக்'கில் ஏற்றினர். பூநகரிக்கு வந்து இறங்கியதும் தான் எமக்கு விடயம் தெரிய வந்தது.

என்ன செய்வது? முள்ளிவாய்க்காலில் எமது உறவுகளை இழந்த நிலையில், அங்கு நடந்த கொடூரங்கள், அவலங்கள் நேரில் பார்த்த அனுபவித்த எமக்கு இந்த நிர்ப்பந்தம் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் நிலைமையை உணர்ந்து கொண்டு மனதைக் கல்லாக்கிக்கொண்டு இந்தப் பேரணியில் ' நடை பிணங்களாகச் சென்றோம். கடவுள் தான் எம்மை காப்பாற்ற வேண்டும்'' என்று நா தழுதழுக்க தெரிவித்தனர். (ஒ-ஐ-246)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண ஆளுநர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்ட அதிகாரிகள், யாழ்.மாவட்டத்தின் முக்கிய திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். நண்பகல் 12.30 மணி முதல் 4.30 மணி வரை இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்கள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். இதற்கான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் சகல பிரதேச செயலர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சரியாக ஆராயப்பட்டுள்ளது. வீதி அகலிப்புப் பணிகளின் தாமதம் பருத்தித்துறை யாழ். வீதி 'காப்பெற்' வீதியாக போடப்படாமை குறித்தும் பஸில் ராஜபக்ஷ வினவினார். அத்துடன் போக்குவரத்து வசதியீனங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. சகல பிரதேச செயலர்களாலும் மின்சாரம் தொடர்பில் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. இது குறித்து விரைவில் தீர்வு எட்டப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளும்வேலைத் திட்டங்களை ஒரு வார காலம் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இங்கே தங்கி இருந்து ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ-ஐ-15)

## மரண அறிவித்தல்



### வீரகத்தி அப்பாக்குட்டி

வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி அப்பாக்குட்டி நேற்று (09.07.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாக்குட்டி பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - மற்றும் அசுபதம் தம்பதியரின் மருமகனும் பொன்ராஜாவின் (உரிமையாளர், ANTALIAN FANTASIA RESTAURANT, FINLAND) அன்புத் தந்தையும் சந்திரோதயமலரின் (Cultural Mediator, Finland) மாமனாரும் இந்திரஜித் (Finland M.Sc. Software Engineering U.K), ரஞ்சித் (Finland மாணவன், 3ஆம் வருட கணினி பொறியியல் பீடம்), ரஜிகா (Finland 2 ஆம் வருட கணினி பொறியியல் பீட மாணவி)ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற திரவியசிங்கம் மற்றும் செல்லத்துரை, சாந்தாதேவி, இலங்கைநாதன், கந்தசாமி (U.K) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக இன்று (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னகம்,
வதிரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன சிரேஷ்ட ஆசிரியரும், எமது மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் ஆசிரிய ஆலோசகருமான திருமதி. வெ.அமிர்தாம்பிகை அவர்களினதும் மற்றும் எமது நிறுவன ஆசிரியரான திருமதி க.செயாவல்லி அவர்களினதும் பாசமிகு சகோதரன்

அமரர்
கந்தசாமிஐயர் முத்துக்குமாரசாமி
(முகாமையாளர், பாரதிபதிப்பகம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மதுரம் இன்ஸ்ரிரியூட், மதுரம் கிட்ஸ், கோப்பாய். (5691) கல்விச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்



கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சுவேலைகள், Plumbing, Electrical, Painting, Grill Work, பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும், நவீன முறைகளிலும், குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

அழையுங்கள் - 0776679564

*எங்கள் சேவை உங்கள் இல்லம் தேடிவரும்*

**AXSHAYA CONSTRUCTION, JAFFNA**

---

ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் யாழ்ப்பாணம்

### கும்பாபிஷேக தின மஹா சங்காபிஷேகமும் உற்சவங்களும்

நிகழும் கர வருஷம் ஆனித்திங்கள் 26 ஆம் நாள் (11.07.2011) திங்கட்கிழமை காலை 7 மணி முதல் ஸ்ரீ தேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபனாபிஷேகமும் நடைபெறும்.

அன்றைய தினம் ந.ப. 12 மணிக்கு ஏகாதசி உற்சவமும் பி.ப. 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து சுவாமி புன்னை விருட்சப் பூந்தொட்டியில் வெளி வீதி உலா வரும் நிகழ்வும் நடைபெறும்.

இப்பெருவிழாவில் அடியார்கள் யாவரும் பங்குபற்றி எம்பெருமாளின் திருவருளைப்பெற்று உய்வீர்களாக.

குறிப்பு: 12.08.2011 வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரத உற்சவம் நடைபெறவுள்ளது. வரலக்ஷ்மி விரத நூல் பெறுவதற்கான பதிவுகள் கும்பாபிஷேக தினத்தில் 11.07.2011 இருந்து தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

சுபம்

ஆதீன மகா சபை, ஸ்ரீ வெங்கடேச வரதராஜர் பெருமாள் தேவஸ்தானம், வண்ணை/யாழ்ப்பாணம். தொ.பே. 2222476

---

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

**Vivekananda Academy**

(Centre For International Language Studies)

No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.

[அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்]

*அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.*

GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

---

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்கு உகந்த நல்ல நிலையில் உள்ள சோக்கேஸ் மற்றும் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777246461

---

## அல்ஷேசன் நாய் குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய ஜெர்மன் செப்பட், ஐரிஸ் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு

துர்க்கா பாம், மின்பா நிலைய வீதி, சுன்னாகம்

தொ.பே.: 0779346599, 0213217730

---

## BIT Revision Free

Revision Course Fee

MCS University of Colombo

Register before 12.07.2011

Supported By UNDP/JRRP

324,Palaly Road,Parameswara Junction

For new batch Scholorship Details,Pls SMS 07772395895

மேலதிக கற்கைநெறிக்கட்டணம் இன்றி BCS, Com-Engineer(USA)Oracle JAVA, IELTS / TOEFL

---

## ரூபா 50,000/- க்கு

மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

### ஐஸ் கிரீம் இயந்திரம்



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**

(MEMBER OF PLUSS INT.)

No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.

Hotlines: 077 391 8870, 077 1066902

---

## பிரபல தையலகம் ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை

கோண்டாவிலில் 15 வருடகாலமாக இயங்கிவரும் சாருசன் தையலகத்துக்கு யுக்கி மெசின் மூலம் நவீன முறையில் ஆண்கள் பெண்களுக்கான ஆடைகள் தைப்பதற்கு இருபாலாரும் தேவை. மற்றும் தையல் பழக விரும்புபவர்களும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். தொடர்புகளுக்கு: சாருசன் தையலகம் கோண்டாவில் வடக்கு, (கோண்டாவில் தில்லையம்பதி)

---

TILKO

## தேவை

1) RESIDENCE MANAGER - 1
2) OPERATION MANAGER - 1
3) F and B MANAGER - 2 (பகல்/ இரவு)
4) பராமரிப்பு மேற்பார்வை அதிகாரி-2

(முன் அனுபவம் உள்ளவர்கள்)

5) பராமரிப்பு உத்தியோகத்தர் - 8 (பகல்/ இரவு)
6) காசாளர் ( RESTAURANT - விடுதி)- 2 (பகல்/ இரவு) கணினி ஆங்கிலம் தெரிந்தவர்கள்
7) உணவு பரிமாறுபவர் (Waiter) - 8 (பகல்/ இரவு)
8) விடுதி பராமரிப்பாளர் - 8 (பகல்/ இரவு)
9) Plumber (எலக்ரிக்கல் வேலையும் தெரிந்தவர்கள்) - 2 (பகல்/ இரவு)
10) General Cleaner - 8 (பகல்/ இரவு)
11) பூந்தோட்டப் பராமரிப்பாளர் - 2 (பகல்/ இரவு)
12) STORE KEEPER - 2 (பகல்/ இரவு)
13) பணியாளர் (BARMAN) (பகல்/ இரவு) (ஆங்கிலம் சிங்களம் தெரிந்தவர்கள்)-3

*முன் அனுபவம் உள்ளவர்களும் பயிலுனர்களும் விண்ணப்பிக்கலாம்.*

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். சுயவிவரக் கோவையுடன் 15.07.2011 இற்கு முன்னர்.கீழ்க்காணும் முகவரிக்கு தபாலில்/நேரில் / e-Mail இல் அனுப்பவும்.

பொது முகாமையாளர்

**TILKO JAFFNA CITY HOTELS (PvT) LTD**

70/6, K.K.S. ROAD, JAFFNA.

e-Mail:- tilkojaffna@gmail.com.

---

## தேவை

Elephant House ஐஸ்கிறீம் நடமாடும் சேவைக்கு ஆள்கள் தேவை.

ஓட்டோ சாரதியாகவும், விற்பனையாளராகவும் இருக்கக்கூடிய ஒருவர் தேவை.

சாரதி அனுமதிப்பத்திரம், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் பத்திரம் அவசியம்.

தொடர்புகளுக்கு: இல.56 மணிக்கூட்டு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 0779910154

---

## உல்லாச விடுதிக்கான பயிலுநர்கள் தேவை

கிறீன் கிறாஸ் உல்லாச விடுதியில் (Green Grass Hotel & Restaurant) உணவு விடுதியில் பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். சுற்றுலாவும் உல்லாச விடுதியும் முகாமைத்துவ பாடசாலையில் பல வருடங்கள் பணியாற்றி, அனுபவமுள்ள, திறமை மிக்க ஆசிரியரான ஆ.கதிர்காமலிங்கம் என்பவரால் பயிற்சியளிக்கப்படும். ஆங்கில அறிவு உடையவரும் 18 இற்கும் 30இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களும் விரும்பப்படுவர். இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நற்சாட்சிப் பத்திரத்துடனும் விண்ணப்பப் படிவத்துடனும் நேரில் சமுகம் தரவும்.

மூன்று மாதங்கள் பயிற்சி முடிந்தபின் நிரந்தர வேலையும் ரூபா 15000.00 - ரூபா 20000.00 வரை சம்பளம் பெறக்கூடிய வாய்ப்புண்டு. பயிற்சி காலத்தில் ரூபா 8000.00 சம்பளம் வழங்கப்படும்.

**கிறீன் கிறாஸ் ஹோட்டல்** இல.33, ஆசீர்வாதம் ஒழுங்கை,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. No: 021 2224385, 021 2221686

---

## உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.

ஜீ.ரீ.வி என்ரபிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.

11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.

கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

---

ESOFT

The Leader in Professional ICT Education

## பதவி வெற்றிடங்கள்

1.விரிவுரையாளர்கள்
2.போதனாசிரியர்கள்
3.அலுவலக உதவியாளர்கள்

### வெற்றிடங்களுக்கான கிளைகள்

1.கிளிநொச்சி 2.மன்னார் 3.வவுனியா

உங்கள் சுயவிபரக்கோவையை 17/07/2011 இற்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

HUMAN RESOURCES MANAGER,
ESOFT COMPUTER STUDIES (PVT)LTD
Regional Head Office-North
166/3, Navalar Road,
Jaffna.

---

## வீடு வளவு விற்பனைக்கு

கோப்பாய், இருபாலை சந்தி அருகில் பருத்தித்துறை வீதியில் பத்து பரப்பு (நில. பர.10) காணி உடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

0777431100, 0112610300

---

## கார் விற்பனைக்கு உண்டு

KN XXXX என்னும் தொடர் இலக்கமுடைய Toyota Axio 141 G வெள்ளை நிறமுடைய கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0772269856

---

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, சிற்றம்பலம் வீதி, முதலாம் ஒழுங்கையில் வீட்டுடன் கூடிய 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 0771972732, 0770870877

---

DHL

## உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750

Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss Rs900

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.

DHL Online Tracking

குறிப்பு

DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.

ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

TCN Express,
2B,Nelsan place,Colombo-06.

Customer service No.021 222 7835




## திருமுருகன் கொம்நெற்

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போத்தல்களால் கட்டப்பட்ட ஆலயம்






உலகிலேயே கண்ணாடிப் போத்தல்களால் கட்டப்பட்ட ஒரே ஆலயம் Wat Pa Maha Kaew என்ற ஆலயம் ஆகும். இந்த ஆலயம் தாய்லாந்தின் தலைநகரமான பேங்காக்கிலுள்ள Siasaket என்ற மாகாணத்தில் அமைந்துள்ளது.

புத்த துறவிகள் அவர்களின் குடில்களை அலங்கரிக்கச் சேர்த்து வைக்கப்பட்ட போத்தல்கள் ஒரு கட்டடம் கட்ட போதுமானதாக இருந்தது. அந்த அழகான குடிலைப் பார்த்த மக்கள் கண்ணாடிப் போத்தல்களை நன்கொடையாகக் கொடுக்க ஆரம்பித்தனர். 1984 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் 25 ஆண்டுகளுக்கு பின் 1.5 மில்லியன் போத்தல்களை வைத்து முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வல்ல பாகற்காய்

எமது உடலில் உள்ள பல புழுக்களினால் தான் எமக்கு நோய் வருகிறது. சரியான உணவு உண்ணும் பட்சத்தில் புழுக்கள் அழிந்து நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிக்கும்.உடலில் உள்ள புழுக்கள் அழிந்து நோய் எதிர்ப்பு சக்தி உடலுக்கு அதிகரிக்க இயற்கை அளித்த அருமையான காய் தான் பாகற்காய்.




✱ பாகல் இலையின் சாறு ஓர் அவுன்ஸ் அளவில் சிறிது வறுத்துப் பொடித்த சீரகத் தூளைக் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டால் விஷ சுரம் நின்று விடும்.

✱ பாகல் இலையை அரைத்து உடம்பெல்லாம் தடவி ஒரு மணி நேரம் ஊறிய பின் குளிக்க வேண்டும். இவ்வாறு மூன்று நாள்கள் செய்து வந்தால் போதும் நாய்க்கடியின் விஷம் உடம்பில் ஏறாது.

✱ பாகல் இலைச் சாற்றில் காசிக் கட்டியை உரைத்து சிரங்கின் மேல் தடிப்பாகத் தடவி வந்தால் ரத்தம் சுத்தம் செய்யப் பெற்றுச் சிரங்கு உதிர்ந்து விடும்.

✱ பாகல்வேரை சந்தனம் போல் அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து உடற்பகுதியின் உள்ளும், புறமும் தடவி வந்தால் பெண்களுக்குக் கருப்பை நோய் தீரும். பிரசவத்துக்கு பின் வரும் மண்குத்தி நோய்க்கு இது கைகண்ட மருந்தாக அமையும்.

✱ ஒரு பிடி கொடுப்பாகல் இலையுடன் 5 அல்லது 6 மிளகைச் சேர்த்து காரமற்ற அம்மியில் அரைத்து கண்களைச் சுற்றிப் பற்றுப் போட்டு வர மாலைக் கண் நோய் குணமாகும்.

✱ பாகல் இலைச் சாற்றை நிறையக் குடித்து வாந்தி எடுத்தால் அத்துடன் பாம்பு (கண்ணாடி விரியன்) கடித்த விஷம் நீங்கும்.

✱ பாகல் இலைச் சாற்றை ஓர் அவுன்ஸ் எடுத்து அதில் அரை அவுன்ஸ் நல்லெண்ணெயைக் கலந்து உட்கொண்டால் உடனே கொலரா நீங்கும்.

✱ நீரழிவுக்குக் குணம் தெரியும் வரை ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றில் உளுந்தளவு பெருங்காயப் பொடியைக் கலந்து சாப்பிட்டு வர வேண்டும்.

✱ ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றுடன் சமபாகம் ஆட்டுப்பால் அல்லது பசுவின் மோர் கலந்து மூன்று நாள்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் காசநோயை மட்டுப்படுத்தும்.

✱ மேற்கிந்தியத் தீவுகளில் சிறுநீரகக் கற்களுக்கும், காய்ச்சலுக்கும், குடல் புண், வாயுத் தொல்லைகளுக்கும் இது மருந்தக அமைகின்றது.

✱ இலையைக் கொதிக்க வைத்து, சாறு எடுத்து கல்லீரல் உபாதைக்கு பயன்படுத்துகிறார்கள்.

✱ நீரிழிவு நோய்க்கு மருந்தாக முற்றிய பாகற்காயை உணவில் பயன்படுத்தலாம்.

✱ பாகற்காய் பழம் டொனிக்காகவும், மாதவிடாய் ஒழுங்கின்மையை சரிப்படுத்தவும் உதவுகிறது.

✱ உடலில் கட்டி, புண்கள் இருந்தால் ஒரு கப் பாகற்காய் சூப் எடுத்து அதில் ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட மூன்று மாதங்களுக்குள் ரத்தம் சுத்தமாகி தோல் பளபளப்பாகி விடுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக பார்வைத்திறன் கொண்ட பூச்சிகள்

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பூச்சிகள் அதிக பார்வைத் திறனுடன் இருந்திருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

51 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பூச்சியின் படிமம் அவுஸ்திரேலியாவில் கண்டறியப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தென் பகுதியில் உள்ள கங்காரு தீவில் அடிலைடு பல்கலைக்கழகம் மற்றும் தெற்கு அவுஸ்திரேலிய அருங்காட்சியக குழுவினர் இணைந்து அண்மையில் தொல்பொருள் ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

இதில் 51.5 கோடி ஆண்டு பழமையான பூச்சியின் படிமத்தை கண்டுபிடித்துள்ளனர். இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது:

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினங்களின் பார்வைத் திறன் குறைவாக இருந்திருக்ககூடும் என்று நம்பப்பட்டு வந்தது.

கங்காரு தீவில் கிடைத்திருக்கும் படிமத்தை வைத்துப் பார்க்கும்போது அவற்றின் பார்வைத் திறன் நன்கு இருந்திருக்க வேண்டும் என்பது நிரூபணமாகியுள்ளது.

தற்போது கிடைத்திருப்பது தட்டான் போன்ற பூச்சியாக இருக்கலாம் என்று தெரிகிறது. இவை கூட்டுக்கண் அமைப்பு கொண்டவை. இதன் கண்ணில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான லென்ஸ்கள் இருந்திருக்கலாம்.

54 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் ஏற்பட்ட மாபெரும் வெடிப்பு நிகழ்வுக்கு அப்புறம் விலங்குகள், பூச்சியினங்களின் பார்வைத் திறன் அதிகம் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

இதுதொடர்பான ஆய்வு நடந்து வருகிறது. மனிதர்களின் கண்ணில் ஒரே ஒரு லென்ஸ் மட்டுமே உள்ளது.

தற்போது இருக்கும் தட்டான்பூச்சியின் கண்ணில் சுமார் 30 ஆயிரம் லென்ஸ்கள் உள்ளது குறிப்பி கது.




# எதிரியை இனங்கண்டு தாக்கும் எறும்பு



டெம்னோ தோரக்ஸ் வகையை சேர்ந்த எறும்புகளுக்கு தங்களது எதிரிகளை எளிதில் அடையாளம் காணமுடியும். அந்த எறும்புகள் எதிரியை விரட்டும்.

இந்த டெம்னோ தோரக்ஸ் எறும்பு வசிக்கும் பகுதிக்குள் ஸ்லேவ் மேக்கர் என்ற எறும்புகள் அடிக்கடி படையெடுத்து அட்டகாசம் செய்யும். ஸ்லேவ் மேக்கர் எறும்புகளை அடையாளம் கண்டதும் டெம்னோ தோரக்ஸ் வகை எறும்புகள் மனிதர்களை கடிப்பது போலவே தாக்கிக் கடிக்கும். இதில் ஸ்லேவ் மேக்கர் எறும்புகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு ஓட்டமும் நடையுமாக தனது இருப்பிடத்திற்கு திரும்ப வரும்.

எதிரிகளை அச்சுறுத்தும் எறும்புகள் தங்களது சக்தியை அதிகம் வீணடிப்பது இல்லை. ஸ்லேவ் மேக்கர் வகை எறும்புகள் தன்னுடைய பலத்தை காட்டி உணவை திருடிவிடும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தன்னைத் தானே படம் எடுத்த குரங்கு



இந்தோனேஷியாவில் கமரா மூலம் தன்னைத் தானே ஒரு குரங்கு புகைப்படம் எடுத்துக் கொண்ட சுவையான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. வன விலங்குகளின் வாழ்க்கை முறையை புகைப்படம் எடுக்கும் புகைப்பட நிபுணர் டேவிட் ஸ்லாடர் கிரேசி என்பவர் அந்த நாட்டில் உள்ள காடுகளில் வனவிலங்குகளை புகைப்படம் எடுக்க தனது கமெராவை எடுத்துச் சென்றார்.

அந்தக கமராவை ஒரு இடத்தில் கீழே வைத்திருந்தார். அப்போது அங்கு வந்த ஒரு குரங்கு அந்த கமராவைத் திருடிச் சென்று தன்னைத் தானே புகைப்படம் எடுத்து கொண்டது.

நூற்றுக்கணக்கான புகைப்படங்களை எடுத்துள்ளது. மனிதர்களைப் போன்று லென்ஸ்சை சரி செய்து புகைப்படம் எடுத்தது. அதை பார்த்த டேவிட் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். பின்னர் அந்த குரங்கு அவரது கமராவைப் போட்டு விட்டு காட்டுக்குள் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

## வெற்றியாளர்களின் குழுவுடன் இணையுங்கள்

இலங்கை காப்புறுதித் துறையில் மிக துரிதமாக வளர்ச்சியினை முன்நோக்கி கொண்டு செல்லும் நிறுவனமாக MBSL காப்புறுதி நிறுவனம் திகழ்கிறது. இதன் பலதரப்பட்ட சேவையின் காரணமாக நாடளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களை வெகுவாய் கவர்ந்துள்ளது. இந்நிறுவனத்துடன் இணைய உங்களுக்கும் ஓர் மகத்தான வாய்ப்பு

### கிளை முகாமையாளர் - (ஆயுள் காப்புறுதி)

வவுனியா / யாழ்ப்பாணம் / மன்னார்

40 வயதுக்கு உட்பட்ட, 4 வருடங்கள் காப்புறுதித் துறையில் விற்பனை முகாமையாளராக பணியாற்றிய முன் அனுபவமும் மற்றும் ஆயுள் காப்புறுதி தொடர்பான சிறந்த தேர்ச்சி, CIM/SLIM அல்லது அதற்கு நிகரான கல்வித் தகமை இருத்தல் வேண்டும். காப்புறுதி தொடர்பான கல்வித் தகமைகள் மேலதிக திறமையாக கருதப்படும்.

### விற்பனை நிறைவேற்று அதிகாரிகள் (ஆயுள் காப்புறுதி)

வவுனியா / யாழ்ப்பாணம் / மன்னார் / கிளிநொச்சி

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆயுள் காப்புறுதித் துறையில் குறைந்தது 3 வருடங்கள் முன்அனுபவம் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியம், சலுகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். இது நிரந்தர பணிநிலை என்பது குறிப்பிடப்பட்டது.

நீங்களும் வெற்றியாளர் குழுவுடன் இணைய, உறவுமுறையற்ற 2 பிரமுகர்களின் விபரங்கள் அடங்கிய உங்களது சுயவிபரக் கோவையினை 7 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கக்கூடிய வகையில் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும் அல்லது tonyd@mbslinsurance.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். (இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிடவும்)

Human Resource Manager
MBSL Insurance Co. Ltd.
No. 388, Galle Road, Colombo 03.
Web: www.mbslinsurance.lk

## உடற்பயிற்சி அதிகமாவதும் ஆபத்தை ஏற்படும்

உடற்பயிற்சி அதிகமானால் மூளையில் , இரத்தக் கசிவு ஏற்பட்டு பக்கவாதம் ஏற்படும் அபாயம் உள்ளது என நெதர்லாந்தை சேர்ந்த நியூராலஜி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மூளைக்கு செல்லும் இரத்த குழாய்களின் சுவர்கள் வலுவிழக்கும்போது இரத்தம் கசிந்து பக்கவாதம் ஏற்படுகிறது.

இதற்கான காரணம் குறித்து நெதர்லாந்தின் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் நிபுணர் மானிக் எச்.எம்.விலாக் என்பவர் தலைமையில் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

இரத்த அழுத்தம் அதிகரித்து இரத்த குழாயில் கசிவு ஏற்பட்டு பக்கவாதம் ஏற்படுகிறது என ஆய்வு முடிவில் கூறப்பட்டுள்ளது.

## பெரிய விலங்கின் படிமங்கள் கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியாவின் குயீன்ஸ்லேண்ட் பல்கலைக்கழகம் மற்றும் அருங்காட்சியகத்தின் விலங்கியல் துறை நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் இணைந்து புளோரா பகுதியில் கடந்த ஆண்டு ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு எலும்பு கிடைத்தது. அது மார்சுபயல் வகையை சேர்ந்த டிப்ரோடாடன் விலங்கின் கால் எலும்பு என்று தெரியவந்தது.

அதே இடத்தில் மேலும் எலும்புகள் இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்ததால் அண்மையில் ஆய்வுப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. டிப்ரோடாடன் விலங்கின் மொத்த எலும்புக்கூடும் அதே இடத்தில் புதைந்திருந்தது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆய்வுக்குழு தலைவர் மைக்கேல் ஆர்கர் கூறியதாவது:

அவுஸ்திரேலியா உள்ளிட்ட இடங்களில் வாழ்ந்த டிப்ரோடாடன் விலங்கினம் கடந்த 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அழிந்துவிட்டது.

பெரிய கார் உருவில் இருந்த இது இலை, தழைகளை மட்டுமே சாப்பிட்டு வந்துள்ளது. மனிதன் வேட்டையாடி இவற்றை அழித்துள்ளான். இதுவரை பல முறை இவற்றின் எலும்புகள், படிமங்கள் கிடைத்துள்ளன. ஒரே இடத்தில் முழு விலங்கின் எலும்புக்கூடுகளும் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

லொறி, டிபர், ட்ரக் வாகனங்களுக்கு

லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது







பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத **லொறி, டிபர், ட்ரக்** கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.

CF
சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி
பிட்ச் ரேட்டிங்ஸ் A+ (lka)

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள [illegible] www.cf.lk & www.cfautomart.com

HOLMES POLLARD & STOTT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாயின் விசித்திரமான ஆடம்பர ஹோட்டல் பேர்ஜ்-அல்-அரப் !

ஐக்கிய அரபுராச்சிய மக்களின் விருந்தோம்பலின் சின்னம் பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டல் (Burj&Al&Arab Hotel) என வர்ணிக்கப்படுகின்றது. அரேபிய வளைகுடாவின் பாரம்பரிய கடல் வணிகத்தின் பாய்மர ஓடத்தை நினைவுகூரும் வண்ணம் இந்த நவீன ஹோட்டல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்துவருட கட்டுமானத்தின் பின்பு 1999 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட காலத்தில் இதுவே செயற்கை தீவிலமைந்த உலகின் மிக உயரமான கட்டடமாக இருந்தது. 650 மில்லியன் டொலர் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட இந்த அதிநவீன ஆடம்பர ஹோட்டல் தொடர்பிலான குறும் தகவல்கள்.

✱இதன் உயரம் 333 மீற்றர் (1,090 அடி) , இது ஜெமேரா கடற்கரையில் இருந்து 280 மீற்றர் (920 அடி) தூரத்தில் கடலில் செயற்கையில் அமைந்த தீவில் (கடலில் மனிதனால் உருவாக்கப்பட்ட தீவில்) அமைக்கப்பட்டுள்ளது.

✱ஒருவகைப் படகு அமைப்பில் இதன் வடிவம் அமைக்கப்பட்டுள்ளதுடன் இது 180 மீற்றர்கள் உயரத்தில் விசாலமான திறந்த வெளியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டல் பிரத்தியோக வளை பாலத்தினால் நிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

✱பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டல் இன் அடித்தளம் 236 அடி விடமும் 45 மீற்றர் ஆழமும் கொண்ட உருளை வடிவான கட்டிடப் பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✱பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டலின் கட்டுமானத்திற்காக 70,000 மீற்றர் சீமெந்து கலவையும் , 9,000 தொன் இரும்பும் பாவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 43,000 சதுர மீற்றர் கண்ணாடி, 13,000சதுர மீற்றர் மாபிள் (Carrara Marble), 12,000 சதுர மீற்றர் கிறனைற் (Brazilian Granite), 32,000 சதுர மீற்றர் மொசைக் (Italian Mosaic), 15,000 சதுர மீற்றர் தங்க இலை (24 carat gold leaf) என்பனவும் இந்த ஆடம்பரக் கட்டடத்தின் தேவைக்காக உபயோகித்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

✱இந்த ஹோட்டலின் வெளிப்புறப் பகுதியானது இரவுவேளையில் வர்ண விளக்கு போன்று தோற்றமளிக்கவென விசேட கண்ணாடியினால் உருவக்கப்பட்டுள்ளது கட்டடத்தின் உட்புற மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ''தண்ணீர் பீச்சி'' (Water Jet) 16 மாடிகள் உயரத்தை அடைந்து மீண்டும் நிலத்தில் வந்தடையும் வண்ணம் விஷேசமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

✱உலகில் மிக விலை உயர்ந்த ஹோட்டல் அறைகளை ( ஒரு இரவு தங்குதல் 1,000 டொலர் தொடக்கம் 28,000 டொலர் வரை பல ரகம்) கொண்டுள்ளது எனும் பெருமையை கொண்டுள்ளது.

✱பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டல் தன்னகத்தில் மிகச்சிறந்த உணவகம் , உள்ளக நீர்மூழ்கி சவாரி , அதி நவீன கடல்வாழ் உயிரியில் காட்சியகம் (990,000 லீற்றர் நீர் தடாகத்தில்) , மற்றும் ஆடம்பரப் பெழுதுபோக்கு வசதிகளையும் கொண்டுள்ளது. பேர்ஜ்-அல்-அரப் ஹோட்டல் (Burj&Al&Arab Hotel) டுபய் நாட்டிலுள்ள விசித்திரமான பல நவீன ஆடம்பர கட்டிடங்களில் ஒன்றாகும்

✱250 கட்டட வடிமைப்பாளர்களினால் உருவாக்கப்பட்ட இந்த ஆடம்பர ஹோட்டேலில் 1,200 முழுநேர பணியாளர்கள் வேலை செய்கின்றனர். மிகவும் புகழுக்குரிய ''பேர்ஜ்-அல்-அரப்'' உலகின் முதலாவது ஏழு நட்சத்திர ஹோட்டல் எனும் தகுதியைஇந்தக் ஹோட்டல் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது






## தாய்லாந்தில் கிளி வடிவத்தில் இருக்கும் அதிசய பூ

இந்த உலகில் ஒவ்வொன்றும் அதிசயம். அதிசயங்களுக்குப் பஞ்சமே வராது. அது போன்ற அதிசயங்களில் ஒன்றுதான் பறக்கும் கிளி வடிவத்திலான அதிசயப் பூ. இந்தப் பூ. வடிவத்தில் மட்டும் கிளிபோல் அல்லாமல் சிறகு, அலகு, உடல் என ஒவ்வொரு பாகமும் வெவ்வேறு வர்ணங்களில் இருப்பது பஞ்சவர்ணக் கிளியை நினைவுபடுத்துகிறது.

தாய்லாந்தில் காணப்படும் 'பேரட் பிளவர்' என்னும் இந்த அதிசயப் பூச்செடி அழியும் நிலையில் பாதுகாக்கப்படும் ஒரு செடியாக இருந்து வருகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

## வாடிக்கையாளர் சேவை நிலையம்

இப்போது கிழமையின் ஏழு நாட்களிலும்
இருபத்தி நான்கு மணி நேர 24/7
சேவையுடன்

## கட்டணமின்றிய அழைப்பிலக்க வசதி



மீள் வடிவமைக்கப்பட்ட புதிய தொழில்நுட்பத்துடன் கிழமையின் 7 நாட்களிலும் 24 மணி நேர சேவையை வழங்கும் எமது வாடிக்கையாளர் சேவை நிலையம் இப்போது கட்டணமின்றிய அழைப்பினை ஏற்படுத்துவதற்கான வசதியினை உங்களுக்கு வழங்குகின்றது.

உங்களது பணத்தையும் காலத்தையும் மீதப்படுத்திக்காண்டு உங்களது சகலவிதமான காப்புறுதிப் பிரச்சினைகளுக்கும் தெளிவான தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நாம் தயார்.

0112
0115
0117
0114

**357357**

கட்டணமின்றிய அழைப்பு வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு மேலுள்ள ஏதாவதொரு நிலையான தொலபேசியினூடாக உங்கள் வலையமைப்பின் குறியீட்டு இலக்கத்துடன் 357357 க்கு அழையுங்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2700 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கல் கதவு கண்டுபிடிப்பு

எகிப்து மற்று பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் சுமார் 2,700 ஆண்டுகள் பழமையான பிரமாண்டமான கல் கதவு கண்டுபிடித்துள்ளனர். லுக்சார் பகுதியில் உள்ள கர்னாக் கோயில் அருகில் இந்தக் கதவு புதையுண்டிருந்தது. இந்தக் கதவு நுமிபிய மன்னர்கள் வம்சத்தை சேர்ந்த ஷபாகா மன்னர் காலத்தில் பயன்படுத்தியதாக இருக்கலாம் என்று முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

பத்திரமாகத் தோண்டி எடுக்கப்பட்ட கல் கதவு, சேதம் ஏதுமின்றி நல்ல நிலையில் உள்ளது. இது மன்னரின் பொக்கிஷ அறைக் கதவாக இருக்கலாம் என்ற கணிப்பு உள்ளது.

கி.மு 750 - 656 க்கு இடைப்பட்ட சுமார் 2,700 ஆண்டுகள் பழமையான புதைபொருள், சிந்தாமல் சிதையாமல் நல்ல நிலையில் கண்டுபிடிக்கப்படுவது இதுவே முதன் முறை என்கின்றனர் ஆய்வுக் குழுவினர். பிரமாண்டமான கல் கதவு, அடுத்த பரம்பரை அல்லது எதிரிகளிடம் இருந்து எப்படிச் சேதப்படாமல் தப்பியது என்ற ஆச்சரியமும் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் உள்ளது.

இந்த அரிய கல்கதவு குறித்து ஆய்வாளர்கள் கூறியதாவது:-

மிகப் பிரமாண்டமானது மட்டுமின்றிப் புராதனமானதுமான இந்தக் கல் கதவு முழு அளவில் சேதம் ஏதுமின்றித் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இது சுமார் 2,700 ஆண்டுகள் பழமையானது என்பதற்கான சான்றும் உள்ளது. மன்னர் காலத்தில் பயன்படுத்திய இது பெரும் பொக்கிஷங்கள் இருந்த அறையின் கதவாக இருந்திருக்க வேண் டும்.

இதில் மிக அழகான கைவேலைப்பாடுகள், ஓவியங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள வேலைப்பாடுகளைப் பார்க்கும் போது இது கோயிலின் கதவாக இருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது. முழு ஆய்வுக்கு பின்னர் இதைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிலையான வைப்புகளுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதங்கள்

01 ஆண்டு 9.5%
03 ஆண்டுகள் 10%
05 ஆண்டுகள் 11%

ரூ.1 மில்லியனுக்கு மேற்பட்ட வைப்புகளுக்கு விசேட வட்டி வீதங்கள்

தலைமை அலுவலகம்: 15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2374100 www.unionb.com

யூனியன் வங்கி

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

மீண்டும் காப்புறுதியின் பெரிய போனஸ்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு ரூ. 340 கோடி



தி.எம். தில்ஷான்
இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர்

"ஆயுள் காப்பீடு என்பது முழு எதிர்காலத்திற்குமான முதலீடாகும். நிறுவனத்தின் மூலதன ஸ்தீரதன்மை காரணமாகவே நான் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸினை தெரிவு செய்தேன். இதனை சர்வதேச தரக் கட்டுப்பாடுகளும் உறுதி செய்துள்ளன"

RAM AA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SAMSUNG

# ஒரு வருட வெற்றிப்பாதையின் முன்னணியில்

எவருக்கும் பொருந்தும் உயர் தரத்திலான ஸேம்ஸங் ஃபோன்கள்.

## Samsung Tablet Range - It's Time to Tab

**Samsung GALAXY Tab7 P1000**
- அன்ட்ரொயிட்™ 2.3
- 3.5G Wi-Fi
- வொய்ஸ் / வீடியோ காலிங்
- ஃப்லேஷ் 10.1

ரூபா. 75,000/-

பயலொக்கின் புதிய சலுகைகளுடன் விரைவில் அறிமுகமாகும்

**Samsung GALAXY Tab 10.1 P7500**
- அன்ட்ரொயிட்™ ஹனிகோம்ப்
- HSDPA 21 MBPS
- 10.1" WXGA வைட் ஸ்கிரீன்
- 3MP AF கெமரா + 2MP ஃப்ரன்ட் கெமரா

ரூபா. 105,000/-

## Samsung Smart Phones - Truly future beyond

**Samsung GALAXY POP S5570**
- HSDPA 7.2 Mbps
- 3.14" QVGA டச் ஸ்கிரீன்
- 3MP கெமரா
- Wi-Fi மற்றும் GPS

ரூபா. 28,000/-

**Samsung GALAXY ACE S5830**
- HSDPA 7.2 Mbps
- 3.14" HVGA டச் ஸ்கிரீன்
- LED ஃப்லேஷ் உடன் 5MP AF கெமரா
- மேலதிக வெள்ளை உறை

ரூபா. 39,900/-

**Samsung GALAXY S I9000**
- 4.0" WVGA சுப்பர் அமோலெட் திரை
- 5MP AF கெமரா
- HD வீடியோ ப்லேயர் ரெகோடருடன்

ரூபா. 75,000/-

விரைவில் அறிமுகமாகும்

**Samsung GALAXY S II I9100**
- 4.3" சுப்பர் அமோலெட் ப்ளஸ்
- டுவல் கோர் 1.2GHz
- LED ஃப்லேஷ் உடன் 8MP AF கெமரா (2MP VT)
- ஃபுல் HD ரெகோட் மற்றும் ப்லேபெக்

ரூபா. 95,000/-

## Samsung Touch Range - i touch. i text. i do it all.

**Samsung Champ C3303**
- 1.3MP கெமரா
- 2.4" QVGA டச் திரை
- டுவல் லவ்ட் ஸ்பீகர்ஸ்
- 3.5mm ஜெக்

ரூபா. 10,900/-

**Samsung Champ DUOS E2652**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- 1.3MP கெமரா
- 2.6" QVGA டச் திரை
- மல்டி IM மற்றும் நேடிவ் SNS

ரூபா. 13,500/-

**Samsung Corby II S3850**
- 3.14" வைட் டச் ஸ்கிரீன்
- நேடிவ் SNS
- Wi-Fi
- T9 ட்ரேஸ் மூலம் க்விக்டய்ப்

ரூபா. 15,900/-

**Samsung Monte S5620**
- 3.5G உடன் VT கெமரா
- 3.6" WQVGA டச் ஸ்கிரீன்
- 3.2MP கெமரா
- Wi-Fi மற்றும் GPS

ரூபா. 21,900/-

## SAMSUNG DUOS Dual SIM - இரு உறவுகள் ஒரு கரத்தில்

விரைவில் அறிமுகமாகும்

**Samsung E1182**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- மெடலிக் டிஸைன்
- 1000 mAh பெட்டரி
- ப்ரைட் டோர்ச்

ரூபா. 3,990/-

**Samsung E 2152i**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- VGA கெமரா
- 2.0" QVGA திரை
- 3GP மற்றும் MP4 வீடியோ பாவனை

ரூபா. 6,990/-

**Samsung Ch@t 3222**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- க்வர்டி கீபோட் உடன் ஒப்டிகல் ட்ரெக்பேட்
- சமூக வலையமைப்பு
- Push E-Mail

விஷேட விலை
ரூபா. 11,400/-

**Samsung C6712**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- 3.2MP கெமரா
- 3.2" வைட் டச் ஸ்கிரீன்
- Wi-Fi

ரூபா. 18,900/-

## Samsung Multi Media - இன்பத்தில் மூழ்கிடுங்கள்

**Samsung METRO E2550**
- 1.3MP கெமரா
- பெரிய 2" QVGA திரை
- ஃபுல் மல்டிமீடியா சப்போர்ட்
- ஷோர்ட்கட் டூல்பார், ஸ்லைடிங் ஸ்லைடர்

விஷேட விலை
ரூபா. 8,900/-

**Samsung METRO 3530**
- 3.2MP கெமரா
- 2.2" QVGA திரை
- மெடலிக் எக்ஸ்டீரியர்
- இன்ஸ்டன்ட் மெசென்ஜர்

விஷேட விலை
ரூபா. 12,500/-

**Samsung METRO 3560**
- 2MP கெமரா
- 2.2" QVGA திரை
- மெடலிக் ஃபோல்டர் டிஸைன்
- நேடிவ் SNS
- இன்ஸ்டன்ட் மெசென்ஜர்

ரூபா. 12,900/-

## Samsung Hero Range - அனைவருக்கும் ஒரு துணை

**Samsung Hero 1085**
- அட்வான்ஸ் மொபைல் ட்ரெகர்
- 26 மணித்தியால FM ரேடியோ பாவனை
- 40 மணித்தியால ப்ரைட் டோர்ச்
- 12 மணி நேரம் பேசும் வசதி

விஷேட விலை
ரூபா. 2,990/-

**Samsung Hero 2230**
- VGA கெமரா வீடியோ ரெகோடருடன்
- ஃபுல் ஸ்கிரீன் வீடியோ ப்லேபெக் (MP4,3GP)
- 20MB உள்ளக மெமரி
- ப்ளூ டூத் 2.1
- 3.5mm ஜெக்

விஷேட விலை
ரூபா. 4,990/-

விரைவில் அறிமுகமாகும்

**Samsung Hero 2232**
- டுவல் சிம் ஸ்டேன்ட்பய்
- VGA கெமரா வீடியோ ரெகோடருடன்
- ஃபுல் ஸ்கிரீன் வீடியோ ப்லேபெக் (MP4,3GP)
- ப்ரைட் டோர்ச்

ரூபா. 5,990/-

**Samsung Hero 3213**
- 3.5G - HSDPA 3.6 MBPS
- பெரிய 2" QVGA திரை
- வீடியோ காலிங்
- இன்ஸ்டன்ட் மெசென்ஜர்

ரூபா. 8,900/-

Next is what?™
SAMSUNG mobile

**கையடக்க தொலைபேசிக்கு ஒரு வருட உத்தரவாதம் / பட்டரி சாஜர் மற்றும் இயர்ஃபோனுக்கு 6 மாத உத்தரவாதம்**

**தேசிய விநியோகஸ்தர்கள்** : வரையறுக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் ஒஃபிஸ் ஒடோமேஷன் (தனியார்) நிறுவனம், 90, யூனியன் ப்ளேஸ், கொழும்பு - 02, தொலைபேசி இல : 011 2 313 000, உடன் அழைப்பு : 0777 902 887, ஃபெக்ஸ் : 011 2 431 745, ஈ-மெயில் : samsung@jkoa.lk **ஸேம்ஸங் நுகர்வோர் சேவை நிலையம்** : கொழும்பு : வரையறுக்கப்பட்ட தஃபோன் கம்பனி இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம், இல 4, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு - 04, உதவி அழைப்பு : 0777 322 223/0777 595 595. **காலி** : 124 C, வக்வெல்ல வீதி, மினுவங்கொட, அழைப்பு : 0777 361 444. **கண்டி** : 174, கொடுகொடல்ல வீதி, அழைப்பு : 0777 487 447. ஈ-மெயில் support.srilanka@samsung.com **ஸேம்ஸங் தொ.பே அழைப்பு நிலையம்** : 011 7 347 070/011 7 348 080, **பிராந்திய விநியோகஸ்தர்கள்** : கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலிய மற்றும் கேகாலை : வரையறுக்கப்பட்ட சொஃப்ட்ரிங்ஸ் டெக்னொலஜிஸ் (தனியார்) நிறுவனம். - 0718 726 497. **கம்பஹா** : வரையறுக்கப்பட்ட செல்மார்ட் டெலிகொம் சேர்விசஸ் (தனியார்) நிறுவனம். - 0715 364 356. **புத்தளம்** : ஸ்டைல் ஹவுஸ் - 0716 313 313. **இரத்தினபுரி மற்றும் எம்பிலிபிட்டிய** : வரையறுக்கப்பட்ட குளோபல் சோன் (தனியார்) நிறுவனம். - 0722 301 022. **அம்பாறை** : வரையறுக்கப்பட்ட மொபிலிக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0718 000 888. **அநுராதபுரம்** : வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம். - 0714 893 708. **மட்டக்களப்பு** : வரையறுக்கப்பட்ட மெக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0715 358 654. **கல்முனை** : அல்பா வீடியோ - 0777 278 867. **குருநாகல்** : வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம். - 0715 346 938. **மொனராகல** : சுபர்டெக் ஒஃபீஸ் ஒடோமேஷன் - 0777 510 210. **யாழ்ப்பாணம்** : யுனிடெல் - 0750 386 067. **பொலன்னருவ** : மிட்லன்ட் எயார் டெக்னொலஜிஸ் - 0272 222 277. **பதுளை** : நஷனல் என்டர்ப்ரைசஸ் - 0772 337 666. **காலி** : தர்ஷன என்டர்ப்ரைசஸ் - 0777 266 199, **மாத்தறை** : வரையறுக்கப்பட்ட இன்ஃபோமேஷன் அன்ட் டேடா மனேஜ்மன்ற் சிஸ்டம் (தனியார்) நிறுவனம். - 0714 297 546. **திருகோணமலை** : யுனிவர் செல் மொபைல்ஸ் - 0775 556 868. **வவுனியா** : டி மொபைல் - 0777 401 777. **பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்** : **ஸேம்ஸங் மொபைல் சலுகை பங்காளர்** : [illegible] ப்ளேடினம் டவர்ஸ், 425, காலி வீதி, கொழும்பு 03, உடன் அழைப்பு 011 5 744 455, சிந்தன ஜிஎஸ்எம் (தனியார்) நிறுவனம், இல 101A, ஹைலெவல் வீதி, மஹரகம, உடன் அழைப்பு : 011 2 850 851, SINGER Mega மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட SINGER Plus அவுட்லெட், [illegible] நிறுவனம், 551, டி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10, உடன் அழைப்பு: 0115413413. நாடளாவிய அனைத்து ஸேம்ஸங் மொபைல் விற்பனையாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org